Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

*வெளியீடு :* 26-6-2015 Issued : 26-6-2015

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 27, 2015—தொகுதி 78—எண் 2**

**Friday the 27th March, 2015—Volume 78—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**27–3–2015**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. இரங்கற்குறிப்புகள்—**

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு 75-76

**2. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 76-128

**3. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 128

**4. அரசினர் தனித் தீர்மானம்—**

கர்நாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தவும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்கவும் கோரி மத்திய அரசை வலியுறுத்துதல் 129-178

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 129-145, 175-178

திரு. துரைமுருகன் 129, 146, 169-174, 176-177

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 145-147

திரு. அர. சக்கரபாணி 147

முனைவர் செ.கு. தமிழரசன் 147-151

திரு. உ. தனியரசு 151-153

*திரு. பி.வி. கதிரவன் 153-155

திரு. ஆ. நாராயணன் 155-157

டாக்டர் க. கிருஷ்ணசாமி 157-158, 175

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 158-161

திரு. அ. கணேஷ்குமார் 161-162

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 162-163

திரு. எம். ஆறுமுகம் 163-165

* திரு. க. பாலகிருஷ்ணன் 165-169

| | பக்கங்கள் |
|---|---|
| **5. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதம்—** | *178-255* |
| * திரு. எம்.கே. செல்வராஜு | *178-189* |
| செல்வி கே. பாலபாரதி | *189-199, 201-203, 207, 210-212* |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | *191-193, 203-206, 208-210, 225-229* |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | *193-194,196, 199-200,214-217* |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | *195,200-202, 230-231, 241-242* |
| மாண்புமிகு திரு. பி.வி. ரமணா | *196* |
| *மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | *197-199, 248-249* |
| திரு. எ.வ. வேலு | *213-225, 228-231, 233* |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | *212-213, 249* |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | *218-224, 250* |
| திரு. அ. சவுந்தரராசன் | *221* |
| திரு. மு.க. ஸ்டாலின் | *222* |
| திரு. அர. சக்கரபாணி | *223* |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | *232,245-246* |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | *233* |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | *234-235* |
| திரு. கார்த்திக் தொண்டைமான் | *235-239,* |
| திரு. கே. உலகநாதன் | *239-240 242-247, 249-250* |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | *240-241* |
| *மாண்புமிகு திரு. ப. மோகன் | *244* |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | *247-248* |
| *திருமதி ம. சக்தி | *251-255* |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | *256-257* |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு-2046

## 2015 மார்ச் 27, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
> தான்கண் டனைத்துஇவ் வுலகு"

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்கு, புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கோ. இளங்கோவன் அவர்கள் 7-3-2015 அன்றும், திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் 15-3-2015 அன்றும் மற்றும் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் 23-3-2015 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் அவர்கள் 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1977 முதல் 1980 வரையிலும் இரண்டு முறை திருவையாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் 1977 முதல் 1980 வரை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2015 மார்ச் 27

திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் 1977 முதல் 1980 வரை மேலூர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1991 முதல் 1996 வரை சோழவந்தான் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1993 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**61—**

### துணை மின் நிலையம்

***6858—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், தேவூர் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2015 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், தேவூர் பகுதிக்கு, சங்கரி 110/22 கி.வோ., குமாரபாளையம் 110/22 கி.வோ. மற்றும் பூலாம்பட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையங்களிலிருந்து தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருகிவரும் மின்பளுவைக் கருத்திற்கொண்டு, தேவூரில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியுடன் 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டு, வாரிய ஆணை எண் 33, நாள் 4-7-2013 அன்று அனுமதியளிக்கப்பட்டது. ரூபாய் 9 கோடியே 18 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கான அனைத்துப் பணிகளும் முடிவடையும் தருவாயில் உள்ளன. இத்துணை மின் நிலையம் இன்னும் ஒரு வார காலத்திற்குள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

முற்பகல் 10-05

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் தன்னிகரில்லா தலைவி மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வீற்றிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். தேசம் காக்கும் தலைமை நீங்கள் அம்மா! ஏழை மக்கள் ஏற்றம் பெற எண்ணில்லா திட்டம் தந்தது எங்கள் அம்மா! கண் இமை மூடி திறக்கின்ற நேரத்தில் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த எங்கள் தாயே! இந்தத் துணை மின் நிலையத்திற்கு ஆணை வழங்கப்பட்டு, விரைவாக இயக்கப்பட இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கூறினார்கள். அதற்காக என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர்

[2015 மார்ச் 27

அவர்களே, தேவூர் பகுதியில் ஏற்படும் மின் தடைகளை விரைந்து சரி செய்யவும், பொது மக்களுக்கான சேவைகள் துரிதமாகக் கிடைக்கவும் துணை மின் நிலையத்திலேயே பிரிவு அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, தேவை ஏற்படின், அங்கே பிரிவு அலுவலகம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான விவசாயப் பெருமக்கள் தங்களது பாசனக் கிணறுகளுக்கு சுய மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.10,000/- மற்றும் ரூ.25,000/- செலுத்தி, மின் இணைப்புக்காகக் காத்திருக்கின்றார்கள். அவ்வாறு காத்திருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு சுய மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் பாசனக் கிணறுகளுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பதிவு மூப்பு (seniority)



2015 மார்ச் 27]

அடிப்படையில், மின் இணைப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கணக்கிட்டு, அதற்கு ஏற்ற வகையிலே விவசாயிகளுக்குப் படிப்படியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகளை இன்னும் விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதிக்கு உட்பட்ட விக்கிரமங்கலம் கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. அதை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட விக்கிரமங்கலம் பகுதியில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அந்தப் பகுதியினுடைய மின் பளு மற்றும் தேவையைக் கணக்கிட்டு, தேவை ஏற்படின், அந்த 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு ஆய்வுகளின் அடிப்படையில், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு மின் இணைப்பு வழங்குகின்றபோது, ஏற்கெனவே இலவச மின் திட்டத்திற்கான பதிவு மூப்பு அடிப்படையிலே ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. பிறகு சுயநிதி மின் திட்டத்தின் கீழே ரூ.25,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.1,00,000/- செலுத்துபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்பு வழங்கப்படும் என்ற திட்டம் பதிவு மூப்பு அடிப்படையிலே வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த சுயநிதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இலவச மின் இணைப்புகளை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், அது அப்படியே கிடப்பில் போட்ட மாதிரி இருக்கின்றது. எனவே, அவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது முற்றிலும் தவறான செய்தி. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை, அது கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது என்று எந்த அடிப்படையிலே சொல்கின்றார் என்றே தெரியவில்லை. தற்போது, இலவச மின்சாரம் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கும் ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- பணம் கட்டி காத்திருப்பவர்களுக்கும், முன்னுரிமை அடிப்படையில், ஒவ்வொன்றிற்கும் பதிவு மூப்பு அடிப்படை கடைப்பிடிக்கப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இலவச மின்சாரத் திட்டத்திலும் seniority அடிப்படையிலே மின் இணைப்பு படிப்படியாக வழங்கப்பட்டுதான் வருகின்றது. அதேபோல, பணம் கட்டும் விவசாயிகளுக்கும் பதிவுமூப்பு முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எந்த ஒரு மின் இணைப்பையும் வழங்காமல், முற்றிலுமாக நிறுத்திவிடுவது இல்லை. அந்தப் பகுதியினுடைய மின் பளுவைக் கருத்தில்கொண்டு, படிப்படியாக இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத்தான் நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எந்த ஏரியாவிலும் மின் இணைப்பை நிறுத்துவதில்லை; நிறுத்தப்பட்டது என்பது தவறான தகவல். அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்னிணைப்பு வழங்குகின்ற பணியை, இலவச மின்சாரம் வழங்குகின்ற அந்தப் பணியை இன்னும் கொஞ்சம் துரிதப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## இரயில்வே மேம்பாலம்

***34354—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர்-குறிஞ்சிப்பாடிக்கு இடையே கன்னாரப்பேட்டையில் நடைபெறும் இரயில்வே மேம்பாலப் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர்-விருத்தாசலம், சேலம் சாலை கிலோ மீட்டர் 0/6-ல் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சேவைச் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்—குறிஞ்சிப்பாடிக்கு இடையே கன்னாரப்பேட்டையில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலப் பணியை விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்திருக்கிற, நாங்கள் நாளும் வணங்குகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், விருதுநகரிலுள்ள ராமமூர்த்தி சாலையில் மேம்பாலப் பணி கட்டுவதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்து, அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. கடந்த வாரம்கூட, இரண்டு தினங்கள் அந்தப் பகுதியிலே போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு, மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கியது. எனவே, அந்த மேம்பாலப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியை ஆய்வு செய்து, விரைந்து பணிகள் துவங்குவதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி, விருதுநகரில் இருப்புப் பாதை கடவு எண் எல்.சி.406-ல் அமைக்கப்பட்டுவரும் இரயில்வே சுரங்கப் பாலப் பணிகளை விரைவுபடுத்த மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, பாலப் பணிகளெல்லாம் விரைந்து நடப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதிகளிலும் விரைந்து பாலப் பணிகள் நடப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதி, குலவணிகபுரம் மேம்பாலம் தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, இப்போது ஒப்பந்தமும் முடிக்கப்பட்டு, இன்னும் பணி துவக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து, பணி தொடங்கி முடிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 57 இரயில்வே பாலங்கள் கட்டுவதற்கான அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். 2006-2011 வரை இருந்த தி.மு.க. ஆட்சியில் 32 பாலங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், 2011-2012, 2012-2013, 2013-2014 மற்றும் 2014-2015 ஆகிய நான்காண்டுகளில் 45 இரயில்வே மேம்பாலங்கள், கீழ் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை

மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்தைய ஆட்சியில் பாலம் அறிவிக்கப்பட்டு, இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை ஆய்வு செய்து, என்ன காரணத்திற்காக தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையெல்லாம் பரிசீலித்து, ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு பல வழிமுறைகள் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஒன்று, தள வரைபடம் தயாரித்தல், நேர்ப்பாடு ஒப்புதல் பெறுவதற்கு, இரயில்வே துறைக்கு அனுப்பவேண்டும். அதற்கு 3 மாதங்கள் ஆகும். இரண்டாவது, இரயில்வே வரைபடம் ஒப்புதல் பெறுவதற்கு ஆறு மாதங்கள் தேவை. நில எடுப்பு வரைபடம் தயாரிக்க 3 மாதங்கள்; பிரிவு 15(2)-ன்கீழ் அறிவிக்கை செய்வதற்கு 6 மாதங்கள்; பிரிவு 15(1)-ன்கீழ் அறிவிக்கை செய்வதற்கு 4 மாதங்கள்; மதிப்பீடு தயாரிப்பதற்கு 3 மாதங்கள்; மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் வழங்க 3 மாதங்கள்; அங்கு நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கும், பணம் வழங்க ஆணை வழங்குவதற்கும் 6 மாதங்கள்; அடுத்து பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றியமைப்பது, அந்தப் பாலப் பணிகளை மேற்கொள்ளும்போது அந்தப் பணி மேற்கொள்கின்ற இடத்திலிருக்கின்ற பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றியமைப்பதற்கு 3 மாதங்கள்; அதற்குப் பிறகு வரைபடம் வடிவமைப்பு தயாரிப்பதற்கு 6 மாதங்கள் ஆகும். மதிப்பீடு தயாரித்து தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க 3 மாதங்கள்; ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி முடிவடைந்து ஒப்படைப்பதற்கு 3 மாதங்கள்; அதற்குப் பிறகு பணி நடைபெறுவதற்கு 30 மாதங்கள் ஆகும். ஆக, இவற்றையெல்லாம் பின்பற்றித்தான் இந்தப் பாலப் பணியை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் தாண்டி, தனியார் நிலத்திலே அதற்குத் தேவையான நிலத்தினைக் கையகப்படுத்தும்பொழுது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றால், அது முடிவடைய எத்தனை ஆண்டுகளாகும் என்பதே தெரியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக காலதாமதம் ஏற்பட்டது என்பதையெல்லாம் ஆய்வு செய்து, விரைந்து அந்தப் பாலப் பணிகளை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## சிறு தொழில் மையம்

***43775—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சி, உலகம்மாள்புரத்தில் சிறு தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சி, உலகம்மாள்புரத்தில் சிறு தொழில் மையம் அமைப்பதற்குத் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், அங்கு சிறு தொழில் மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி சிட்கோ மூலமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா சிறப்புப்

[2015 மார்ச் 27

பொருளாதார மண்டலமாகக் கருதப்பட்ட அந்த இடம் வேலைவாய்ப்பு இல்லாமல், காலியாக இருந்துகொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னாலே தொலைக்காட்சியிலே, அந்தத் தொழில்நுட்பப் பூங்காவிலே தொழில் செய்வதற்காக வெளி நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்தியத் தமிழர்கள் 10,000 கோடி ரூபாயை முதலீடு செய்ய இருப்பதாக நான் டி.வி.யிலே பார்த்தேன். அதற்கு முயற்சியெடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் வழிகாட்டுதலின்படி ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சியில், உலகம்மாள்புரம், தோட்டாக்குடி, தோப்பூர், பாக்கியநாதபுரம், பத்திரிப்பாறை ஆகிய ஊர்களும் மற்றும் ஆ.சாத்தான்குளம் ஊராட்சி, ஆழ்வார்திருநகரி ஊராட்சி, பருத்திப்பாடு ஊராட்சி, பூலம் ஆகிய ஊராட்சிகளில் 30,000/-க்கும் மேல் மக்கள் வசிக்கிறார்கள். இப்பகுதி மக்கள் கூலித் தொழிலாளர்கள். இப்பகுதிகளிலே வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, பெரும்பாலான மக்கள் அருகிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று, அங்கேயே தங்கி கூலி வேலை செய்கிறார்கள். இதனால் குழந்தைகளைச் சரிவரப் படிக்க வைக்கமுடியாத ஒரு சூழ்நிலை. மேலும் படித்த இளைஞர்கள் விரும்பிய தொழிலைச் செய்ய முடியவில்லை.

நாங்குநேரி தொகுதி, தோட்டாக்குடி ஊராட்சியில் சிறு தொழில் மையம் அமைத்தால் வேலைவாய்ப்பு பெருகும். கூலித் தொழிலாளர்களின் கல்வி மற்றும் பொருளாதாரம் உயரும்; தொழில் வளர்ச்சி ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே இடம் கிடைக்கின்ற வாய்ப்பைப் பொறுத்து தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்கள். அவர்களுக்கு, சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. சரத்குமார் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.



2015 மார்ச் 27]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரம் இளைஞர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிற இந்தக் காலகட்டத்திலே, என்னுடைய மாவட்டத்திலுள்ள குளச்சலில், சிறு தொழில் வளர்வதற்கு வசதியாக சிறு தொழில் மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் குழுமம் அமைப்பது குறித்து குறிப்பிட்டார்கள். அங்கே தனியார் யாராவது முன்வருவார்களேயானால், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து அந்தக் குழுமம் அமைப்பதற்கு, தக்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 10-20

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் பேரூராட்சிக்கு நிகரான ஊராட்சி நாச்சியார்கோவில் ஊராட்சி. அந்த ஊராட்சியில் குத்துவிளக்கு உற்பத்தி செய்யும் தொழில் பிரதானமாக உள்ளது. இத்தொழில் சிறுதொழிலாகவும், பெருந்தொழிலாகவும், வியாபார ரீதியாக விளங்குகிறது. இங்கு தயாரிக்கப்படும் குத்துவிளக்குகள் உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே குத்துவிளக்குகள் அதிகம் உற்பத்தியாகின்ற ஊரும் நாச்சியார்கோவில்தான். ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்ற அந்த நாச்சியார்கோவிலில், குத்துவிளக்கு உற்பத்தித் தொழில் நசிந்து போகாமல் பாதுகாக்க, குத்துவிளக்கு உற்பத்தித் தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான நாச்சியார்கோவில் ஊராட்சியில் குத்துவிளக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஏற்கெனவே அந்தப் பகுதியிலே நடைபெறக்கூடிய குத்துவிளக்கு தயாரிக்கும் தொழிலுக்கு 'பூம்புகார்' மூலமாக பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு, அந்தத் தொழிலை மேம்பாடு அடையச் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், தொழிற்பேட்டை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார். 20 பேர் அங்கே தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நல்லரசு, தக்க நடவடிக்கைகள் எடுத்து, நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**64—**

## சொந்தக் கட்டடம்

***55251—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2015 மார்ச் 27]

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள ஜாப்ராபாத்-3 அங்கன்வாடி மையத்திற்கு புல எண் 563/19-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியா புகழும் சந்தியா தாய் மகளே! உங்கள் உள்ளம் ஒரு வெண்ணிற ஆடை; உங்கள் அரசியல் ஆசான் ஆயிரத்தில் ஒருவன்; நீங்கள் அன்புக்கு மட்டுமே அடிமைப் பெண்; உங்கள் வாய்மொழியே இன்று அரச கட்டளை; (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை எங்கிருந்தோ வந்தாள் என்று பேசுவர் எடுபிடிகள்; வந்தாளே மகராசி என்று வாழ்த்துவர் எளியர்; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வரும் வரை நம் நாடு திக்குத் தெரியாத காட்டில்; நீங்கள் வந்த பிறகோ புலர்ந்தது புதிய பூமி; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஏழைகள் வாழ்வில் இறைவன் ஏற்றிவைத்த ஒளிவிளக்கு; நல்லோருக்கு நீராகவும், தீயோருக்கு நெருப்பாகவும் இருப்பதால் நீங்களே நீரும் நெருப்பும்; (மேசையைத் தட்டும் ஒலி) எவரும் உங்கள் நிழலில் உள்ளவரை ராஜா வீட்டுப் பிள்ளை; உங்களை விட்டு விலகிச் சென்றாலோ அனாதை ஆனந்தன்! (மேசையைத் தட்டும் ஒலி) உங்களிடம் கையேந்திய கைகளுக்கெல்லாம் அன்னமிட்ட கை; அதனால்தான் அரசுத் தொட்டிலுக்குப் பிள்ளைகள் வருகின்றனர் உங்கள் அன்பைத் தேடி. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு சோதனைகள் பல வரலாம், எத்தனை சோதனைகள் வந்தாலும் அனைத்தையும் "சவாலே சமாளி" என்று சமாளிக்கும் உங்கள் பக்கம் தமிழக மக்கள் நிற்பார்கள்.

[2015 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியில் ஏழு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மூன்று மையங்களுக்கு மட்டுமே சொந்தக் கட்டடங்கள் இருந்தன. என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு மையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும் ஜாப்ராபாத் மைய எண் 3 மற்றும் பத்தாப்பேட்டை மைய எண் 6 ஆகிய இரு மையங்களும் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுமூலம் அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், வாணியம்பாடி தொகுதியில் மொத்தம் எத்தனை அங்கன்வாடி மையங்கள் உள்ளன என்பதையும், சொந்தக் கட்டடம் இல்லாத அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஜாப்ராபாத்-3 என்ற அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இருந்தாலும், இந்த நிதியாண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு, வாணியம்பாடி தொகுதியிலுள்ள கொத்தூர், மருத்துவர் காலனி, நேதாஜி நகர், நேதாஜி நகர் தர்கா தெரு, நேதாஜி நகர் மில்லர் தெரு மற்றும் நேதாஜி நகர் முத்துமாரியம்மன்கோவில் தெரு ஆகிய ஆறு இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு கட்டட நிருவாக அனுமதியும், ஒரு அங்கன்வாடி மையத்திற்கு 4,50,000 ரூபாய் நிதியொதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

மேலும், இந்த ஜாப்ராபாத்-3 என்கின்ற அங்கன்வாடி மையத்திற்கு முன்னுரிமை தந்து, இப்போதே அந்த அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணியை எடுத்துச் செய்வதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வாணியம்பாடி தொகுதியில் மட்டும் பழுதடைந்து இருக்கின்ற அங்கன்வாடி மையங்களைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, தற்போது 46 மையங்களில் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் உள்ள 580 அங்கன்வாடி மையங்களில் சிறிய பழுது நீக்கம் செய்வதற்கும், 62 மையங்களில் பெரிய பழுது நீக்கம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் அங்கன்வாடி மையங்களில் பழுது ஏற்பட்டிருந்தால், அதனையும் உடனடியாக சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலங்காயம் வட்டாரத்திலே மட்டும் 143 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 142 முதன்மை மையங்களும், ஒரு குறு மையமும் இதிலே அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டத்தைத் தந்து, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவருகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 27

**65—**

## கல்லூரிக் கட்டடம்

***22086—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராதாபுரம் தொகுதி, பணகுடியிலுள்ள மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நாள்தோறும் வணங்கும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, பணகுடியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, மனோ கல்லூரி என்றழைக்கப்படுகிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழு முடிவு செய்து, 6 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.*

*பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அரசால் ஆரம்பிக்கப்படுகின்ற உறுப்புக் கல்லூரிகளுக்கு மட்டும் அரசு நிதி வழங்குகிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரிகளுக்கு, அரசால் நிதி வழங்கப்படுவதில்லை. மேலும், அந்தக் கல்லூரியில் இரண்டே இரண்டு பாடப் பிரிவுகள் பி.ஏ. (ஆங்கிலம்) மற்றும் பி.காம். (வணிகவியல்) மட்டும் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதிலே, மொத்தம் 266 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.*

*அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்காக, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திடம் கருத்துரு கொடுக்கப்பட்டது. அங்கே நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக அருள்மிகு இராமலிங்க சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான*



2015 மார்ச் 27]

*இடத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, அரசு பரிந்துரை செய்தது. தற்போது அங்கு 5 ஏக்கர் நிலம் பார்க்கப்பட்டது. அந்த நிலத்தின் தற்போதைய வழிகாட்டி மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 65,55,780 ஆகிறது. அதைப்போல, சந்தை மதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 1,90,081 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பு, இதில் எது அதிகமோ, அதைத்தான் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை எடுத்துக்கொள்ளும். அந்தவகையிலே, வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஒரு ஏக்கருக்கு ரூபாய் 65,55,780 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி 5 ஏக்கர் நிலத்திற்கு 150 சதவிகிதம் என்கிறபோது ரூபாய் 3,27,78,900 ஆகிறது. ஆகவே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் முன்பு இருந்த சட்டத்தின்படி, 150 சதவிகிதமும், தற்போது மத்திய அரசாங்கம் கொண்டுவந்த சட்டத்தின்படி கிராமப்புறங்கள் என்றால் 400 சதவிகிதமும், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே, அந்த 5 ஏக்கர் நிலத்திற்கு ரூபாய் 13,11,15,600 தேவைப்படுகிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், 'அந்த நிதியை எங்களால் கட்ட முடியாது' என்று தெரிவித்திருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு தற்போது வாய்ப்பு இல்லை. வேறு இடம் இருக்கும்பட்சத்தில் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கல்வி கிடைக்கப்பெற்ற ஒருவன் எல்லாமும் பெற்றவனாகிவிடுகிறான்' என்றார் அண்ணல் அம்பேத்கர். 'தீண்டாமை என்னும் விஷத்தை முறிக்க கல்விதான் அருமருந்து' என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார். அந்தக் கல்வியை தாம் பெற்ற பிள்ளைகளுக்கு சமமாகப் பகிர்ந்து ஊட்டும் தாயாக, அதையும் உலகத் தரத்திலான கல்வியாக வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பாரத தேசத்தை மட்டுமல்ல; இப்பாரையே வியக்க வைத்திருப்பவர் நம் அன்னைத் திருமகளாம், அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2015 மார்ச் 27

இடைநிற்றல் இல்லா கல்வியை உருவாக்க, விலையில்லா பாடப் புத்தகம், நோட்டு, பென்சில், காலணிகள், பேதம் மறைக்க சீருடைகள், தூரம் கடக்க மிதிவண்டி, உலகத்தை உள்ளங்கைக்குள் அமர்த்த மடிக்கணினி என அனைத்தையும் அள்ளித் தந்து, அறிவுப் பயிரை செழிக்க வைக்கும் கருணைத் தாயே! கல்விக்கு கடவுள் யார் என்று கேட்டால், நாளைய தலைமுறை பூவில் வீற்றிருக்கும் சரஸ்வதியைச் சொல்லாது; (மேசையைத் தட்டும் ஒலி) ஈரிலையால் வீற்றிருக்கும், இரக்கத்தின் வடிவமான சாதனைத் தாயைத்தான் எங்கள் கலைமகள் என்று சங்கத் தமிழ் சத்தியமாய் சொல்லும் என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்'

என்றார் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர். ஆனால், செவிக்கும், வயிற்றுக்கும் சேர்த்தே அன்னத்தோடு அறிவுசார் கல்வியையும் பிசைந்து ஊட்டுகிறவர் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மண்ணிலிருந்து இல்லாமையை, கல்லாமையை, வேலை இல்லாமையை, ஆக மொத்தத்தில் ஆமைகள் அனைத்தையும் அப்புறப்படுத்தி, அருந்தமிழ் மண்ணை, அன்னையர் தேசத்தின் முதன்மை மாநிலமாக முன்னிறுத்திய பெருமையை உங்கள் பொற்கரங்கள் செய்து முடித்திருக்கிறது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, இந்த மண்ணாளும் மகராசியே, நீங்கள்தான் இனி எந்நாளும் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாதான் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூர் யூனியனுக்குச் சொந்தமான சுமார் 50 ஏக்கர் நிலம் பணகுடியில் இருக்கின்றது. அதில் 5 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, இந்த ஆண்டிலேயே கட்டடம் கட்டித் தந்தால், இன்னும் நிறைய மாணவர்கள் உயர் கல்வி பயில்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறோம். ஏனென்றால், போதிய இட வசதி இல்லாததால்தான் அக்கல்லூரியில் இரண்டு பாடப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. அக்கல்லூரியில் சுமார் 250 மாணவர்கள் பயில்கின்றார்கள். அதன் அருகிலுள்ள ஏராளமான கிராமங்களில் ஏழையெளிய மாணவர்கள் இருக்கின்றார்கள்.



2015 மார்ச் 27]

அவர்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் மூலமாக கல்வியை இலவசமாகப் பயில்வதற்கு ஓர் அருமையான வாய்ப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடத்தைக் கையகப்படுத்தி, உடனடியாக கட்டடம் கட்ட முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில்தான், இன்றைக்குத் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த வகையில், உயர் கல்வித் துறையையும் முதன்மைத் துறையாக உருவாக்கவேண்டும் என்று, இதுவரை இல்லாத அளவில், தமிழகத்தில் அரசு சார்பாக 53 கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. தமிழகம் உயர் கல்வியில் ஓர் உன்னத நிலையை அடைந்திருக்கின்றது. அந்தப் பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் மனோ கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் இல்லை என்ற குறையைப் போக்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த நிலங்களை எடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்று ஆராய்ந்து, வாய்ப்பு இருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரைக்கப்படும். மேலும், அங்கேயிருக்கும் மாணவ, மாணவியர் உயர் கல்வி பயில்வதற்காகவும், அவர்களின் கல்வித் தரம் உயர்வதற்காகவும், அங்கே நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு அறிவுறுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

முற்பகல் 10-35

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசையன்விளையிலும் ஒரு மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகின்றது. அதனை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஆய்வு செய்தார்கள். அங்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் இல்லாததால், திசையன்விளை பேரூராட்சியில் எனக்குச் சொந்தமான 5.3 ஏக்கர் இடத்தை நான் இலவசமாக கடந்த ஆண்டே எழுதிக் கொடுத்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடத்திலும் இன்னும் கட்டடம் கட்ட ஆரம்பிக்கவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் அதற்கும் உடனடியாகக் கட்டடம் கட்ட முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், திசையன்விளை மற்றும் பணகுடி ஆகிய பகுதிகளிலுள்ள இரு கல்லூரிகளுமே அவர்கள் தொகுதியைச் சார்ந்த கல்லூரிகளாகும். அதேபோல், திசையன்விளை கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டவேண்டும் என்று அந்த இடத்தை ஆய்வு செய்தபோது, அதற்கான நிலம் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க, நானும் அங்கே சென்று இடத்தைப் பார்வையிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கே கட்டடம் கட்டுவதற்கு 5 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு அறிவுறுத்தி, கூடிய விரைவிலே அங்கே கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு மக்களின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும்



என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**66—**

## புதிய கட்டடம்

***28812—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், கழுவன்குளத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமமே வடிவாக, தமிழகம் செய்த தவப்பயனாக மாமழையாய் வந்திறங்கி, தேன்தமிழ் தேசத்தைக் குளிர்விக்கும் புரட்சித் தாயே, பூமியின் மாதாவே, தாயே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி தங்களின் திருப்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டத்திலுள்ள கழுவன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு, 1985 ஆம் ஆண்டு 1,200 சதுர அடி நிலப்பரப்பில் கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. அக்கட்டடம் பழுதடைந்ததால், தற்போது கழுவன்குளம் கிராமத்திலுள்ள கலையரங்கக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து

வட்டியில்லாக் கடனாக ரூ.9,76,635/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3-8-2014 அன்று கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, கட்டடப் பணி நிறைவுறும் நிலையிலுள்ளது. எனவே, விரைவில் உரிய கட்டடத்தில் சங்கம் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயத் துடிப்பே! நாடு போற்றும் நட்சத்திரமே! தாழும் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்தவரே! முரட்டுத்தன முதியவரை மூலையில் அமரச் செய்தவரே! வரலாறு காணாத வெற்றியைக் கண்ட வெற்றித் தலைவியே! எங்கள் அன்னையே! மக்கள் முதல்வரே! டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட கழுவன்குளம் கிராமத்திலிருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் காஞ்சிரங்குளம், முக்குடி, பொட்டப்பாளையம், புலியூர், சொட்டதட்டி போன்ற ஐந்து ஊராட்சிப் பகுதிகளில் கிட்டத்தட்ட 19 கிராமங்களை உள்ளடக்கிய சங்கம். இந்தச் சங்கத்திற்கு கட்டடம் கட்டவேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தவுடன், கட்டடங்களைக் கட்டிக் கொடுத்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொண்டு, அந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு உரக் கிடங்கையும் கட்டித் தர வேண்டுமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தச் சங்கத்திற்கு 100 மெட்ரிக் டன் அளவு கொண்ட ஒரு ஊராட்சிக் கிடங்கு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

## தங்கும் விடுதி

***41108—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூரிலுள்ள அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், எங்கள் கண்கண்ட தெய்வம், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூரில் அமைந்துள்ள அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலின் தென்புறம் திருக்கோயிலுக்குச் சொந்தமான பக்தர்கள் தங்கும் விடுதி ஏற்கெனவே உள்ளது. இவ்விடுதியே பக்தர்களுக்குப் போதுமானதாகவும் உள்ளது. எனவே, புதிதாக தங்கும் விடுதி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில். திருவாடுதுறை ஆதீனத்தினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தக் கோயில், திருநாவுக்கரசர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற பெரிய சமய அருளாளர்களால் பாடப்பட்ட ஒரு திருத்தலம். அருணகிரிநாதர் மற்றும் பட்டினத்தார் போன்றோர் வந்து, தங்கி, தரிசித்து பாடல் அருளிய ஒரு திருத்தலம். சோழர் காலத்தில் கட்டப்பட்ட, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான ஓர் அற்புதமான திருக்கோயில். திருவாடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தருமபுரம் ஆதீனம் என்று சைவமும், தமிழும் இணைந்து வழங்குகிற, அந்த ஆதீனங்களின் உள்ளத்தில் மையப் பகுதியாக இருக்கிற கோயில் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில். உப்பிலியப்பன் கோயில், திருமணஞ்சேரி மற்றும் நவக்கிரகங்கள் என்று சொல்லப்படுகிற சூரியனார் கோயில், கஞ்சனூர், ராகு ஸ்தலம் திருநாகேஸ்வரம் போன்ற நவக்கிரகக் கோயில்களுக்கு வரக்கூடிய பக்தர்கள் கட்டாயம் வந்து தரிசிக்க வேண்டிய கோயிலாகவும் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில் இருக்கிறது. இங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து போகிறார்கள். இன்னும் சொல்லவேண்டுமென்றால், சட்டமன்றப் பேரவையினுடைய முன்னாள் உறுப்பினர், தொழிலதிபர், பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களுடைய தாயும், தந்தையும் குழந்தை இல்லாத நிலையில், அந்தத் திருக்கோயிலுக்கு வந்து சென்ற காரணத்தால்தான், அவர் பிறந்தார் என்றும், அதன் காரணமாகத்தான் அந்த சுவாமியின் பெயரையே அவருக்கு வைத்ததாகவும்கூட ஒரு கருத்து நிலவுகிறது. எனவே, ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தங்குவதற்குப் போதுமான இட வசதி இல்லாத நிலையில் இருக்கக்கூடிய அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் அவசியம் தங்கும் விடுதி கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். திருவிடைமருதூரில் தனியார் தங்குவதற்குக்கூட, தனியார் தங்கும் விடுதிகள் இல்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்து, தங்கும் விடுதி அவசியம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களுடைய நலன் காப்பதில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முன்னோடி என்பதனை நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசு, பக்தர்களின் தேவையை அறிந்து அனைத்துத் திருக்கோயில்களிலும் தேவையான வசதிகளைச் செய்து தர தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான, திருவிடைமருதூர் அருள்மிகு பிரகத சுந்தர குஜலாம்பாள் சமேத மகாலிங்கசுவாமி திருக்கோயிலில், ஏற்கெனவே உள்ள தங்கும் விடுதி பக்தர்களுக்குப் போதுமானதாக உள்ளது. அதில் 4 அறைகள் உள்ளன; ஒரு பெரிய ஓய்வுக் கூடம் உள்ளது; இதில் சுமார் 30 பக்தர்கள் வரை தங்குவதற்கு மின் வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி ஆகியன செய்துதரப்பட்டுள்ளன. மேலும், புதிதாக ஓய்வறை கட்டுவதற்குத் தேவையான நிலப்பரப்பு ஏதும் அந்தப் பகுதியில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கோயிலின் பக்கத்தில் இருக்கிற ஸ்தலங்களின் பெருமைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். கும்பகோணத்திலிந்து 8-வது கிலோ மீட்டரில் திருவிடைமருதூர் அமைந்திருக்கிறது. கும்பகோணத்தைச் சுற்றியிருக்கிற திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், அருள்மிகு உப்பிலியப்பன் திருக்கோயில், திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருத்தலங்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்குத் தேவையான தங்கும் விடுதி ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன, இன்னும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களின் வருகை அதிகமாக இருப்பதால், அதனடிப்படையில் அங்கே தங்கும் விடுதி தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குப் போதுமான இடவசதி இல்லை என்று சொன்னாலும், பக்கத்திலே தங்குவதற்கு

[2015 மார்ச் 27

வசதியிருக்கிறது. ஒரு பக்கத்திலே கும்பகோணம் இருக்கிறது, மற்றொரு பக்கத்திலே மயிலாடுதுறையும் இருக்கிறது. வருங்காலத்தில், தேவையின் அடிப்படையில், முன்னுரிமையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்கு அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் இரவு தங்கி, காலையில் அந்தப் பூஜைகளில் கலந்து கொண்டால் பலன் கிடைப்பதாக, பல்லாயிரம் ஆண்டுகளாக ஐதீகத்தின் அடிப்படையில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, கும்பகோணத்திலேயோ, திருநாகேஸ்வரத்திலேயோ, சுவாமி மலையிலேயோ தங்கி காலை நேர பூஜையில் வந்து கலந்துகொள்வதில் பக்தர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, அங்கேயே தங்கி, காலை நேர பூஜையில் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால்தான், அங்கே தங்கும் விடுதி வேண்டுமென்று கேட்டேன். அங்கே போதுமான இட வசதி இல்லை என்கிற காரணத்தால், விடுதி கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். திருவிடைமருதூர் தொகுதியில் 100-க்கு 75 சதவிகிதம் கோயிலுக்கும், மடத்திற்கும் சொந்தமான இடங்கள்தான் உள்ளன. எனவே, இட வசதி இல்லை என்கிற கருத்து ஒருபுறம் இருந்தாலும், முத்தூர், ஆண்டலாம்பேட்டை, மகாஜனவீதி, வண்ணகுடி, பருத்திக்குடி, படைத்தலைவன்குடி போன்ற பல்வேறு ஊர்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. எனவே, அரசு முன்வந்து இதுகுறித்து ஆதீனத்திடம் கலந்துபேசி, உரிய முறையில் அங்கே அதைக் கட்டித்தருவதற்கான வாய்ப்பும் உண்டு.

அதுமாத்திரமல்ல; கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் 400 டன் எடையுடைய திருத்தேர் சுற்றிவரக்கூடிய வகையில், இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டது.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்; உட்காருங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** 100 மீட்டர் தூரத்திற்கு இன்னும் சாலை போடப்படாமல் இருக்கிறது. அதை அமைத்துத் தருவதற்கு, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியையும் கேட்டிருக்கிறார்கள். அதனை அமைப்பதற்கு கிட்டத்தட்ட 30, 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அங்கே தங்கும் விடுதி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்கிற அதே நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், அதற்கான இட வசதி இருக்கின்றது என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சியில் 90 சதவிகிதம் நிறைவேற்றிய நிலையில், 10 சதவிகிதம் நிலுவையாக இருக்கிற அந்த 100 மீட்டர் சாலையை அமைத்துத் தருவீர்களா? அதை அமைத்துத் தருவதற்கு முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக இருந்தால், அவருக்கு அந்த ஊரைப் பற்றிய நிலவரம் தெரியாது என்று கருதுவேன். ஆனால், தற்போது உள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் தஞ்சை மாவட்டத்தை ஒட்டிய திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்தவர். எனவே, அங்குள்ள நிலவரத்தை அவர் நன்றாக அறிந்து, புரிந்திருக்கிற காரணத்தால், கண்டிப்பாக சாலை வசதியையும், தங்கும் விடுதியையும் உருவாக்கித் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வ நம்பிக்கையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாகவே சொல்லியிருக்கிறார். அந்த நம்பிக்கை அவருக்கும் இருந்தால், அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

[2015 மார்ச் 27

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்விக்கு, இப்போது திருவிடைமருதூரிலே தேவையில்லை; அங்கே தேவையான அளவில் போதுமான கட்டட வசதி இருக்கின்றது; தங்கும் வசதி இருக்கின்றது என்பதைத்தான் நான் அவருக்குப் பதிலாகச் சொன்னேன். வருங்காலத்திலே இதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்ற பதிலையும் நான் அவருக்குச் சொல்லியிருக்கிறேன்.

அதைப்போல, தேர் சுற்றி வருகிற பாதையைப் பற்றிய ஒரு கருத்தையும் இங்கே அவர் சொன்னார். கடந்த கால ஆட்சியிலே செய்யப்பட்ட தேருக்குப் பாதை வேண்டும்; சாலை அமைத்துத் தர வேண்டுமென்று சொன்னார்கள். திருத்தேர் என்று சொல்கிறபோது, நான் மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றை இந்த அவையின் மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். திருத்தேர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் 115 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி 115 திருத்தேர்களைச் சீரமைத்து, தேரோட்டம் நடத்திய தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் இந்த அவைக்குப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருத்தேர் பணிகள் முழுமையாக முடிவு பெறாமல், வெறும் 16 திருத்தேர்கள்தான் அன்றைக்கு சரி செய்யப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பக்தர்களுடைய தேவைகளையெல்லாம் நன்கு அறிந்து, அதற்குரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுப்பதற்கு எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் பக்தர்களுடைய தேவைகளை அறிந்து, உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2015 மார்ச் 27]

**68—**

## அச்சுக் காகித விலை

***51079—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அச்சுக் காகித விலையைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அச்சுக் காகிதத்தினுடைய விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் முதல், 5 ஆயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முற்பகல் 10-50

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செயலகத்தில் கொடுக்கப்பட்டு, இப்போது வந்திருக்கின்றது. இந்தக் கேள்வி கேட்டதனுடைய நோக்கம், நிச்சயமாக இந்த அச்சுக் காகிதங்கள், புத்தகங்கள் தயாரிப்பதற்கும், மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதற்கும் உதவுகின்றன என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். தமிழகத்திலே, மக்கள் மத்தியிலே புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்கிற ஆர்வம் மிகுதியாக இருக்கின்றது. அதற்கு எடுத்துக்காட்டாக சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறக்கூடிய புத்தகக் கண்காட்சியில் 10 கோடி ரூபாய்க்கும், அதேபோன்று, இராமநாதபுரம் உள்ளிட்ட மற்ற மாவட்டங்களில் நடைபெறக்கூடிய புத்தகக் கண்காட்சியில் 30 கோடி ரூபாய்க்கும்

[2015 மார்ச் 27

புத்தகங்கள் விற்பனையாகின்றன. ஆனால், கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக பல்வேறு காரணங்களினால் காகித விலை ஏறத்தாழ 50 முதல் 60 விழுக்காடு உயர்ந்திருக்கிறது. இதன் காரணமாக கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு 80 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் 35 ரூபாய்க்கு விற்றது; இன்றைக்கு ஏறத்தாழ 70 ரூபாய்க்கு விற்பனை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புத்தகங்களுக்கு விற்பனை வரியை அறிவித்துவிட்டு, பிறகு உடனடியாக அந்த வரியை விலக்கிக் கொண்டார்கள். எனவே, புத்தகங்களுக்கு விற்பனை வரி இல்லை. என்னுடைய கோரிக்கை என்னவென்றால், புத்தகங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமூகத்தில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் நிச்சயமாக உதவிகரமாக இருக்கின்றன. எப்படி R.N.I.-ல் இந்திய செய்தித்தாள் பதிவாளர்களிடம் பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளுக்கான காகிதம் வாங்குவதற்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறதோ, அதேபோல, அங்கீகரிக்கப்பட்ட பதிப்பாளர்களுக்கும், நோட்டுப் புத்தகம் தயாரிப்பாளர்களுக்கும் Tamilnadu Newsprint and Papers Limited-TNPL நிறுவனத்திடமிருந்து ஒரு குறிப்பிட்ட (quota) அளவிற்கு அச்சுக் காகிதங்களைச் சலுகை விலையில் அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வினா இரண்டு வருடங்களுக்கு முன்னால் எழுப்பப்பட்ட வினா என்று குறிப்பிட்டார்கள். இதுகுறித்து பதிவேடுகளில் சரிபார்த்தபொழுது 30-6-2014 அன்றுதான் இந்த வினாவையே கொடுத்திருக்கிறீர்கள். எனவே, காலதாமதம் ஆகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுக் காகிதங்களின் விலை உயர்விற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே எடுத்துக் கூறினார்கள். அதில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், இப்பொழுது மரக்கூழ் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. நிலக்கரி மற்றும் இரயில்வே போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்ந்த காரணங்களினால், காகித விலையும் அதிகமாகியிருக்கிறது. இருந்தாலும், உலக அளவில்



2015 மார்ச் 27]

இப்பொழுது மந்த நிலை நிலவுகின்ற காரணத்தினால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு டன் ஒன்றுக்கு ரூ.4,000/- முதல் ரூ.5,000/- வரை விலை குறைக்கப்பட்டிருக்கிறது. டன் ஒன்றுக்கு ரூ.66,000/- முதல் ரூ.68,000/- வரை விற்கப்பட்டது; இப்பொழுது டன் ஒன்று ரூ.62,000/- வரை குறைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட அனைத்து ஆலைகளிலும் 100 டன் முதல் 1,000 டன், 5,000 டன் வரை காகிதங்கள் stock வைத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு இப்பொழுது மந்த நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு விலை உயரவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று, வரி விலக்கைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். வரி விலக்கிற்கும், இந்த வினாவிற்கும் சம்பந்தமில்லை. இருப்பினும், இது வேறு துறை சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தினாலும், இது கொள்கை அளவில் முடிவு எடுக்கப்படவேண்டும் என்பதாலும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இரண்டு காகித ஆலைகளுக்கு ஆய்வு செய்யச் சென்றிருந்தோம். ஒன்று, நாமக்கல் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சேஷசாயி காகித ஆலை. மற்றொன்று, கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய TNPL காகித ஆலை. Public Sector என்று சொல்லக்கூடிய பொதுத் துறை நிறுவனங்கள் இலாபகரமாக செயல்படுவதில்லை, திறனுடன் செயல்படுவதில்லை என்று ஒரு பொதுவான குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. ஆனால், எங்களுடைய ஆய்வில், 1979 ஆம் ஆண்டு பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் பெருமுயற்சியால் நிறுவப்பட்ட கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் அமைந்துள்ள TNPL நிறுவனம், சேஷசாயி காகித ஆலையைவிட மிகச் சிறப்பான முறையில், மிகத் தரமான முறையில், (மேசையைத்

தட்டும் ஒலி) மிக உயரிய தொழில்நுட்பத்துடன் செயல்படுவதைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தோம். இன்று இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய TNPL ஆண்டறிக்கையில், அந்த நிறுவனம் 2013-2014 ஆம் ஆண்டில் 161.18 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது என்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், உள்ளூர் தேவைக்கு மட்டுமல்லாமல், ஏற்றுமதிக்காக 65,875 மெட்ரிக் டன் அளவிற்கு காகித ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் என்ற தகவலும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மும்பையைச் சேர்ந்த Dun & Bradstreet நிறுவனம் தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியாவின் தலைசிறந்த காகித உற்பத்தி நிறுவனம் என்ற சிறப்பை TNPL நிறுவனத்திற்கு அளித்திருக்கின்றது.

என்னுடைய வினா என்னவென்றால், இந்த நிறுவனத்தின் சார்பாக திருச்சி மாவட்டத்தில் multi-layer, double coated board plant என்ற hard paper போன்ற தரமான காகிதங்களை உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் இருக்கிறது. அந்த ஆலை எப்பொழுது உற்பத்தியைத் தொடங்கும் என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிருவாகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத்தான் நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்திய அளவிலேயே இல்லாத அளவிற்கு ஒரு சிறப்பான காகித ஆலையாக TNPL செயல்பட்டு வருவதாகப் பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குக் கூடுதலாக ஒரு தகவலைச் சொல்கின்றேன். 161 கோடி ரூபாய் என்பது வரிக்கு பிந்தைய இலாபம், வரிக்கு முந்தைய இலாபம் என்று சொன்னால், இதுகாறும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அந்நிறுவனம் 202 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலத்தில் இதற்குமேல், 210 கோடி ரூபாயிலிருந்து 220 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் வரும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அந்த





வகையில்தான் ஸ்ரீரங்கம் தொகுதியில், முண்டிப்பட்டி பகுதியில் 1,500 கோடி ரூபாய் செலவில் Double coated board என்று சொல்லக்கூடிய ஈரடுக்குகள் கொண்ட காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியபோதே, 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்த ஆலை இயக்கப்படும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் 2015 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திற்குள் அந்த ஆலை திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

## சிற்றுந்து வசதி

***48057—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, துடியலூர் முதல் மருதமலை வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தடம் எண் 123-ஏ பேருந்து மருதமலை SITRA வழி துடியலூர்மூலம் தினசரி 14 நடைகளும், தடம் எண் 123-பி பேருந்து மருதமலை SITRA வழி துடியலூர்மூலம் தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

[2015 மார்ச் 27

அதேபோல், துடியலூர்-மருதமலை வழித்தடத்தில் இரண்டு தனியார் சிற்றுந்துகளும் துடியலூர்-வடவள்ளி வழித்தடத்தில் இரண்டு தனியார் சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வடவள்ளி-மருதமலை வழித்தடத்தில் பயணிகளுடைய அடர்வு 47% மட்டுமே உள்ளது. எனவே, கவுண்டம்பாளையம் தொகுதி, துடியலூர் முதல் மருதமலை வரை அரசு சிற்றுந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் மக்கள் தலைவி, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட துடியலூர் பகுதியிலிருந்து மருதமலைக்கு பேருந்து இயக்க வேண்டுமென்று என்னுடைய கேள்வியில் கேட்டிருந்தேன். தனியார் சிற்றுந்து இயக்கப்படுகிறது. ஆனால், அது சரியான நேரத்தில், சரியான வழித்தடத்தில் இயங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றார்கள். ஆகவே, சரியான வழித்தடத்தில், தனியார் சிற்றுந்து இயக்கப்படவில்லை என்ற காரணத்தினால், அரசு சிற்றுந்து சேவையை அங்கு வழங்கினால், பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய துடியலூர் முதல் மருதமலை வரை ஏற்கெனவே அரசுப் பேருந்துகள்மூலம் 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன, அந்த 18 நடைகளில் பயணிகளின் அடர்வு 47% மட்டுமே உள்ளது; 50%-க்கும் குறைவாகத்தான் இருக்கின்றது. பயணிகள் போதிய பேருந்து வசதிகளைப் பெற்று வருகின்றார்கள். தனியார் நிறுவனங்களின் மூலம் இயக்கப்பட்டு வருகின்ற அந்த சிற்றுந்து களையெல்லாம் 2014-2015 ஆம் ஆண்டு, பிப்ரவரி வரை 18,360 முறைகள் சோதனை செய்து, 1,407 சிற்றுந்துகள் மீது சோதனை அறிக்கை வழங்கப்பட்டு, அதில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 116 சிற்றுந்துகள்மீது துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, உத்தரவின்படி, கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவதற்குத் துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

**பாலம் கட்டுதல்**

***5835—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சி, கோடங்கி சின்னாள்பட்டி சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழே

தன் உயிராய், தமிழகமே தன் உணர்வாய், தமிழக மக்களே தன் உள்ளமாய், தமிழ்நாட்டின் முன்னேற்றமே தனது இலட்சியமாய், உண்ணாது, உறங்காது, உழைப்பைத் தவிர வேறொன்றும் அறியாது, தமிழ்நாட்டைக் காத்து நிற்கும் எங்கள் தங்கத் தலைவி, மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்கி எனது விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சி, கோடங்கி, சின்னாள்பட்டி சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாலம் அமைக்கும் பணிகள் முடிவடைந்து, அதற்கான அணுகுசாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, அய்யலூரிலிருந்து கோடங்கி-சின்னாள்பட்டி செல்லும் சாலையில் குறுக்கிடும் வரட்டாற்றில் மழைக்காலங்களில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பொது மக்களும், பள்ளி மாணவ-மாணவிகளும் பெரும் சிரமப்பட்டு வந்தார்கள். சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் வரட்டாற்றில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் அடிப்படையில் இக்கேள்வி கேட்கப்பட்டு, அவையில் எடுத்துக்கொள்ளும் முன்பே, தாய் தன் குழந்தைகளின் தேவையைக் குறிப்பறிந்து நிறைவேற்றுவதுபோல், மாண்புமிகு மக்களின் முதல்வர்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறும் இந்த நல்லரசு, மக்களின் தேவையைக் குறிப்பறிந்து, இந்தப் பாலப் பணிக்காக நபார்டு திட்டத்தின்மூலம் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தற்போது பாலப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதோடு, இந்தப் பேரூராட்சியானது மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. இதே பேரூராட்சியில் காக்கையன்பட்டி என்ற ஊருக்குச் செல்லும் வழியில் இரண்டு வரட்டாறுகள் குறுக்கிடுகின்றன. அதில் ஓர் ஆற்றின் குறுக்கே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பாலம் கட்டப்பட்டுவிட்டது. இன்னொரு வரட்டாற்றின் குறுக்கே செல்லும் இந்த ஆற்றுக்குப் பாலம் கட்டப்படாமல் உள்ளது. ஆகவே, காக்கையன்பட்டிக்குச் செல்லக்கூடிய வழியில் இருக்கக்கூடிய அந்த வரட்டாற்றிலும் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே பேரூராட்சிப் பகுதியிலே பாலங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, 4 வருடங்களில் 64 பேரூராட்சிகளிலே 28 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 72 பாலங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 24 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 19 பாலங்கள் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 29 பாலங்கள் கட்டுவதற்கு 29-4-2015 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பாலம், அவசியம் இருப்பின் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதனைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 *மார்ச்* 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**71—**

### கால்நடைக் கிளை நிலையக் கட்டடம்

***52735—திருமதி எல். ஜெயசுதா:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அல்லியாளமங்கலத்திலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை குலைந்தாலும் நிலை குலையாத மாணிக்கத் தலைவி மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேத்துப்பட்டு ஒன்றியம், அல்லியாளமங்கலத்திலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அல்லியாளமங்கலம் கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று துவங்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டடத்திலே தற்போது இயங்கி வருகிறது. அரசின் கொள்கை முடிவின்படி, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்குத்தான் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு விதிகளிலே இடம் உள்ளது. எனவே, வருங்காலங்களில் மேற்படி கால்நடைக் கிளை நிலையம் அரசு விதிகளுக்குட்பட்டு கால்நடைக் மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும்போது, சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2015 *மார்ச்* 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**72—**

### ஜவுளிப் பூங்கா

***52485—திருமதி ச. முத்துசெல்வி:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் அறிவாற்றல், பொன்மனச் செம்மலின் அருட்குணம், பாரதம் கண்ட பகுத்தறிவுப் போர்வாள், தமிழக மக்களைக் காக்கும் காவல் தெய்வம், தமிழக மக்களின் ஒளி விளக்கு, தமிழினத்தின் குல விளக்கு, எங்கள் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். சங்கரன்கோவில் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், அப்பகுதியில் உள்ள தொழில்முனைவோர் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும்பட்சத்தில், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் மூலமாக ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் இவ்வரசு, கவனத்தில்கொண்டு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து தியாக வாழ்க்கை வாழ்ந்து வரும் தியாகத்தின் மறுவடிவம், நாங்கள் வணங்கும் தெய்வம், இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் நகர்ப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் நெசவாளர் பெருங்குடி மக்கள். இங்கு 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். இங்கு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தறிக் கூடங்கள் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளர் பெருமக்களுக்காக பெடல் தறிகளை விலையில்லாமலும், மானிய விலையிலும் வழங்கி, நலிவடைந்து கிடந்த அந்தத் தொழிலை மேம்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த மக்களின் சார்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சங்கரன்கோவில் மட்டுமல்லாமல், குருவிகுளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியப் பகுதிகளிலும் நெசவாளர் பெருமக்கள் நிறைந்து இருக்கின்றனர். அதேபோல, சங்கரன்கோவிலைச் சுற்றிலும் உள்ள ராஜபாளையம், தளவாய்புரம், சுப்புலாபுரம், புளியங்குடி, சிந்தாமணி, சத்திரப்பட்டி போன்ற பகுதிகளிலும் நெசவாளர் பெருமக்கள் நிறைந்திருக்கிறார்கள். இங்கு 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தறிகளைக் கொண்டு, 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், ஈரோட்டுக்கு அடுத்தபடியாக, சங்கரன்கோவிலில்தான் நெசவுத் தொழில் அதிகமாக நடைபெறுகிறது. எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்றால், தனியார் எவரேனும் முன்வரக்கூடிய நிலையிலே 50 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்; 25 தறிக்கூடங்கள் இருக்க வேண்டும்; மொத்த முதலீட்டிலே அவர்கள் 51 சதவிகிதம் முதலீடு செய்ய முன்வரக்கூடிய நிலையில், தமிழக அரசின் மானியமாக மொத்த திட்ட மதிப்பீட்டில் 9 சதவிகிதம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழலும், அதேபோல, மத்திய அரசு 40 சதவிகிதம் அவர்களுக்கு மானியமாகக் கொடுக்க முன்வரக்கூடிய நிலையிலேதான் ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலையிலே, கடந்த 31-1-2014 ஆம் தேதியன்று, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சங்கரன்கோவில் பகுதியிலே ஜவுளிப் பூங்கா அமைக்க யாராவது முன்வருவார்களா என்பதற்கான ஓர் ஆய்வுக் கூட்டம் நடந்ததில், தனியார் எவரும் அந்த இடத்திலே ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வராத நிலையிலேதான், அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்க முடியாத சூழல் உள்ளது. எனவே, தனியார் எவராவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாக, முன்வந்தாலும் இந்தத் திட்டத்தின்படி நிச்சயமாக அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அரசு மானியங்களும், உதவியும் கொடுத்து ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலே, மொத்தமுள்ள 48 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த காலக்கட்டத்திலேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல பல்வேறு நலத் திட்டங்களின் வாயிலாக பெடல் தறிகளும், ஓய்வூதியங்களும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

[2015 மார்ச் 27

முற்பகல் 11-10

இன்றைக்கு அரசுத் திட்டங்களின் மூலமாக ஏழைகளுக்கு வழங்கக்கூடிய விலையில்லா வேஷ்டி, சேலை, மாணவர்களுக்கான பள்ளிச் சீருடைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான வேலைவாய்ப்புகள் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் வாழ்வில் நல்லதொரு நிலையில் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தனியார் யார் முன்வந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்முனைவோர் முன்வந்தால் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு பசுமை வீடுகளை அள்ளித் தந்தவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பசுமை வீடுகள் என்பது கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே என்று சட்ட விதியில் உள்ளது. ஆனால், எங்களது நகரப் பகுதியில்தான் நெசவாளர் பெருமக்கள் நிறைந்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் வசிக்கும் பெருங்குடி மக்களுக்கும் பசுமை வீடுகள் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நெசவாளர்களுடைய வாழ்வில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலேதான் நெசவாளர்களுக்கு ரூ.2,60,000/- என்ற மதிப்பீட்டில் 10,000/- வீடுகள் கட்டுவதற்காக ரூ.260 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் இல்லாமல், தமிழக அரசின் நிதியைக் கொண்டு இன்றைக்கு 6,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 4,000 வீடுகள் கட்டி முடிக்கக்கூடிய தருவாயில் உள்ளன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சி, நகரப் பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் தர வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். தற்போது கட்டப்படும் 10,000 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைவிலே தங்களது திருக்கரங்களால் அனைத்து இடங்களிலும் திறந்து வைப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை போன்று பல்வேறு பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களும் இந்தக் கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆவன செய்வதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவோம் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

## வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***48429—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 மார்ச் 27

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வுலகத்தை ஆளும் ஆற்றல் பெற்றிருக்கின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 91, வருவாய் [வநி2(1)] துறை, நாள் 25-2-2014-ன்படி ரூ.202/- இலட்சம் நிதி ஒதுக்கீடு, செய்து, நிருவாக அனுமதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி, மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, நில மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் நில நிருவாகத் துறை மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆணை பெறப்பட்ட பின்பு கட்டடம் கட்டிட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த நல்லரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரவாயலில் இருக்கக்கூடிய தாசில்தார் அலுவலகம் Community Hall-ல் இருக்கின்றது. அது Corporation-க்குச் சொந்தமான இடம். ஏராளமான மக்களுடைய குடும்ப விழாக்கள் நடக்கக்கூடிய இடம். எனவே, உடனடியாக அதை இடமாற்றம் செய்து, பக்கத்தில் வளசரவாக்கத்தில் உள்ள 2½ ஏக்கர் இடத்தில் building கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டால், ஏற்கெனவே இருக்கக்கூடிய Community Hall-ஐ மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது, கடந்த ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம். ஓராண்டுக்கு மேலாக காலதாமதமாகிறது. எனவே, இதனை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் நகராட்சிக்குச் சொந்தமான இடம் என்று சொன்னார்கள். அது நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லை. அது நகராட்சியின் பயன்பாட்டில் இருக்கக்கூடிய இடம். அது அரசினுடைய கசம் புறம்போக்கு நிலமாக இருப்பதனால் அதற்கு நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகளிடத்தில் உரிய ஒப்புதல் பெறவேண்டியுள்ளது. ஒப்புதல் பெற்றபின் நிலம் வருவாய்த் துறைக்கு மாற்றம் செய்து, உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களோடு நடைபெறும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அது கசம் புறம்போக்கு என்று பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் வகைப்படுத்தப்பட்டது என்று நினைக்கிறேன். அங்கு கசிவுநீர் குட்டையெல்லாம் இல்லை. நீர் குட்டையும் அங்கு இல்லை. குப்பைகள் அதிகமாக இருந்தது. அதையெல்லாம் எடுத்துவிட்டார்கள். அதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் செய்ய முடியும். எனவே, மக்களின் நிலையைக் கருத்தில்கொண்டு, அங்குள்ள இரண்டரை ஏக்கர் நிலத்தில், தீயணைப்பு நிலையத்திற்கு, சார் கருவூலத்திற்கு, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என ஒருங்கிணைந்த வளாகம் ஒன்று உருவாக்க முடியும். அதையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கி**றேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கு குட்டைகள் இல்லை. ஆனால் வருவாய்த் துறையினுடைய ரெக்கார்டுகளிலே கசம் புறம்போக்கு நிலப்பரப்பாக இருப்பதனாலே உரிய அனுமதியை உரிய துறையிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல பயன்பாட்டிற்கு ஏற்ற இடமாகவும், ஏ1 நோட்டீஸ் கொடுக்கின்றபோது எந்தவிதமான மக்களுடைய எதிர்ப்பும் இல்லை என்பதும் அதிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உரிய அனுமதி பெற்று, அங்கு உரிய கட்டடம் கட்டினால்தான் பிற்காலத்திலே எந்த எதிர்ப்புகளும் வராமல் இருக்கும் என்ற அடிப்படையிலேதான் தொலைநோக்குச் சிந்தனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற நல்லரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## தரம் உயர்த்துதல்

***46216—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம்



2015 மார்ச் 27]

பணிந்து என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூர் ஒன்றியத்தில் இயங்கிவரும் விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளான போதிய இடவசதி இல்லாததாலும், பொதுமக்கள் பங்களிப்பான ரூபாய் 2 இலட்சம் செலுத்தப்படாததாலும் மேற்குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரபாண்டியத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 313 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். கிட்டத்தட்ட 80 சதவீதம் மாணவ, மாணவிகள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், மன்னார்குடிக்கு 25 கிலோ மீட்டர் தூரம், திருத்துறைப்பூண்டிக்கு 20 கிலோ மீட்டர் தூரம், கோட்டூருக்கு 10 கிலோ மீட்டர் தூரம் என்று நீண்ட தூரம் செல்லவேண்டிய சூழல் இருக்கிறது. ஆகவே, விக்கிரபாண்டியத்தைச் சுற்றியிருக்கக்கூடிய ஆலாத்தூர், பள்ளிவர்த்தி, திருநெல்லிக்காவல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் நலன் கருதி, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்தக் கோரும் பள்ளிகளுக்கு மாநகராட்சி என்றால் 6 கிரவுண்ட் இடமும், மாவட்ட தலைமை இடங்களில் 8 கிரவுண்ட் இடமும், நகராட்சியில் 10 கிரவுண்ட் இடமும், பேரூராட்சியில் ஒரு ஏக்கர் நிலமும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 3 ஏக்கர் நிலமும் இருக்கவேண்டும். அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொது மக்கள் பங்களிப்புத் தொகையான ரூபாய் 2 இலட்சம் செலுத்தியுள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மலைப் பகுதி, ஆதி திராவிட மக்கள்தொகை அதிகம் உள்ள இடங்களில் இயங்கிவரும் பள்ளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருக்கவேண்டும். ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். மக்களுக்கு அதிகமாகப் பயன்படும் இடங்களைக் கருத்தில்கொண்டு, அந்தந்த மாவட்டத்திலுள்ள பிற்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் அதிகம் பயனடைவதையும் கருத்தில்கொண்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட, கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் அரசு உயர்நிலைப் பள்ளி மேற்குறித்த நெறிமுறைகளை நிறைவு செய்யாததால் மேல்நிலைப் பள்ளியாக தற்போது தரம் உயர்த்த இயலாது. இருப்பினும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இப்பள்ளியைத் தரம் உயர்த்தக் கோருவதால், பள்ளிக்குத் தேவையான இட வசதியும், பொது மக்கள் பங்களிப்பான ரூபாய் 2 இலட்சத்தையும் அரசுக் கணக்கில் செலுத்தும்பட்சத்தில், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, விளக்குடி உயர்நிலைப் பள்ளியில், இராயநல்லூர், பனையூர், திருப்பத்தூர், கீரக்களூர், குன்னூர், கூத்தடிமூலை, பள்ளங்கோயில் ஆகிய



2015 மார்ச் 27]

நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் வந்து சேர்ந்து படிக்கின்றார்கள். இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் திருத்துறைப்பூண்டி அல்லது கோட்டூருக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. 490 மாணவர்கள் அங்கு படிக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் 80 சதவீதத்திற்கு மேலே அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றார்கள். ஆகவே, அந்தப் பள்ளி மாணவர்கள் நலன் கருதி விளக்குடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்தைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 313. ஆறாம் வகுப்பில் 30 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 38 மாணவர்களும், 8 ஆம் வகுப்பில் 58 மாணவர்களும், ஒன்பதாம் வகுப்பில் 92 மாணவர்களும், பத்தாம் வகுப்பில் 95 மாணவர்களும் படித்து வருகிறார்கள். இப்பள்ளியின் மொத்தப் பரப்பளவு 25 ஆயிரம் சதுர அடி. கிட்டத்தட்ட அரை ஏக்கருக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இப்பள்ளியில் மொத்தம் ஏழு வகுப்பறைகளும், ஓர் ஆய்வுக் கூடமும் உள்ளன. விக்கிரபாண்டியத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் கோட்டூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அதேபோன்று அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. விக்கிரபாண்டியத்திற்குக் கிழக்கே 8 கி.மீ. தொலைவில் ஆலத்தம்பாடியில் ஜானகி அண்ணி அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. விக்கிரபாண்டியத்திற்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் குள்ளமங்கலத்தில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. விக்கிரபாண்டியத்திற்கு 15 கி.மீ. தொலைவில் திருத்துறைப்பூண்டியில் ஓர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், ஓர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. தரம் உயர்த்துவதற்கு செலுத்தப்படவேண்டிய பங்குத்தொகையை

[2015 மார்ச் 27

இதுநாள் வரையிலும் பொதுமக்கள் செலுத்தவில்லை, இடவசதியும் மிகவும் குறைவாக இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஆய்வுசெய்து, இடம் ஏதாவது அருகில் அரசிற்கு கிடைக்கும்பட்சத்தில் அதை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு, பரிசீலனை செய்து, வருகின்ற காலங்களில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## தேனீ வளர்ப்புத் தொழில்

***21307—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய், மூன்றும் ஒருங்கிணைந்த தெய்வத் திருமகளாய்த் திகழும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, என்னுடைய பதிலை வழங்குகிறேன்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக தமிழ்நாட்டில் சமவெளிப் பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் தஞ்சை மாவட்டமும் ஒன்றாகும். அதனடிப்படையில், தஞ்சை



2015 மார்ச் 27]

மாவட்டத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் 10 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு தேனீ வளர்ப்புத் தொழில் பயிற்சி முறையாக அளிக்கப்பட்டு, பயிற்சியின் முடிவில் தேன்கூடுகள், தேன் எடுக்கும் கருவிகள், தேனீக்கள் மற்றும் இதர உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல மாவட்டங்களில் தேனீ வளர்ப்புத் தொழில் நடந்தாலும், தஞ்சாவூரைப் பொறுத்தமட்டில், அங்கே ஏராளமான தென்னை மரங்கள் உற்பத்தி ஆகின்றன. அங்கே தேனீ வளர்ப்புக்குத் தேவையான மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. அதுமாத்திரம் இல்லை. நீர் ஆதாரம்கூட அங்கே இருக்கிறது. ஆகவே, தஞ்சாவூர் மாவட்டத்திலே தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவேரி டெல்டா பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் தேனீ வளர்ப்புத் தொழிலை மேலும் விரிவுபடுத்திட, தேனீ பண்ணைகள் அமைத்து பராமரிக்க விருப்பம் உள்ள தேனீ வயலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்டிட வாரியத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஆர்வம் உள்ள நபர்கள் தேன் பண்ணை அமைக்க முன்வருவார்களேயானால் பாரதப் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு

உருவாக்கும் திட்டத்தின்மூலம் தேன் பண்ணை அமைத்து, தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க 25% முதல் 35% வரை மானியத்துடன்கூடிய கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகை திட்டத்தின்மூலம் பயன்பெற சம்பந்தப்பட்ட வங்கி மேலாளர்களுக்கு விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு, பயனாளிகளுக்குக் கடன் உதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-25

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேறு முக்கியமான தீர்மானம் வர இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) முக்கியமான தீர்மானம் வர இருக்கிறது, பிறகு பேசுங்கள் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முக்கியமான அரசினர் தீர்மானம் வர இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அறிக்கை வந்தவுடன் பேசலாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைவிட முக்கியமான தீர்மானம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை, முக்கியமான தீர்மானம் ஒன்று வர இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)





## 4. அரசினர் தனித் தீர்மானம்

### கர்நாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தவும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்கவும் கோரி மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையாக மட்டுமல்லாமல்; ஒட்டுமொத்தத் தமிழகத்தின் உணர்வுபூர்வப் பிரச்சினையாகவும் விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. காவேரி நதி கர்நாடகத்தில் உற்பத்தியானாலும் கீழ்ப்பாசன மாநிலத்தின் உரிமை என்ற அடிப்படையில் காவேரி நதிநீரின்மீது தமிழ்நாட்டிற்கே அதிக உரிமை உள்ளது. சென்னை மாகாணத்திற்கும், மைசூர் மாகாண சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைத் தெளிவாக்குகின்றன.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை ஏன் படிக்கின்றார்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இது introduction, இதனுடைய சாராம்சம். இதனுடைய சாராம்சத்தை முடித்துவிட்டு பிறகு நான் தீர்மானத்திற்கு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவதற்கு முன்பு பேசுகிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு தீர்மானமாக இருந்தாலும் அதைப்பற்றி மட்டும்தான் படிக்கவேண்டும். Introduction ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடு) அப்படியெல்லாம் விதி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைச் சொல்லிவிட்டு தீர்மானத்தைப் படிப்பார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கெல்லாம் முன்னுதாரணம் நிறைய இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நிறைய முன்னுதாரணங்கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) தீர்மானம் கொண்டு வருபவர்கள், விளக்கமாகப் பேசிவிட்டு, அப்புறம் தீர்மானத்தை முன்மொழிவார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியாகத்தான் பேசுகிறார். நீங்கள் சரியாகப் பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை தெளிவாக்குகின்றன. (குறுக்கீடுகள்) ஏன் நம்முடைய உரிமையைச் சொல்லவிடமாட்டேன் என்கிறீர்கள்.

இருப்பினும், காவேரி நதிநீர் ஒப்பந்த ஷரத்துக்களை மீறும் வகையில், கர்நாடகம் 1960-களின் பின்பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் காவேரி நதிநீரில் உரிமை படைத்த மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், பல்வேறு அணைகளைக் கட்ட நடவடிக்கை எடுத்தது. விவசாய நிலங்களின் பரப்பினையும் கர்நாடகம் அதிகரித்துக்கொண்டே வந்தது. 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழக மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள காவேரி நதிநீர்ப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டத்தின்படி ஒரு நடுவர் மன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டது. ஆனால், மத்திய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உங்கள் கட்சி சார்பாகப் பேசும்போது உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலில் பேசிவிட்டு, பிறகு தீர்மானத்தை முன்மொழிவார்கள். (குறுக்கீடுகள்) அவருக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் தீர்மானத்தை முன்மொழிந்து கொண்டிருக்கும்போது நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. குறுக்கீடுகள் செய்யாமல் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லை, அவைக்கு இடையூறு செய்யப்போகிறீர்களா? (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. இப்போது நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இடையூறு செய்யப் போகிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை, நான் உங்களை மிரட்டவில்லை. நீங்கள்தான் என்னை மிரட்டுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவைத் தலைவரை நீங்கள்தான் மிரட்டுகிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆனால், மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவேரி நதிநீர் பங்கீடு பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு காவேரி நீர்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்பு சங்கத்தினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தனர். (குறுக்கீடு) போதுமா? இவ்வழக்கில் தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக்கொண்டது. இவ்வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவேரி பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு உத்தரவு ஒன்றை 1990 ஆம் ஆண்டு பிறப்பித்தது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவின் காரணமாக 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டப்பட்டு, மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, காவேரி நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. காவேரி நடுவர் மன்றம் 25-6-1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இதில் மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்திடும்வகையில், கர்நாடகம் தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென ஆணையிட்டது. மேலும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டுமென்றும், இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும்வரையில் இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்றும், அந்த இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த இடைக்கால ஆணைக்கு எதிராக அவசரச் சட்டம் ஒன்றை கர்நாடக அரசு இயற்றியது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அதுபற்றி உச்ச நீதிமன்றம் தனது கருத்தை அளிக்கக் கோரினார். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும், கர்நாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் 22-11-1991 அன்று மத்திய அரசுக்குக் கருத்துரை வழங்கியது. இதனடிப்படையில், 10-12-1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையின் காரணமாகவே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு, தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசிதழில் இந்த இடைக்கால ஆணை வெளியிடப்பட்டாலும், அதனைச் செயல்படுத்துவதற்கான அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்தாத காரணத்தால், இதய



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு 1992 ஆம் ஆண்டு ஒரு சிவில் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. 11-8-1998 அன்று மத்திய அரசு, காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் அதற்கு உதவி புரிவதற்காக காவேரி கண்காணிப்புக் குழு என்ற இரு அமைப்புகளை ஏற்படுத்தியது. இந்த அமைப்புகளால் தமிழகத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. ஏனெனில், காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையில் தெரிவித்தபடி, மாதாந்திர வாரியான நீர் கர்நாடகத்தால் தமிழகத்திற்கு விடுவிக்கப்படுவதை காவேரி நதிநீர் ஆணையம் உறுதி செய்யவில்லை.

முற்பகல் 11-35

1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை 5-2-2007 அன்று பிறப்பித்தது. 50 விழுக்காடு நம்பகத்தன்மை என்ற அடிப்படையில், காவேரியின் மொத்த நீர்வளம் 740 டி.எம்.சி. அடி நீர் என வரையறுத்து, அதனடிப்படையில் பாசன மாநிலங்களுக்கான நீர் அளவை ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. அடி நீரும், கர்நாடகத்திற்கு 270 டி.எம்.சி. அடி நீரும், கேரளாவிற்கு 30 டி.எம்.சி. அடி நீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. அடி நீரும், தவிர்க்க முடியாத உபரி 4 டி.எம்.சி. அடி நீர் எனவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 10 டி.எம்.சி. அடி நீர் எனவும், இந்த 740 டி.எம்.சி. அடி நீரை காவேரி நடுவர் மன்றம் பகிர்ந்தளித்துள்ளது. இந்த இறுதி ஆணையை முறையாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்துள்ளது. 2011 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் 14-6-2011 அன்று, அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை புது டில்லியில் சந்தித்து காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடவேண்டும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

என்றும், இந்த ஆணையைச் செயல்படுத்தும்வகையில் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். அதன் பின்னர், கடிதங்கள் வாயிலாக இதனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தியபோதும், மத்திய அரசு, இதற்கு செவி சாய்க்கவில்லை. பின்னர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த அறிவார்ந்த நடவடிக்கைகளின் காரணமாக, உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19-2-2013 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இடையறா முயற்சியின் காரணமாகவே, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், அதன் தொடர்ச்சியாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி, இடைக்கால மனு ஒன்றை 18-3-2013 அன்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த மனுவினை 10-5-2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில், 19-2-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையைச் செயல்படுத்த ஒரு தற்காலிக ஏற்பாடாக மத்திய நீர் ஆதார அமைச்சகச் செயலாளரின் தலைமையில், மாநில தலைமைச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க ஆணையிட்டது. இந்த ஆணையின்படி, ஒரு மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு அமைத்தது.



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவையே நிரந்தர ஏற்பாடாக மாதாந்திர அடிப்படையில், தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யும் என்பதால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை IA.No.7/2013-ஐ 11-11-2013 அன்று தாக்கல் செய்தது. இந்த இடைக்கால மனுவினை ஏற்கெனவே நிலுவையில் உள்ள சிவில் மேல்முறையீட்டு மனுக்களுடன் சேர்த்து விசாரிக்கலாம் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

காவேரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டுமென வலியுறுத்தி கோரிக்கை மனுவினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-6-2014 அன்று பாரதப் பிரதமரிடம் நேரில் விரிவாக எடுத்துரைத்தார்கள். ஆனால், மத்திய அரசு, காவேரி மேலாண்மை வாரியத்தை இன்னமும் அமைக்கவில்லை.

கர்நாடக அரசு, தன்னிச்சையாக சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30-3-2013 அன்று இம்மாமன்றத்தில் அதுகுறித்து குறிப்பிட்டு, கர்நாடக அரசு காவேரியின் குறுக்கே மேகதாது என்னுமிடத்தில் தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது என்றும், அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால், தமிழகம் அதனை அனுமதிக்காது என்றும் உறுதிபடத் தெரிவித்தார்கள். கர்நாடகத்தில் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்கள், அதற்குக்கீழ் தமிழ்நாட்டில் ராசிமணல் மற்றும் ஒகேனக்கல் திட்டங்கள் ஆகியவற்றை தேசிய நீர் மின் கழகத்தின்மூலம் சுமார் 1,150 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் செயல்படுத்தலாம் என்று மத்திய அரசு 1998 ஆம் ஆண்டு உத்தேசித்தது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

முற்பகல் 11-40

காவேரி நடுவர் மன்றம் 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் பிரிவு 5 உட்பிரிவு 2-ன்படி 5-2-2007 அன்றைய தனது இறுதி ஆணையில் இந்த நீர் மின் திட்டங்களைக் கருத்தில்கொண்டு, மாநிலங்களின் பொது எல்லையில் கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசும் சில நீர் மின் திட்டங்களை அமைக்க தேசிய நீர் மின் கழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கூறியுள்ளனர். இந்நிலையில் மேற்கூறிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்க ஆரம்பித்தவுடன், கீழ் மாநில பாசன உரிமை பாதிக்காத வகையில், மாதாந்திர அடிப்படையிலும், நடுவர் மன்றம் கூறியுள்ள அளவுப்படியும் நீர் வெளியேற்ற விதிமுறைகள் அமைக்க வேண்டுமென்று கூறியிருந்தது.

நடுவர் மன்ற இறுதி ஆணை வந்தவுடன், கர்நாடக அரசு, சட்டப் பிரிவு 5(3)-ன்படி ஒரு மனுவை நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்தது. இதன்படி கர்நாடகத்தில் அமையும் இரு நீர் மின் திட்டங்கள் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது, அதன் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளன என்றும், இந்த நீர் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால்தான் நடுவர் மன்றத்தின் ஆணையின்படி, தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அடிப்படையில் குறிப்பிட்டுள்ள நீர் அளவை வழங்குவது சாத்தியமாகும். எனவே, தேசிய நீர் மின் கழகத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் கர்நாடகத்திற்கு இசைவாக அமையவில்லை என்றால், மேகதாது நீர் மின் திட்டத்தை கர்நாடகமே தன்னிச்சையாகச் செயல்படுத்தலாம் என்று விளக்கம் அளிக்க வேண்டுமென்று கோரியுள்ளது. இம்மனு நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் கர்நாடக அரசு, சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டத்தை தன்னிச்சையாகச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாக நாளேடுகளில் செய்திகள் வந்ததன் அடிப்படையில், கர்நாடகம் தன்னிச்சையாக இந்த இரு திட்டங்களையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும், அப்பகுதிகளில் அமையும் நான்கு நீர் மின் திட்டங்களும், தேசிய நீர் மின் திட்டக் கழகம் போன்ற ஒரு நடுநிலையான



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

துறையினால்தான் செயல்படுத்தப்படவேண்டும் என்றும் கூறி, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவை (I.A.) தாக்கல் செய்தது. கர்நாடகம் மீண்டும் சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முயற்சிப்பதாக செய்திகள் வந்ததன்பேரில், மற்றொரு மனுவையும் (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக, மேகதாது நீர் மின் திட்டம் மற்றும் வேறு பல திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்ததை அடுத்து, இத்திட்டங்களை தமிழக அரசின் முன்னனுமதியின்றி எடுத்துக்கொள்ள வேண்டாமென கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கவும், காவேரி மேலாண்மை வாரியம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு செயல்படும் வரை கர்நாடகத்தின் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கவும் கோரி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை 2-9-2013 மற்றும் 3-9-2013 அன்று கடிதங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து, கர்நாடக தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மத்திய நீர்வள ஆதார அமைச்சகச் செயலாளர் அவர்களுக்கும் முறையே 6-9-2013 மற்றும் 17-9-2013 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் 7-10-2013 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில், சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒப்புதல் கோரி மத்திய நீர்வளக் குழுமத்திற்கு கர்நாடக அரசிடமிருந்து வரப்பெறவில்லை எனவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க, மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையின் ஆலோசனையுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது. மீண்டும் 9-10-2013 அன்று,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

இத்திட்டங்களின் விரிவான அறிக்கைகளை வழங்கவும்; மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வுகாணும் வரை இத்திட்டங்களை மேற்கொள்ளாது இருக்கும்படியும் கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

முற்பகல் 11-45

கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக அர்காவதி நதியைப் புனரமைத்தல் மற்றும் ஹேமாவதி கால்வாய்களை நவீனப்படுத்துதல் போன்றவற்றிற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும்பொருட்டு விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) கோரியுள்ள விவரம் பத்திரிகைகளில் வெளிவந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-9-2013 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், கர்நாடகாவின் இத்தகைய செயலை காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையில் நிறுத்தி வைக்குமாறும், ஏற்கெனவே கோரப்பட்டுள்ள அறிவிப்பை நிறுத்தி வைக்குமாறும் மற்றும் வேறு எந்த ஒரு திட்டத்திற்கும் இத்தகைய அறிவிப்பைக் கோராமல் இருக்குமாறும், கர்நாடக அரசிற்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

மேலும், இந்தத் திட்டங்களைத் தவிர, கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் மூலமாக, பல நவீனமயமாக்கும் திட்டங்கள் மற்றும் இறைவைத் திட்டங்களை (Lift Irrigation schemes), அதாவது குளங்களை நிரப்பி, குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டங்களை எடுத்துக்கொள்வதாக, பத்திரிகைகளில் செய்தி வந்ததையடுத்து, இத்திட்டங்களின் முழு விவரங்களை வழங்கவும், காவேரி பற்றிய வழக்குகள் முடிவடையும் வரையிலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும், இத்திட்டங்கள் பற்றிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகளை (Tender Notices) நிறுத்தி வைக்க, அறிவுரை வழங்கும்படி 17-3-2014 அன்று, மத்திய அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதேபோன்று, கர்நாடக அரசிற்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இக்கடிதங்களுக்கு பதில் வராததால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணைப்படி, காவேரி மேலாண்மை வாரியம்



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அமைக்கப்படும் வரையிலும், தமிழகத்தின் அனுமதியில்லாமலும் இத்திட்டங்களை கர்நாடகம் மேற்கொள்ள தடைவிதிக்கக் கோரியும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு ஏற்படும் வரையிலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும், தற்போதைய நிலை (Status Quo) கடைப்பிடிக்கப்படவேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவு வழங்கவும் கோரி ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் 11-4-2014 அன்று தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.

கர்நாடக அரசு, நீர் மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல், குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில் மேகதாது என்னுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கென, தொழில்நுட்ப சாத்திய அறிக்கை தயார் செய்வதற்காக “விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)” கோரியுள்ளது எனவும் செய்திகள் வந்ததையடுத்து, 12-11-2014 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, கர்நாடக அரசின் இத்தகைய நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் மற்றும் எந்த ஒரு பாசன, நீர் மின், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு, தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், தமிழ்நாட்டின் இசைவு பெறாமல், கர்நாடக அரசின் எந்த ஒரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் நீர்வள ஆதார அமைச்சகம் ஒப்புதல் அளிக்கக்கூடாது எனவும் அவ்வமைச்சகங்களுக்கு அறிவுறுத்தும்படியும் அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கர்நாடக அரசு இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) திரும்பப் பெறவேண்டுமெனவும், காவேரி படுகைப் பகுதியில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக, கர்நாடகம் இவ்விரு அணைகளைக் கட்டும் பணிகளையோ அல்லது வேறு எந்த புதிய

திட்டங்களையோ மேற்கொள்ளக்கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடரவேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 18-11-2014 அன்று இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கர்நாடக அரசு அதன் 18-11-2014 நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையில் உள்ள இடைக்கால மனுவில் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல், இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

கர்நாடக அரசு, தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, 5-12-2014 அன்று இப்பொருள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

முற்பகல் 11-50

"காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில் கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி நீரவாரி நிகமம் வாயிலாக மேற்கொண்டுள்ள திட்டங்களையும் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக்கூடாது என்றும் கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்கவேண்டும் என்றும்; கர்நாடக அரசின் எத்தகைய திட்டங்களுக்கும் மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் தொழில்நுட்ப ரீதியான அனுமதி வழங்கக்கூடாது என்றும்; மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் அத்தகைய திட்டங்களுக்கு தமிழ்நாட்டை கலந்தாலோசிக்காமல் அனுமதி வழங்கக்கூடாது என்றும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது"





என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதனை பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

5-1-2015 அன்று தமிழ்நாடு அரசு, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில் கர்நாடக அரசு மேற்கொள்ளும் எந்தத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசின் கருத்துகளைப் பெறாமல் அனுமதி வழங்கக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 21-3-2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2-9-2013 அன்று அனுப்பிய கடிதம், முதலமைச்சர் அவர்கள் 12-11-2014 அன்று அனுப்பிய கடிதம் மற்றும் தமிழ்நாடு அரசு 18-11-2014 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இடைக்கால மனு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியும், கர்நாடக அரசு அதன் 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்திற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை எடுத்துரைத்தும், இத்தகைய கர்நாடக அரசின் தன்னிச்சையான செயல் காவேரி நடுவர் மன்றத்தின் 5-2-2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணைக்கு முற்றிலும் முரணானது எனவும் மற்றும் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய நீர்வரத்து பாதிப்படையும் என்பதையும் தெரிவித்து, கர்நாடக அரசு சட்ட விரோதமாக மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல் வேறு எந்த ஒரு திட்டத்தையும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்கவேண்டும் என பலமுறை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டபோதிலும், இதுவரையில் அத்தகைய அமைப்புகள் ஏற்படுத்தப்படாமலிருப்பது வருத்தத்தை அளிக்கிறது எனத் தெரிவித்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மேலும் காலம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

தாழ்த்தாமல் மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் அமைக்க அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் தனது 18-3-2015 ஆம் நாளிட்ட கடிதத்தில் இவ்வரசின் கடிதங்களைச் சுட்டிக்காட்டி, "புதிய திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கையினை மாநில அரசுகள் மத்திய நீர்வளக் குழுமத்தின் மதிப்பீட்டிற்காக அனுப்பி வைக்கின்றன. மத்திய நீர்வளக் குழுமம், பன்மாநில அம்சம் உள்ளடக்கிய அனைத்து அம்சங்கள் குறித்து அவற்றை ஆய்வு செய்கிறது. சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, கர்நாடக மின் கழகத்திடமிருந்து பிப்ரவரி 2014 அன்று மத்திய நீர்வளக் குழுமத்திற்கு வரப்பெற்றது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்கள் குறிப்பாக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அரசுகளின் கருத்துகள்/விளக்கக் குறிப்புகளைப் பெற்று, பன்மாநில அம்சம் குறித்து ஆய்வு செய்வதற்காக விரிவான திட்ட அறிக்கையுடன் மத்திய நீர்வளக் குழுமத்திற்கு அனுப்பி வைக்கும்படி கர்நாடக அரசு கேட்டுக்கொள்ளப்பட்டு, வரப்பெற்ற விரிவான திட்ட அறிக்கை அவ்வரசுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது" என்றும்; "இதைத் தவிர வேறு எந்த ஒரு திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையும் மத்திய நீர்வளக் குழுமத்திற்கு வரப்பெறவில்லை" எனவும் தெரிவித்துள்ளது.

முற்பகல் 11-55

5-12-2014 அன்று இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும், 21-3-2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்திற்கும் எந்த ஒரு பதிலும் மத்திய அரசிடமிருந்து பெறப்படவில்லை. எனவே, தமிழக அரசின் சார்பில் இது தொடர்பாக ஒரு மனு (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் 26-3-2015 அன்று (நேற்று) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், கர்நாடக அரசு தனது நிதிநிலை அறிக்கையில், மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, தமிழக அரசால் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆணை பிறப்பிக்கக் கோரப்பட்டுள்ளது.



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்நிலையில், புதிய அணை கட்டப்படும் என அம்மாநில அரசு தெரிவித்து வருவதால், தமிழக மக்கள் குறிப்பாக, டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் ஆழ்ந்த மன வேதனை அடைந்துள்ளனர். எனவே, மத்திய அரசு இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிகிறேன். இதனை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம்**

"காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீரை மாதாந்திர வாரியாகப் பெறுவதற்கு காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்கவேண்டும் என்றும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில், கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி நீரவாரி நிகமம் வாயிலாக மேற்கொள்ளவுள்ள திட்டங்களையும், தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக் கூடாது என்று கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகள் மத்திய அரசு வழங்கவேண்டும் என்றும், 5-12-2014 அன்று இந்த மாமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்து வருவதற்கு இந்த மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது.

மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, தமிழகத்தின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க 25 கோடி ரூபாயை கர்நாடக அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி உள்ளதற்கு இந்த மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

கர்நாடக அரசு, மேகதாது நீர் மின் திட்டம் மற்றும் வேறு பல திட்டங்களை எடுத்துக்கொள்வதை நிறுத்தி வைக்கும்படி கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை 2-9-2013 அன்று கடிதம் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதற்கும், கர்நாடக அரசு காவேரி நீர்வாரி நிகமம் என்ற அமைப்பின் மூலமாக, பல நவீனமயமாக்கும் திட்டங்களை நிறுத்தி வைக்க கர்நாடக அரசுக்கு அறிவுரை வழங்கும்படி பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-9-2013 அன்று கடிதம் அனுப்பியதற்கும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் தமிழகத்தின் அனுமதியில்லாமலும் இத்திட்டங்களை கர்நாடகம் மேற்கொள்ள தடை விதிக்கக் கோரியும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு ஏற்படும் வரையிலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் தற்போதைய நிலை (Status Quo) கடைப்பிடிக்கப்படவேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவு வழங்கவும் கோரி ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 11-4-2014 அன்று தமிழக அரசு தாக்கல் செய்துள்ளதற்கும், மேகதாதுவில் புதிய அணைகள் கட்ட தொழில்நுட்ப சாத்திய அறிக்கை தயார் செய்வதற்காக கர்நாடக அரசின் விருப்பம் கோரும் அறிவிப்பை நிறுத்தி வைத்திடவும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு அறிவுரை வழங்கவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தமிழக முதல்வர் அவர்கள் 12-11-2014 ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கும், இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் 18-11-2014 அன்று இடைக்கால மனு ஒன்றைத் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தமைக்கும், மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்திற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு கர்நாடக அரசு, தனது 2015-2016 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கம் செய்ததைச் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டின் அனுமதி இல்லாமல், எந்தத் திட்டத்தையும் கர்நாடகம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என அறிவுரை வழங்க 21-3-2015 அன்று தமிழக முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்திற்கும், இது தொடர்பாக 26-3-2015 அன்று மனு ஒன்றை (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்ததற்கும், தனது பாராட்டுதலையும், நன்றியையும் இந்த மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2015 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேகதாதுவில் புதிய அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை கர்நாடகத்தால் தயாரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக எடுக்கவேண்டும் என்றும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணை, நீர்த்தேக்கம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு எந்த ஒரு நடவடிக்கையையும் கர்நாடக அரசு எடுக்கக்கூடாது என கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகள் மத்திய அரசு வழங்கவேண்டும் என்றும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்கவேண்டும் என்றும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தைச் சார்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, இந்தத் தீர்மானத்தை அவர்களிடம் வழங்கி, தமிழகத்தின் கவலையையும், நிலைப்பாட்டையும் எடுத்துரைக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், "அரசினர் தனித் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பாக விளக்க உரை ஏதும் அளிக்கக்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

*கூடாது; தனித் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பின்புதான், அதற்கு விளக்கவுரை அளிக்க முடியும்" என்ற ஒரு விதியைக் கூறி, தற்போது "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதிமுறையை மீறி தனித் தீர்மானம் கொண்டு வருகிறார்" என்று கூறினார். ஆனால், திரு. துரைமுருகன் அவர்கள் சொன்ன விதியை, அவர்களே மீறியிருக்கிறார்கள். 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், காவேரி சம்பந்தமாக இதே அவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பாக, முன்னுரை விளக்கங்கள் எல்லாம் அளித்துவிட்டு, அதற்குப் பின்புதான் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, திரு. துரைமுருகன் அவர்கள், தற்போது, எதை விதிமுறை மீறல் என்று சொல்கிறாரோ, அதே விதிமுறை மீறலை அவர்களே செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அன்று அவர் பேசியிருப்பதை நான் படித்துக்காட்டவேண்டுமா? (குறுக்கீடு) இப்பொழுதுதான் முதன்முறையாக அவருடைய தவறை ஒப்புக்கொண்டிருக்கிறார். நன்றி. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும்போது பேசுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *எப்படியோ எங்கள் தலைவர் வழியில் நீங்கள் நடப்பதற்கு நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் விதிமுறையைச் சுட்டிக்காட்டி, தற்பொழுது விதிமுறையை மீறி தனித் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்று எங்களைச் சொன்னீர்கள். ஆனால், அதே விதிமுறை மீறலை நீங்களே செய்திருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு) அதில் ஒரு திருத்தம். அப்படியொரு விதிமுறை இருந்தால், அது விதிமுறை மீறல் அல்லது விதிமுறையே இல்லையென்றால், அதை விதிமுறை என்று சொல்வதும் தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)*



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் கேட்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிப் படுகையில். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நான் கேட்கிறேன், உட்காருங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *எப்பொழுது கேட்கப்போகிறீர்கள்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்***:* *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நான் கேட்கிறேன், நீங்கள் உட்காருங்கள். யார் அவ்வாறு கூறியது என்று தெரியவேண்டும் அல்லவா? (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *தற்பொழுது முக்கியமான அரசினர் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது; தமிழர்களுடைய வாழ்வுரிமை பிரச்சினை சம்பந்தமானது. இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு தயவு செய்து அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அமர்ந்துகொண்டு பேச வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிப் படுகையில், மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்கு கர்நாடக மாநில அரசு அவசர, அவசரமாக எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளை எதிர்க்கிற வகையில், கண்டிக்கிற வகையில் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன். கடந்த காலத்தில் தமிழர்களுக்குக் கிடைக்க*

வேண்டிய உரிமைகளைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கின்ற கர்நாடக அரசின் ஏதேச்சதிகார நடவடிக்கைகளைக் கண்டிப்பதோடு மட்டுமின்றி இழந்திருக்கிற உரிமைகளைப் பெறுவதற்கு போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பாராட்டியும், ஆக, ஒரு நடவடிக்கையை எதிர்த்தும், இன்னொரு நடவடிக்கையைப் பாராட்டியும், இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிற அரசினர் தனித் தீர்மானத்தை நான் ஆதரித்து வழிமொழிவதிலே பெருமைப்படுகிறேன்.

*பிற்பகல் 12-05*

காவேரி நதிநீர்ப் படுகையிலே, கர்நாடக அரசு மேகதாது அணையைக் கட்டுவது குறித்த செய்திகள் வந்தபோது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே 2013 மார்ச் 30 ஆம் தேதி, இதே அவையிலே போற்றுதலுக்குரிய முதலமைச்சராக விளங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'என்னுடைய அரசு ஒருபோதும் இந்த அணையை உருவாக்குவதற்கு அனுமதிக்காது; அதை எந்த வகையிலும் தடுத்து நிறுத்தும்' என்று, இந்தச் செய்திகளின் தொடக்கத்திலேயே, இதே அவையிலே எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த அந்தப் பதிலை நான் மீண்டும் நினைவு கூர்ந்து, இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வழியிலே கடந்த ஆண்டு இறுதியிலே டிசம்பர் மாதத்திலேகூட, இந்த அவையிலேயே ஓர் அரசினர் தனித் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி, அதை மத்திய அரசிற்கு நினைவூட்டியிருக்கிறோம்; தக்க நடவடிக்கைகள் வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம்; ஒருமனதாக அந்தத் தீர்மானத்தை நாம் இங்கே நிறைவேற்றியிருக்கிறோம் என்பதையும் நான் மீண்டும் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும்கூட, கர்நாடக அரசு தன்னுடைய நடவடிக்கைகளிலிருந்து கொஞ்சமும் பின்வாங்காமல், தமிழர்களுடைய உரிமைகளை, கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இப்போது அம்மாநில நிதிநிலை அறிக்கையிலே, இதற்காக ரூ.25 கோடியை ஒதுக்கீடு செய்து, அந்த ஒதுக்கீட்டின் தொடர் நடவடிக்கையாக, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளும்,





கோரப்பட்டிருக்கின்றன என்பதோடு மட்டுமல்லாமல், அந்த மாநிலத்தின் நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு பாட்டீல் அவர்கள், 'நாங்கள் கட்டியே தீருவோம், அதை எந்தவகையிலும் நிறுத்த முடியாது' என்று கொக்கரித்திருக்கிறார். இந்த வேளையில் நாம் ஒருமித்து இந்தப் போக்கைக் கண்டித்து, நிச்சயம் இதற்கு ஒரு நல்ல முடிவைக் காண, மத்திய அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அதனை நிர்ப்பந்திக்க வேண்டிய நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றோம்.

1898 ஆம் ஆண்டிலே, மைசூர் சமஸ்தானம் இருந்தபோது, ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனுடைய நெடிய வரலாற்றை இங்கே மிகச் சுருக்கமாகத் தன்னுடைய முன்னுரையிலே கோடிட்டுக் காட்டினார்கள். 100 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கின்றது. கடந்த 80 ஆண்டுக்காலமாக இந்த தாவா இருந்துகொண்டிருக்கின்றது. இவ்வளவு நெடிய பிரச்சினையிலே கடந்த காலங்களிலே எப்போதெல்லாம் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தாரோ, அப்போதெல்லாம் அவர் உச்ச நீதிமன்றமூலம் மிகப்பெரிய நெருக்கடியை கர்நாடக அரசிற்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி படிப்படியாக அவர் போராடிப் போராடி, ஒவ்வொரு படியிலும் அந்த வெற்றியை பெற்று வந்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட தமிழக மக்கள், விவசாய மக்கள் ஒன்றுபட்டு, கடந்த ஆண்டு விவசாய மண்டலத்தின் தலைநகரமாக இருக்கக்கூடிய தஞ்சைத் தமிழ் மண்ணிலே, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தீர்ப்பினை அரசிதழில் பதிவு செய்த சாதனைக்காக 'பொன்னியின் செல்வி' என்று பட்டம் தந்து பெருமைப்படுத்தினார்கள். தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தஞ்சையில் வந்து சேர்ந்தார்களோ என்று எண்ணுகிற அளவிற்கு, இலட்சக்கணக்கிலே அங்கு விவசாயிகள் திரண்டு, 'பொன்னியின் செல்வி' என்கிற ஒரு பட்டத்தைத் தந்து பெருமைப்படுத்தினார்கள் என்பதையும் இந்த நேரத்திலே மக்கள் மன்றத்திலே ஏற்கெனவே அவர்கள் அந்தப் பாராட்டைப் பதிவு செய்திருக்கிறார்கள். அந்தவகையில்தான், இன்றைக்கும் இந்தப் பேரவையிலே இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2015 மார்ச் 27

இந்த நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இரண்டு நடவடிக்கைகள் உள்ளன; ஒன்று, அரசின் நடவடிக்கை, இன்னொரு நடவடிக்கை, நீதிமன்ற நடவடிக்கை. இந்த அரசு நடவடிக்கை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிலும், நம்முடைய மாநில அரசு மிகத் தெளிவாக ஒவ்வோர் அணுகுமுறையையும் பின்பற்றியிருக்கிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியிருக்கிறது. நாம் இங்கே கூட்டாட்சித் தத்துவத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறோம்; இரட்டை ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மத்திய ஆட்சி மற்றும் மாநில ஆட்சி என்ற இரட்டை ஆட்சி முறையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த இரட்டை ஆட்சி முறைக்கு, மத்திய கூட்டாட்சித் தத்துவத்திற்கு, எங்கே களங்கம் உருவாகிவிடுமோ, பங்கம் உருவாகிவிடுமோ, அதிலே எங்கே ஓட்டை விழுந்துவிடுமோ என்று நாமெல்லாம் அஞ்சுகிற அளவிற்கு, ஜனநாயகத்தின் தன்மையையே சீர்குலைக்கிற அளவிற்கு, “உச்ச நீதிமன்றத்திற்கும் நாங்கள் கட்டுப்படமாட்டோம், மத்திய அரசின் முடிவுகளுக்கும் நாங்கள் கட்டுப்படமாட்டோம், மத்திய அரசின் ஆணைகளுக்கும் கட்டுப்படமாட்டோம்” என்று ஒரு மாநில அரசு தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. இப்படி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் கட்டுப்படாமல், மத்திய அரசின் நிருவாக நெறிமுறைகளுக்கும், பரிந்துரைகளுக்கும் கட்டுப்படாமல் மாநில அரசு, தானே ஒரு சட்டம் இயற்றியது. அந்தச் சட்டம் செல்லாது என்று அறிவித்த பிறகும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்று சொன்னால், இதற்கு முழுக்க, முழுக்க அரசியல்தான் காரணமாக இருக்கிறது.

பிற்பகல் 12-10

அதுமட்டுமில்லாமல், இந்தக் கூட்டாட்சித் தத்துவத்தையே தகர்த்தெறிகிற அளவிற்கு இந்த நடவடிக்கைகள் இருக்கின்றன என்கிறபோது அஞ்ச வேண்டியிருக்கிறது. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது, நம்முடைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, கோரிக்கை மனுவைத் தந்து, இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துகிற வகையிலே வலியுறுத்துவார்கள் என்று சொன்னார்கள். தேவைப்பட்டால், நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் அழைத்து, பிரதமர் அவர்களைச் சந்தித்து, மத்திய அரசை நிர்ப்பந்திக்கவேண்டும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



2015 மார்ச் 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இது நீண்ட, நெடிய பின்னணிமிக்க வழக்கு குறித்த ஒரு வரலாறு; நம்முடைய ஒட்டுமொத்த 10 கோடி தமிழர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுகிற வரலாறு; ஆகவே, இதில் வேடிக்கையோ, வியப்போ அல்லது சிரிப்பதற்கோ எதுவும் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்சினைகளை, இந்த உரிமைகளை நாம் தீர்த்துக்கொள்வதற்கு ஒரு மிகப் பெரிய நிர்ப்பந்தத்தை மத்திய அரசுக்கு ஏற்படுத்திடவேண்டும். இங்கே நம்முடைய ‘எதிர்ப்பு’ என்கிற வார்த்தையைச் சுட்டிக்காட்டுகிற வகையிலே இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டு முன்மொழிந்திருக்கிறோம். அந்த எதிர்ப்பை எல்லா வகையிலும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கிற வகையிலே, மாநில அரசு எடுக்கிற நடவடிக்கைகள் இருக்கவேண்டும். போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப் பெரிய ஒரு மைல் கல்லை இந்த வழக்கிலே உருவாக்கியிருக்கிறார்கள். வேறு எவரும் செய்ய முடியாத சாதனையை, உச்ச நீதிமன்ற வழக்கிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய அணுகுமுறையும், அவர்களுடைய தேர்ந்த அரசியல் தெளிவும் உருவாக்கியிருக்கின்றன. இன்றைக்கு அதன் தொடர்ச்சியாய், இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வாழ்த்தி, வரவேற்று, வழிமொழிந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மிக முக்கிய நீராதாரமாக இருக்கிற, ஜீவ நதியாக விளங்குகிற காவேரி ஆற்று நீர் உரிமைக்காக, 100 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டிற்குரிய, நமக்கான காவேரி நீர் உரிமையை மீட்டெடுக்க பல நிலைகளில் நம்முடைய அரசு போராடி, இறுதியாக காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணையைப் பெற்றது. தமிழ்நாட்டினுடைய காவேரி ஆற்று நீர் உரிமையில் வேறு எந்த அரசாலும், எந்தச் சூழ்நிலையிலும் தமிழர்களுக்கான உரிமையைத் தடுத்து நிறுத்திவிட முடியாத அளவிற்கு, உச்ச நீதிமன்ற ஆணையைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசாங்கத்தினுடைய அரசிதழிலே வெளியிடச் செய்தவர், தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினுடைய வாழ்வாதாரத்தைத் தொடர்ந்து பாதுகாத்து மக்களின் இதய

சிம்மாசனங்களிலே வீற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த வலிமையான அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, காவேரி நடுவர் மன்றத்தினுடைய ஆணையைச் செயல்படுத்துவதற்காக காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் உடனடியாக அமைத்திட கர்நாடக அரசை மத்திய அரசு வலியுறுத்தவேண்டும் என்கின்ற தீர்மானம் ஏற்கெனவே நம்முடைய சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகும்கூட, மத்திய அரசாங்கம் கர்நாடக அரசின்மீது உரிய அழுத்தத்தைத் தந்து, அந்தக் குழுவை அமைத்து நம்முடைய நீராதாரத்தை உறுதி செய்யாத நிலையிலே, இப்பொழுது கர்நாடகம் மீண்டும் நமக்கான காவேரி ஆற்று நீர் உரிமையைத் தடுக்கிற வகையிலே, நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை மத்திய அரசாங்கத்தினுடைய அரசிதழிலே வெளியிட்ட பிறகும்கூட, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையே மதிக்காமல் கர்நாடக அரசு மேகதாதுவில் அணையை கட்டி, நம்முடைய நீராதாரத்தைத் தடுக்க முயன்றிருப்பது இந்திய கூட்டாட்சித் தத்துவத்திற்கும், நீதி பரிபாலனத்திற்கும் எதிரானது, முரணானது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு நாம் மீண்டும் உச்ச நீதிமன்றத்தையே நாடவேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உச்ச நீதிமன்றத்தை நாடி நமக்கான உரிமையைப் பெறுவதற்குப் போராடுகிறது. சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி, மீண்டும், மீண்டும் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். இன்று மீண்டும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற தமிழ்நாடு அரசாங்கத்தின் தொடர் நடவடிக்கையைப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-15

கேரள அரசாங்கம் எப்படியெல்லாம் முயன்றபோதும்கூட, அதற்காகத் தனிச் சட்டம் இயற்றியும்கூட, உலகமே எதிர்த்தபோதும்கூட, உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி, முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சாதனையைப் பெற்றுத் தந்தவர் மக்களின்



முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே காவேரி ஆற்று நீர் உரிமையிலும், இறுதி ஆணை செயல் வடிவம் பெறுவதிலும், காவேரி மேலாண்மை வாரியத்தை உருவாக்குவதிலும், நீர் ஒழுங்குமுறைக் குழுவை உருவாக்குவதிலும் கட்டாயமாக வெற்றி பெறுவார். அவர் முயன்று தோற்றதாக வரலாறே இல்லை. அவர்தான் தமிழகத்தினுடைய ஒப்பற்ற மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய இந்தத் தொடர் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை பாராட்டி வரவேற்கிறது. மத்திய அரசாங்கத்தை மீண்டும், மீண்டும் இந்தத் தீர்மானத்தின் வாயிலாக வலியுறுத்தி, கர்நாடக அரசு மேகதாதுவிலே அணை கட்டுகிற நிலையைத் தடுக்கவேண்டும்; நீர் மின் திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து, வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு காவேரியின் குறுக்கே மேகதாதுவில் இரண்டு அணைகளைக் கட்ட முயற்சிப்பதைத் தடுக்க வேண்டும்; அதைக் கட்ட விடக்கூடாது; கட்டுவதை நிறுத்தவேண்டும். இதிலே மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இன்றையதினம் இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதேபோன்று தமிழகத்திலுள்ள விவசாயிகள், குறிப்பாக, டெல்டா பகுதிகளிலுள்ள விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையிலே, தமிழகத்தினுடைய குடிநீருக்காகப் பயன்படுத்துகின்ற காவேரி நீரைப் பாதுகாக்கின்ற வகையிலே, இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் வழிமொழிந்து, வரவேற்கிறது.

கர்நாடக அரசு தனது நிதிநிலை அறிக்கையிலேயே கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த அணையைக் கட்டுகின்ற முயற்சியை மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது; உண்மையிலேயே வருத்தம் தரக்கூடியது. மாண்புமிகு புரட்சித்

[திரு. பி.வி. கதிரவன்] [2015 மார்ச் 27

தலைவி அம்மா அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்து மனு கொடுத்திருக்கிறார்கள். 2-9-2013 மற்றும் 3-9-2013 ஆகிய தேதிகளிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் 12-11-2014 அன்றும் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதி, இதிலே உடனடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இதுவரை மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அதனால் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலே 11-4-2014 அன்றும், 18-11-2014 அன்றும் மனு தாக்கல் செய்து, அதற்கான முயற்சிகள் மேற்கொண்டும்கூட, இன்னும் அது நிலுவையில் இருந்து வருவதால், உச்ச நீதிமன்றத்திலே கூடுதல் பிரமாண வாக்குமூலம் நேற்றையதினம் 26-3-2015 அன்று தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

கர்நாடகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. காங்கிரஸ்காரர்கள் இந்தியாவை பல வருடங்களாக ஆண்டு வருகிறார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு அதிகமான ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். நதிநீர்ப் பிரச்சினையில் இந்திய அளவிலே ஒரே கொள்கை உண்டு என்று சொல்பவர்கள். ஆனால், கர்நாடகத்திலே உள்ள காங்கிரஸ் ஆட்சி, மேகதாதுவிலே இரண்டு அணைகளைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற காங்கிரஸ் தலைவர் திரு. இளங்கோவன் அவர்கள், 'அது தவறு; அது கூடாது; தமிழக மக்களைக் காப்போம்' என்று அறிக்கை விடுகிறார். அகில இந்திய கட்சியாக இருந்துகொண்டு, இதுபோன்று மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட கருத்துகளைச் சொல்வது கண்டிக்கத்தக்கது.

அதேபோன்று, இந்தியாவினுடைய பிரதமராக இருக்கின்ற திரு. மோடி அவர்கள், "இந்தியாவினுடைய சரித்திரத்தை மாற்றுவோம்; இந்தியாவிற்கு ஒரு புதிய வலிமையைக் கொடுப்போம்" என்று சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், இந்தச் சட்டமன்றத்திலே கடந்த 5-12-2014 அன்று, இதே பிரச்சினைக்காகத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும்கூட, இதுவரை கண்டுகொள்ளாமல் இருந்து வருவதற்காக, இன்றையதினம் இருக்கின்ற மத்திய அரசை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்த அடிப்படையிலே, தமிழக மக்களுடைய ஜீவாதார உரிமையாக இருக்கின்ற, விவசாயிகளுடைய ஜீவாதார உரிமையாக இருக்கின்ற காவேரி ஆற்றில், மேகதாதுவில் கர்நாடக



2015 மார்ச் 27] [திரு. பி.வி. கதிரவன்]

அரசு அணைகள் கட்டுவதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். அதே நேரத்தில், தமிழக மக்களையும், விவசாயிகளையும் பாதுகாக்கின்ற வகையிலே, நிச்சயமாக இந்தத் தீர்மானம் மிகவும் தேவையான தீர்மானம். இந்தத் தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கவேண்டும். ஒட்டுமொத்தமான ஆதரவு தமிழகத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கவேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் நடைபெறுகின்ற இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி வழிமொழிந்து வரவேற்கிறது. நன்றி.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி காவேரியிலிருந்து தமிழகத்திற்கு உரிய நீரைப் பெறுவதற்கு காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்கவேண்டும் என்றும், கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரியில் நீரவாரி நிகமம் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட திட்டத்தையும் தடுத்திட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும், கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்கவேண்டும் என்றும், 5-12-2014 அன்று இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. அந்தத் தீர்மானத்தின்மீது மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேகதாது நீர் மின் திட்டம் மற்றும் வேறு பல திட்டங்களையும் நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை 2-9-2013 அன்று கடிதம் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், கர்நாடக அரசுக்கு அறிவுரை வழங்கும்படி பாரதப் பிரதமர் அவர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-9-2013 அன்று கடிதமும் அனுப்பியுள்ளார்கள்.

[திரு. ஆ. நாராயணன்] [2015 மார்ச் 27

அதுமட்டுமல்லாமல், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும்வரை, தற்போதைய நிலையையே கடைப்பிடிக்கவேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உத்தரவிடக் கோரியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு 11-4-2014 அன்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. இது தொடர்பாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் தமிழக முதல்வர் அவர்களால் 12-11-2014 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கும், 18-11-2014 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் ஓர் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

மேகதாதுவில் அணை கட்டுவதற்காக விரிவான அறிக்கை தயாரிப்பதற்காக கர்நாடக அரசு 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கியிருப்பது வருத்தம் அளிக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தை கர்நாடக அரசு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அறிவுரை வழங்குமாறு 21-3-2015 அன்று தமிழக முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளதோடு, உச்ச நீதிமன்றத்தில் 26-3-2015 அன்று ஒரு மனுவையும் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதற்காக சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு உடனடியாக எடுக்கவேண்டும். காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும்வரையிலும், தமிழக அரசின் அனுமதியின்றி மேகதாதுவில் அணை மற்றும் நீரைத் தேக்கும் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது. கிட்டத்தட்ட 20 மாவட்டங்களைச் சார்ந்த மக்களின் குடிநீர் பிரச்சினையைப் பார்க்கும்போதும், மூன்று போகம் விளையக்கூடிய தஞ்சை டெல்டா மாவட்ட மக்களின் நிலையைப் பார்க்கின்றபொழுதும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

கர்நாடக அரசு ஓர் அணை கட்டுவதற்கு அனுமதி வாங்கி, மூன்று அணைகளைக் கட்டியுள்ளது. அதேபோன்று இந்த அணையைக் கண்டிப்பாகக் கட்டக்கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் உறுதியாக இருக்கவேண்டும்.



2015 மார்ச் 27] [திரு. ஆ. நாராயணன்]

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தும் வழக்கில் தமிழக அரசு வெற்றி பெற்றிருக்கிறது. அதேபோன்று, இந்த வழக்கிலும் வெற்றி பெறுவார்கள் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வழிமொழிந்து, நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களுடனான தமிழகத்தின் நதி நீர் உரிமைகளை, ஆதாரங்களைப் பெறுவதில் தமிழ்நாடு அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் புதிய தமிழகம் கட்சி தன்னுடைய முழு ஆதரவை நல்கும் என்று இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இந்திய தேசம் ஓர் கூட்டாட்சித் தத்துவத்திற்கு உட்பட்டது. அந்த வகையில், பல மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற நதிகளில், அந்தந்த மாநில அரசுகள் அதன் உரிமைகளைப் பெறுவதற்குண்டான தகுதி பெற்றுள்ளன என்பதை முற்றிலும் மறந்துவிட்டு, அது காவேரி பிரச்சினையானாலும் சரி, முல்லைப் பெரியாறு பிரச்சினையானாலும் சரி, பாலாற்றுப் பிரச்சினையானாலும் சரி, அண்டை மாநிலங்கள் ஒருதலைப்பட்சமான அணுகுமுறையைக் கையாளுகின்றன.

பிற்பகல் 12-25

காவேரி பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், நாம் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுக் காலத்திற்கு மேலாக நம்முடைய உரிமைகளைப் பெறுவதிலே போராடி வருகின்றோம். காவேரி ஆற்றினுடைய குறுக்கே மேகதாதுவில் எந்தவிதமான தடுப்பணைகளும் கட்டக்கூடாது என்று தமிழக அரசு ஏற்கெனவே பல நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கின்றது. அந்தவகையில், இந்த மன்றத்தில் 5-12-2014 அன்று இதேபோன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியும்கூட, அந்தத் தீர்மானத்திற்கு எந்தவிதமான மதிப்பும், மரியாதையும் கொடுக்காமல், நடப்பு நிதிநிலை

அறிக்கையில் கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கின்றது. இன்றைக்குத் தமிழக அரசின் முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தில், தொடர்ந்து நாம் வலியுறுத்தி வருகின்ற காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது, காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைப்பது, எந்தக் காரணத்தைக் கொண்டும் மேகதாதுவில் அணையைக் கட்ட கர்நாடக அரசிற்கு அனுமதியளிக்கக்கூடாது என்று மூன்று முக்கியமான விஷயங்களை நாம் வலியுறுத்தியிருக்கின்றோம். ஆனால், இந்த மூன்று முக்கிய விஷயங்களிலும் நடவடிக்கை எடுக்கவேண்டிய மத்திய அரசு ஒரு மென்மையான போக்கையே கையாளுவதாகத் தோன்றுகிறது. 5-12-2014 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் போன்றே நம்முடைய ஆழ்ந்த வருத்தத்தையும், வெறும் எதிர்ப்பையும் தெரிவித்தால் மட்டும் போதாது என்று நான் கருதுகிறேன். மாறாக, கண்டனமாகத் தெரிவித்தால் சரியாக இருக்கும். தொடர்ந்து நாம் வெறும் தீர்மானத்தை மட்டுமே நிறைவேற்றிக் கொண்டு, நம்முடைய கவலையையும், வருத்தத்தையும் தெரிவிப்பதை விட்டு, விட்டு, கடுமையான கண்டனமாக கர்நாடக அரசிற்கு தெரிவிப்பதன் மூலமாக, இதற்கு ஒரு விடிவுகாலம் வரும் என்ற நம்பிக்கையில், கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. மற்றபடி இந்தத் தீர்மானத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விரோதமாக கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்டுவது குறித்து நம்முடைய எதிர்ப்பை வெளிப்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று முன்மொழிந்து இருக்கக்கூடிய தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் நெஞ்சார வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். கர்நாடகா இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் ஒன்றுதானா என்பதுதான் அந்தச் சந்தேகம். காரணம் என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக





முன்னுரையில் பேசும்பொழுது, கடந்த காலங்களில் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு, காவேரி தீர்ப்பாயத்தின் உத்தரவு, இவற்றையெல்லாம் கர்நாடக அரசு எப்படி சற்றும் மதிக்காமல் நடந்து வந்திருக்கின்றது என்பதை மிக விரிவாகவே இங்கே எடுத்துரைத்தார்கள். உண்மையில் பார்க்கும்போது, கர்நாடகாவிற்கு காவேரி ஆற்றின் குறுக்கே, கிருஷ்ணராஜசாகரில் மட்டும்தான் அணையைக் கட்டுவதற்கு உரிமை உண்டே தவிர, அதைத் தவிர கர்நாடகம் கட்டியிருக்கக்கூடிய மூன்று அணைகளும் சட்ட விரோதமாக கட்டப்பட்டதுதான். இப்போது மேகதாதுவில் அவர்கள் அணை கட்டுவதற்கு உண்மையான நோக்கம் என்னவென்றால், கிருஷ்ணராஜசாகரிலிருந்தும், கபினியிலிருந்தும் வெள்ளம் பெருக்கெடுக்கும் நேரங்களில் மிதமிஞ்சி வரும் தண்ணீர், மேட்டூர் அணைக்கு வரக்கூடிய நிலையில்தான் நாம் காவேரி ஆற்றின் நீரைப் பெற்று வருகின்றோம். இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு நீண்ட கால சதியின் அடிப்படையில்தான் மேகதாதுவில் இரண்டு அணைகள் மட்டுமல்ல; கிருஷ்ணராஜாசாகர் உட்பட, கபினி உட்பட, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய நான்கு அணைகளையும் சுற்றி, நான்கு தடுப்பணைகளைக் கட்டுவதும் இந்தத் திட்டத்திலே அடக்கம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழ்நாடு சட்டமன்றத்திலே நாம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றோம். காவேரி தீர்ப்பாணையத்திலே ஒரு இறுதித் தீர்ப்பு (final award) வழங்கி, எந்த அணையையும் கட்டக்கூடாது என்று இருந்தபோதிலும்கூட, அதையும் மீறி, கர்நாடகம் இந்த அணையைக் கட்டக்கூடிய ஒரு சூழலிலே, கடந்த மார்ச் 12 ஆம் தேதி கர்நாடகத்தினுடைய நீர்வளத் துறை அமைச்சர் எம்.பி. பாட்டீல் அவர்கள் பேசும்போது, மேகதாதுவிலே அணை கட்டும் விவகாரத்திலே அதைக் கைவிடுவதற்கான பேச்சே இல்லையென்று மிகத் தெளிவாகவே சொல்லி, அதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்காக தாங்கள் என்னவெல்லாம் செய்யப் போகின்றோம் என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிற்பகல் 12-30

புதிதாக மாண்டியா உள்பட கர்நாடகத்தினுடைய பல மாவட்டங்களில் விவசாயத்தினுடைய பாசனப் பகுதிகளை அதிகரிக்கக்கூடிய திட்டமும் அவர்களிடம் உண்டு. கேட்டால் மைசூருக்கும், பெங்களூருக்கும் தேவையான குடிநீருக்காக வேண்டிதான் இந்தத் திட்டம் என்று அவர்கள் தவறான

தகவல்களைச் சொல்லக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கின்றோம். இந்த நிலையில் நம்முடைய தமிழக சட்டமன்றம் 5-12-2014-லிலே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. அதற்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 12-11-2014-லிலேகூட இந்தப் பிரச்சினை பற்றி கடிதம் எழுதியிருக்கின்றார்கள். ஆனால், "இந்தியாவை ஒரே இந்தியாவாகப் பார்க்கின்றோம்; மிகவும் வலிமையான இந்தியாவாக மாற்றுவோம்" என்று சொல்லக்கூடிய திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அரசு, தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்த விஷயத்திலே ஓரவஞ்சனையாக நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கின்றோம்.

தமிழக விவசாயிகள் கடந்த டிசம்பரில் டெல்லியிலே இதுதொடர்பாக தொடர்ச்சியான உண்ணா நிலை போராட்டத்தை மேற்கொண்டபோது அவர்களைப் பார்ப்பதற்குக்கூட பிரதமர் மோடிக்கு நேரமில்லை. Twitter-ல் உட்காருவதற்கு நேரம் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழலில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய இதேநேரத்திலே 2, 3 விஷயங்களை நான் சொல்ல விரும்புகின்றேன். சட்டசபைக்கு உள்ளே மட்டுமல்ல; சட்டசபைக்கு வெளியிலேயும்கூட தமிழகக் கட்சிகள் அனைத்தும் கர்நாடகத்தினுடைய சட்ட விரோதப் போக்கை எதிர்ப்பதிலும், "நாங்கள் முனைப்பாக ஒற்றுமையாக இருக்கின்றோம்" என்பதைக் காட்டுவது காலத்தின் அவசியமாக இருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையிலே நாளையதினம் நடைபெறக்கூடிய விவசாய சங்கங்கள் முன்னெடுத்திருக்கக்கூடிய, பல்வேறு கட்சிகள் ஆதரித்திருக்கக்கூடிய கடை அடைப்புப் போராட்டத்திற்கு ஆளுங்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய ஆதரவைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல் டெல்லியில் உள்ள நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து, இந்தத் தீர்மானம் குறித்து பிரதமரைச் சந்தித்து கோரிக்கை மனு வைப்பார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு நல்ல அறிவிப்பையும் இங்கே செய்தார்கள்.

விவசாயிகள் உள்பட அனைத்து மக்களுடைய விருப்பம் என்னவாக இருக்கின்றதென்றால் மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் தலைமையிலே அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்துச் சங்கங்களுடைய பிரதிநிதிகள் குழு நேரடியாக பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்து கர்நாடகம் சட்டவிரோதமாக நடந்துகொண்டிருக்கின்றது, இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு தூதுக் குழு செல்ல வேண்டும் என்பதுதான். எனவே, அதற்கு நீங்கள் வழிவகுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் கர்நாடக அரசு, மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்கு தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது சட்டவிரோதமான செயலாகும். அதுமட்டுமின்றி, இந்திய அரசின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான செயலாகும். இதுதொடர்பாக தமிழக அரசு சட்ட ரீதியாக தொடர்ந்து போராடிக் கொண்டு வருகின்ற சூழ்நிலையிலும், மத்திய அரசு பாராமுகமாகவே தமிழகத்தைப் பார்த்து வருகிறது. இதுமட்டுமன்றி, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு வெளியானவுடன், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற உத்தரவு இருந்தபோதும், இதுவரை அதை நடைமுறைப்படுத்த மத்திய அரசு செவிசாய்க்காமல், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்ளது. தொடர்ந்து நடைபெற்று வரும் இந்தச் சட்டப் போராட்டங்களின் விளைவாக கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தற்போதைய நடுவண் அரசின் நீர்வளத் துறை அமைச்சர் செல்வி உமாபாரதி அவர்கள் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படுமென்று கூறினார்கள். உடனடியாக கர்நாடக அரசு, கர்நாடகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தன்னுடைய பிரதிநிதிகளையும் டெல்லிக்கு அனுப்பி, பிரதமர் அவர்களையும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்ததன் விளைவாக, இன்றுவரை அந்த நடுவண் அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில்,

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்களும், பிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்து, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்; மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு அணை கட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று வலியுறுத்திய பிறகும், இன்று வரை மத்திய அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

பிற்பகல் *12-35*

எனவே, தமிழக அரசு சட்டரீதியாக மட்டுமில்லாமல், அரசியல்ரீதியாகவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழகத்திலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததுபோல், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சி விவசாயப் பிரதிநிதிகளையும் இணைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை டெல்லிக்கு நேரடியாக அனுப்பி பிரதமரிடம் அழுத்தம் தெரிவித்து, வலியுறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், நாளை நடைபெறவிருக்கும் விவசாயிகளின் போராட்டத்திற்கு தமிழக அரசு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. இது நம்முடைய பிரச்சினை; நம்முடைய உரிமைப் பிரச்சினை; தமிழக மக்களுடைய உரிமைப் பிரச்சினை; கர்நாடக அரசு செய்யக்கூடிய இந்தச் செயலால் ஏற்பட்ட பிரச்சினை. இது கண்டிக்கக்கூடியது. எந்த அரசாக இருந்தாலும், தமிழகத்திற்கு எதிராக பிரச்சினை இருக்கிறபோது, தமிழர்கள், தமிழின மக்களாகிய நாம் ஒருங்கிணைந்து, அதை எதிர்க்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. கேரளத்தின் மாண்புமிகு முதல்வர் உம்மன் சாண்டி அவர்கள் என்னுடைய இனிய நண்பர். ஒருமுறை அவரைச் சந்தித்தபோதுகூட, அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தபோதுகூட முல்லைப்-பெரியாறு அணைப் பிரச்சினையில்



நாங்கள் விஜெயிக்கும் என்று சொன்னேன். மலையாளத்திலே விஜெயிக்கும் என்றால் வெற்றி பெறும் என்று பொருள். எனவே, தமிழகம் விஜெயிக்கும்; தமிழ்நாடு அரசு விஜெயிக்கும்; வெற்றிபெறும் என்று நான் சொன்னேன். அது இல்லா, நம்முடையது விஜெயிக்கும் என்று அவர் சொன்னார். இல்லை, நீங்கள் விஜெயிப்பது அல்ல, நமது விஜெயிக்கும் என்று மலையாளம் எனக்குத் தெரிந்ததாலே நான் சொன்னேன். இது நம்முடைய உரிமை, நாம் வெற்றி பெற்றோம்.

அதுபோல, கர்நாடக அரசு மேகதாதுவிலே அணைகளைக் கட்டினால் தமிழகத்திற்குக் கிடைக்கக்கூடிய உரிமைகள் பாதிக்கப்படும்; அதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய அரசு திடமாக இதற்கு முடிவு செய்யவேண்டும். தமிழக அரசு இதுசம்பந்தமாக அரசியல் ரீதியாக, நீதிமன்ற ரீதியாக எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளுக்கும் எங்கள் பாராட்டுகளையும், ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறோம். என்னுடைய அன்புக்குரிய தலைவர், தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்கூட கர்நாடக அரசு செய்யக்கூடிய தவறைச் சுட்டிக்காட்டி இருக்கிறார். நாங்களும் அதைத் தவறாமல் ஏற்று, அவர்களைக் கண்டிப்பதோடு, தமிழக அரசு எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளுக்கும் எங்களுடைய ஆதரவு உண்டு என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு காவேரியின் குறுக்கே, மேகதாதுவில் சட்டத்திற்குப் புறம்பாக தடுப்பணை கட்ட எடுக்கும் முயற்சியைக் கண்டிக்கக்கூடிய முறையிலும், அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற முறையிலும், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்கின்ற இந்த 3 தீர்மானங்களை உள்ளிட்டு, ஒரே தீர்மானமாக நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே இன்று முன்மொழிந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி முழுமையாக ஆதரிக்கிறது; வரவேற்கிறது. கர்நாடக அரசு காவேரியின் குறுக்கே அணை

[திரு. எம். ஆறுமுகம்] [2015 மார்ச் 27

கட்டுவது மட்டுமல்ல; தொடர்ந்து தமிழகத்திற்கு வழங்கவேண்டிய குடிநீரை வழங்காமல் இருப்பது சம்பந்தமாகவும், தொடர்ந்து நம்முடைய தமிழகத்தினுடைய மக்களின் முதல்வர் அவர்களால் இதற்கு முன்னாலே பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தும், அதற்கான ஆணையைப் பெற்றும்கூட, இதுவரை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசாங்கம், இதற்கு முன்னாலே ஆட்சி நடத்திய காங்கிரஸ் ஆட்சியும் சரி, இப்பொழுது திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய பாரதீய ஜனதா கட்சியினுடைய ஆட்சியும் சரி, தமிழகத்தை வஞ்சிக்கக்கூடிய முறையில், தமிழகத்தினுடைய நலன்களைப் புறக்கணிக்கக்கூடிய முறையில் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது என்றுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சி கருதுகின்றது. இதற்கு முன்னாலே கடந்த 5-12-2014 ஆம் தேதி இதே சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானத்தை நாம் நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கின்றோம். இருந்தாலும்கூட, மத்திய அரசாங்கம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல எதைப்பற்றியுமே கவலைப்படாமல் தமிழகத்தினுடைய நலன்களைப் புறக்கணிக்கக்கூடிய முறையில், தமிழக விவசாயிகளினுடைய ஒட்டுமொத்த நலன்களைப் புறக்கணிக்கக்கூடிய முறையிலும், காவேரி டெல்டா பகுதியில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான நலன்களைப் புறக்கணிக்கக்கூடிய முறையில் முந்தைய காங்கிரஸ் ஆட்சியும் சரி, மத்தியில் தற்போது ஆட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நரேந்திர மோடியினுடைய ஆட்சியும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12-40

இந்தத் தீர்மானத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக தமிழகத்தின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.25 கோடியை கர்நாடக அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியுள்ளதற்கு இந்த மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கின்றது



2015 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

என்பதோடு, ஆழ்ந்த வருத்தத்தையும், எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்பதையும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கருதுகிறேன். முன்மொழியப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது; பாராட்டுகிறது.

அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரையின் இறுதியில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, பாரதப் பிரதமரிடம் எடுத்துச்சொல்லி, நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முறையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஒரு appeal ஆகக்கூடச் சொன்னார்கள். அவர்களோடு இணைந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளினுடைய பொறுப்பாளர்களையும் இணைத்துக்கொண்டு பிரதமர் அவர்களை சந்திப்பதற்கான முறையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, வழிமொழிந்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு சட்ட விரோதமாக காவேரியிலே மேகதாது என்ற இடத்தில் இரண்டு தடுப்பு அணைகளைக் கட்டுவதற்கு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்வதற்கு நிதிநிலை அறிக்கையில் ரூ.25 கோடி ஒதுக்கியிருப்பதை உடனடியாக மத்திய அரசு தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் உடனடியாக அமைக்கவேண்டும் என்றும் மத்திய அரசை வற்புறுத்துகின்ற இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் முழுமையாக ஆதரிக்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், இந்தத் தீர்மானத்தை தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே பிரதமரை நேரடியாகச் சந்தித்து வற்புறுத்தவேண்டும்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2015 மார்ச் 27

என்கிற அந்தத் தீர்மானத்திற்கும் நான் எனது ஆதரவினைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக காவேரிப் பிரச்சினையில் கர்நாடக அரசு தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருகிறது. உச்ச நீதிமன்ற உத்தரவுகள், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு, நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு உள்ளிட்ட எதையுமே கர்நாடக அரசு மதிக்கவில்லை; பொருட்படுத்தவில்லை.

கர்நாடக அரசினுடைய இத்தகைய சட்ட விரோதமான போக்கின் காரணமாக ஒருமுறை உச்ச நீதிமன்றத்திற்கே கர்நாடக முதலமைச்சரை அழைத்து உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். எனவே, கர்நாடக அரசைப் பொறுத்தவரையில், எதைப்பற்றியுமே கவலைப்படாமல், தன்னடித்த மூப்பாக இந்தக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான், தற்போது மேகதாது என்கின்ற இடத்தில் காவேரியின் குறுக்கே இரண்டு தடுப்பு அணைகளைக் கட்டுவதற்கு ஆய்வறிக்கை செய்வதற்காக ரூ.25 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்நான்கு புனல் மின் திட்டங்கள் சம்பந்தமாக நடுவர் மன்றம் நிலுவையில் வைத்திருக்கின்றது. தமிழகத்தில் இரண்டு, கர்நாடகத்தில் இரண்டு என்கிற இந்த நான்கு புனல் மின் திட்டங்கள் சம்பந்தமாக நடுவர் மன்றத் தீர்ப்பிலேயே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தபோதும்கூட, அதையும் பொருட்படுத்தாமல், தற்போது அங்கே அணை கட்டுவதற்கு ஆய்வுப் பணிக்கு நிதி ஒதுக்கியிருப்பது என்ன, என்பதெல்லாம், "நடுவர் மன்றத் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் நாங்கள் அதைப்பற்றி கவலைப்படமாட்டோம்" என்று அதனை உதாசீனப்படுத்தும் அளவிற்கு இவையெல்லாம் அடையாளமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட முறையிலேதான் கர்நாடக அரசு செயல்பட்டு வருகின்றது என்று சொன்னால், மத்தியிலே ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள், மாறி மாறி மத்தியிலே ஆட்சிக்கு வந்திருப்பவர்கள், தமிழகத்தை வஞ்சிக்கின்ற, தமிழகத்திற்கு துரோகம் இழைக்கின்ற, கர்நாடகத்திற்கு ஆதரவான போக்கை செயல்படுத்துகின்ற காரணத்தினால்தான், இன்றைக்குக் கர்நாடக அரசு இப்படிப்பட்ட போக்கிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்று தமிழகம் கோரியபோது, மத்திய அரசு அமைக்கவில்லை. உச்ச நீதிமன்றம் தலையிட்ட பிறகுதான், வழக்கு போட்ட பிறகுதான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றத்திலே இடைக்கால தீர்ப்பு வந்தபோது, அதனை அரசிதழில் வெளியிடவில்லை. உச்ச நீதிமன்றத்திலே வழக்கு போட்ட பிறகுதான், அந்த நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. பிறகு, அந்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு ஒரு நிருவாக அமைப்பை உருவாக்கவேண்டும் என்று சட்டத்தில் சொல்லியிருந்தாலும், அந்தக் கடமையைக்கூட மத்திய அரசு நிறைவேற்றவில்லை. அதற்கும் தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்திற்குப் போனபிறகுதான், நான்கு முதலமைச்சர்களையும், பிரதமரையும் தலைமையாகக் கொண்ட காவேரி நதிநீர் ஆணையம் என்பது உருவாக்கப்பட்டது.



2015 மார்ச் 27] [திரு. க. பாலகிருஷ்ணன்]

பிற்பகல் 12-45

கடைசியாக 16 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டது. அந்த இறுதித் தீர்பைக்கூட மத்திய அரசினுடைய அரசிதழிலே வெளியிடுவதற்கு மத்திய அரசு தயாராக இல்லை. 6 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து, நீதிமன்றத் தலையீட்டுக்குப் பிறகுதான், அந்த நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழிலே வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டபிறகும்கூட, நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப்போல காவேரி மேம்பாட்டு ஆணையத்தையும், நதிநீர் ஒழுங்கு முறைக் குழுவையும்கூட இன்று வரையிலே மத்திய அரசு அமைக்கவில்லை. ஆகவே, மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக இருக்கவேண்டும் என்கின்ற அந்த அரசியல் கடமை தவறி, தமிழகத்தை வஞ்சிக்கின்ற, தமிழகத்திற்கு துரோகம் இழைக்கின்ற அரசாகத்தான் கடந்த பல ஆண்டுகளாக மாறி மாறி வந்திருக்கின்ற அரசுகள் செயல்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆகவே, மத்திய அரசினுடைய இப்படிப்பட்ட வஞ்சகப் போக்கின் காரணமாகத்தான், கர்நாடக அரசு எதைப் பற்றியுமே கவலைப்படாமல், பாசனப் பரப்பை விரிவுபடுத்தியிருக்கிறது; சட்டவிரோதமாக அணைகளைக் கட்டியிருக்கிறது. கடைசியாக 5-12-2014 அன்று ஒருமனதாக நாம் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும்கூட, மத்திய அரசு அதைப்பற்றிக் கவலையேபடாத நிலையிலேதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2015 மார்ச் 27

எனவே, இந்தச் சூழ்நிலையில் தமிழகத்திலே இருக்கின்ற பல கட்சிகளும் பல போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றன. நாளைக்குக்கூட அரசியல் கட்சிகளின் சார்பிலே ஒரு பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒன்பதாம் தேதி விவசாய சங்கங்கள் சார்பில் இரயில் மறியல், சாலை மறியல் போன்ற போராட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், பல கட்சித் தலைவர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. இராஜா அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் திரு. டி.கே. ரெங்கராஜன் அவர்களும் நேரடியாக விவசாயப் பிரதிநிதிகளை அழைத்துச் சென்று, மாண்புமிகு திரு. மோடி அவர்களிடம், இதில் உடனடியாகத் தலையிட்டு தடுத்து நிறுத்துங்கள் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே செயல்படுகின்றதா என்கின்ற அடையாளமே கொஞ்சம்கூட தெரியாமல், அக்கறையற்ற போக்கிலேதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றோம்; ஆதரிக்கின்றோம்.

அதேசமயத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே சென்று தீர்மானத்தினுடைய நகலைக் கொடுப்பது என்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே அனைத்து அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் சென்று பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, அந்தத் தீர்மானத்தைக் கொடுத்து வற்புறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தைப்போல காவேரியிலே தடுப்பணை கட்டப்படும் என்று சொன்னால், காவேரியிலேயிருந்து ஒரு சொட்டு தண்ணீர்கூட வராமல், டெல்டா பகுதி பாலைவனமாக மாறிவிடுகின்ற ஆபத்து இருக்கின்ற காரணத்தினால், நான் கடைசியாக இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, நீதிமன்றத் தீர்ப்புகள், நடுவர் மன்றத் தீர்ப்புகளையெல்லாம் நாம் பெற்ற பிறகும்கூட, எதுவும் நமக்கு உதவி செய்யாத நிலையிலே இன்றைக்கு இருப்பதற்குக் காரணம் மத்திய அரசினுடைய பாராமுகமான அந்தப் போக்கு. எனவே, நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய உரிமையை மீட்டெடுக்க, பாதுகாக்க, காவேரியிலே நம்முடைய உரிமையை



2015 மார்ச் 27] [திரு. க. பாலகிருஷ்ணன்]

வலியுறுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அனைத்துக் கட்சித் தலைவர்களும் டெல்லியிலே நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி நமது உரிமையை மேலும் வலுவாக எடுத்துச் சொல்வதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்கின்ற என்னுடைய ஆலோசனையை முன்மொழிந்து இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற அரசினர் தனித் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துகளை இங்கே முன்வைக்க இருக்கிறேன்.

முதலில் இந்தத் தீர்மானம் கொண்டுவந்த நோக்கத்தை நான் வரவேற்கிறேன். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. இரண்டாவது, கொண்டுவந்த நேரத்தையும் நான் பாராட்டுகிறேன்; நோக்கம் என்ன? மிகத் தெளிவாக எல்லோரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் மறுபடியும் திருப்பித் திருப்பி, அரைத்த மாவையே அரைத்த மாதிரி பேச விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

நோக்கம் என்ன? மேகதாதுவில் புதிய அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை கர்நாடகத்தால் தயாரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்றும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையில் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றி மேகதாதுவில் அணை, நீர்த்தேக்கம் போன்ற எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் கர்நாடக அரசு எடுக்கக்கூடாது என கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகள் மத்திய அரசு வழங்கவேண்டுமென்றும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டுமென்றும் மத்திய அரசை இம்மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. இதிலே, யாருக்கும் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இதை நாங்கள்

[திரு. துரைமுருகன்] [2015 மார்ச் 27

முழுக்க முழுக்க வரவேற்கிறோம். இதிலே எந்தக் கட்சிக்கும் மாறுபாடு கிடையாது.

பிற்பகல் 12-50

இரண்டாவது, நேரம் எப்படியென்றால், நாம், அரசியல் கட்சிகள் இது தொடர்பாக போராடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இதிலே, உடனடியாகப் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள்தான். முதலில் பாதிக்கப்படுவது காவேரி டெல்டா பகுதி விவசாயிகள் அதற்குப் பிறகு எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். காரணம், எங்கள் ஊருக்குத் தண்ணீர் வேண்டுமென்றாலும்கூட, காவேரியிலிருந்துதான் எடுக்கவேண்டுமென்றும், கிருஷ்ணகிரிக்கு தண்ணீர் வேண்டுமென்றாலும், காவேரியிலிருந்துதான் தண்ணீர் எடுக்கவேண்டுமென்றும் சொல்கிறோம். ஆகையினால், இப்போது குடிதண்ணீருக்கே காவேரி தண்ணீர்தான் நம் நாட்டுக்குத் தேவைப்படுகிறது. எனவே, காவேரி தண்ணீர் இருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு குடிப்பதற்கே தண்ணீர் இருக்கும் என்ற நிலை உள்ளது. இராமநாதபுரம் வரை இந்த நிலை இருக்கிறது. ஆகையினால், விவசாயிகளும், பொது மக்களும் காவேரியிலே நீர் வரவேண்டுமென்பதை முழுக்க முழுக்க விரும்புகிறார்கள். இன்றைக்கு விவசாயிகள் கிளர்ந்து எழுந்து நாளை பெரிய பந்த் நடத்துகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சுட்டிக்காட்டினார்கள். இந்த காவேரிப் பிரச்சினையை ஆரம்பத்திலேயே சுப்ரீம் கோர்ட்டிற்கு கொண்டு சென்றவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள்தான். அதிலேதான் தமிழக அரசு இணைந்துகொண்டது. ஆகையினால், அதே விவசாயப் பெருங்குடி மக்கள்தான் இன்றைக்கு வீதிக்கு வந்து நாளை பந்த் நடத்துகிறார்கள். அந்த பந்த் நடத்துவது பற்றி நான் ஒன்று கேட்கிறேன் ஓர் ஆட்சி பந்த் நடத்தக்கூடாது; அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சுப்ரீம் கோர்ட் இதைத்தான் கடந்த முறை நாங்கள் ஆட்சியிலிருந்தபோதும் தெரிவித்தது. ஆனால், கட்சிகள் சார்பாக பந்த்திலே கலந்துகொள்வதிலே எந்த சுப்ரீம் கோர்ட்டும் உங்களை தடை செய்யாது; கட்சி கலந்துகொள்ளலாம்; அதை யாரும் கூடாது என்று சொல்லமுடியாது. ஆனால், அரசு கலந்துகொள்ளக்கூடாது. நான் ஒன்று கேட்கிறேன். வழக்கமாக சட்டமன்றம் வெள்ளிக்கிழமை முடியும். சனி மற்றும் ஞாயிறு விடுமுறை விடுவீர்கள். மக்களுக்கும் பங்கேற்பு உண்டு;



2015 மார்ச் 27] [திரு. துரைமுருகன்]

எங்களுக்கும் பங்கு உண்டு; நாங்கள் மானசீகமாக உங்களை ஆதரிக்கிறோம் என்ற வகையில், நாளை விடுமுறை விட்டிருக்கவேண்டாமா சார்? நாளைக்கு அவர்கள் பந்த் நடத்திக்கொண்டிருக்கும்போது, நாம் காரிலே ‘சர், சர்’ என்று இங்கு வந்தவண்ணம் இருந்தால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? இப்போதும் ஒன்றும் குடி மூழ்கிப்போய்விடவில்லை. நீங்கள் மதியத்திற்குள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுங்கள். நாளைக்கு ஒரு நாள் ஒத்தி வையுங்கள். அதுதான் போராடுகிற விவசாயிகளுக்கு இந்த மாமன்றம் காட்டுகின்ற மரியாதையாக இருக்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், முன்னவர் அவர்களுக்கும் நான் பணிவன்போடு எனது வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக இந்தத் தீர்மானத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னுரையில் படித்ததற்கெல்லாம் நான் பதில் சொல்லக் கூடாது. ஏனென்று கேட்டால், அதை நான் வெறுக்கிறேன். வழக்கமாக அந்த மாநிலங்களில் எல்லோரும் ஒன்றாகி விடுகிறார்கள். நம் ஊரில்தான் “நீ யோக்கியனா; நீ செய்தாயா?” என்று நாம் அடித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையினால், அவர் சொன்னதற்கு என்னால் பதில் சொல்லமுடியும் என்று அவருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆனால், மீண்டும் அவர் சொல்லமுடியும் என்றும் எனக்கும் தெரியும். இந்த லாலி பாடிக்கொண்டிருந்தோம் என்றால், நமக்குள்ளேதான் போகுமே தவிர, மக்களுக்கு எந்தப் பிரயோஜனமும் கிடையாது. எனவே, அவர் படித்தவர் பெரியவராகவே இருக்கட்டும். நான் அதிலே தலையிடவில்லை. ஆகையினால், இதிலே நான் ஒன்று கேட்கிறேன். நான்கு பத்திகளில் முதல் பத்தியில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இரண்டாவது பத்தியில் பிரச்சினை இல்லை, நான்காவது பத்தியிலும் பிரச்சினை இல்லை.

இதற்கு முன்னால் இன்னொன்று சொல்ல வேண்டும்; மறந்து போய்விட்டேன். உங்கள் ஆட்சி வந்ததிலிருந்து—இந்த மாதிரி ஒரு பெரிய பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட வேண்டாமா சார்? தயவு செய்து சொல்கிறேன் நீங்கள் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டுங்கள். அதிலே பல பேர் தங்களுடைய கருத்துகளைச் சொல்வார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள்

[திரு. துரைமுருகன்] [2015 மார்ச் 27

இருந்த காலத்திலும் சரி, கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலும் சரி, ஏன், அம்மையார் அவர்கள்கூட இதற்கு முன்னால் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதிலே என்ன தவறு? அவர்களெல்லாம் டெல்லிக்குப் போகவேண்டும், வரவேண்டுமென்று சொன்னார்கள். நான் அந்த அளவிற்குக்கூட போகவில்லை. சென்னையிலேயே அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டவேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பிலே அழுத்தந்திருத்தமாக ஒரு கருத்தை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான்காவது இவ்வளவு பெரிய பிரச்சினையில் நாம் மத்திய அரசை கேட்டுக்கொள்கிறோம், போராடப்போகிறோம், தட்டிக் கேட்கப்போகிறோம். உரிமையை ஏன் தடுக்கிறீர்கள் என்று கேட்கப்போகிறோம். விடிந்தால் தமிழகம் கொந்தளித்து நிற்கப் போகிறது. இவ்வளவு பெரிய வரலாற்று சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தில் நீங்கள் எப்போது கடிதம் எழுதினீர்கள், எப்போது பதிலை போட்டீர்கள், எப்போது நீதிமன்றத்திற்குச் சென்றீர்கள் என்று இதையெல்லாம் சொல்கிறீர்கள். சொல்லுங்கள். அதைக்கூடச் சொல்லவில்லை என்றால் அப்புறம் என்ன? சொல்லுங்கள். எல்லாவற்றையும் நாங்கள் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, அதை மறைமுகமாக மகா கெட்டிக்காரத்தனமாக இந்தத் தீர்மானத்தை எழுதியவர்கள், "...தமிழக அரசு தாக்கல் செய்ததற்கும்; தனது பாராட்டுதலையும் நன்றியையும் இம்மாமன்றம் தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழக அரசிற்கு தெரிவிக்கலாம்; அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், இதிலே எடுத்திருக்கிற நடவடிக்கையை நீங்கள் மட்டும்தான் எடுத்திருக்கிறீர்களா?

பிற்பகல் 12-55

இரண்டு வழக்குகள் போட்டிருக்கிறீர்கள், நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. இதே பிரச்சினைக்கு நாங்கள் ஆட்சியில் இருந்தபொழுதும் இரண்டு வழக்குகள் போட்டிருக்கிறோம். இந்தப் புத்தகம் என்னுடையது அல்ல. இது கொள்கை விளக்கக் குறிப்பு 2013-2014. திரு. இராமலிங்கம் PWD Minister ஆக இருந்தபோது கொடுத்த புத்தகம். அதிலே என்ன சொல்லியிருக்கிறார் என்றால், நாங்கள் போட்டிருக்கும்போது "மேட்டூர் அனல் மின் நிலையத்தில் உத்தேசித்தபடி திட்டங்களைச் செயல்படுத்த ஓர் இடைக்கால ஆணை கோரி I.A. மனு உச்ச நீதிமன்றத்தில் 2008 நவம்பரில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



2015 மார்ச் 27] [திரு. துரைமுருகன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், தீர்மானத்தின்மீது கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அய்யா, இதற்கு மேலே என்னால் reasonable ஆகப் பேசமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், வேறு எங்கேயோ போகிறீர்கள். (குறுக்கீடு) வேறு எங்கேயோ வெளியே போகிறீர்கள். (குறுக்கீடு) தீர்மானத்தின்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ததைச் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் வெளியே போகவில்லை. நாங்களும் செய்திருக்கிறோம். உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலேயே நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். ஆகையினாலே, 2008 நவம்பரில் ஒரு interim affidavit போட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு 2009-ல் நாங்களே ஒரு additional Affidavit போட்டிருக்கிறோம். நாங்களும் இப்படி கடிதங்கள் எழுதியிருக்கிறோம், நாங்களும் போய் பார்த்திருக்கிறோம், எல்லாம் செய்திருக்கிறோம். ஏன் இதை மறைத்துவிட்டு நீங்கள் செய்ததை மட்டும் சொல்கிறீர்கள்? அப்போது நீங்கள் செய்ததை மட்டும் நாங்கள் பாராட்டவேண்டுமா? நாங்கள் செய்தது இருக்கவேண்டாமா என்று கேட்கிறேன் அய்யா, இதிலே என்ன தவறு? (குறுக்கீடு) நோக்கத்தை ஆதரிக்கிறோம் என்று நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். எது என்பதற்காகத்தான் சரியாகப் படித்துக் காண்பித்தேன். அதை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். எனவே, நான் இப்போதுகூட சொல்கிறேன், உங்களைப் பாராட்ட வேண்டுமென்று சொன்னால் தனியாக ஒன்று போடுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை. உங்கள் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டுமென்று சொன்னால் பாராட்டிக்கொள்ளுங்கள். ஆனால், நாங்கள் செய்ததை ஏன் மறைக்கிறீர்கள் என்று கேட்கிறேன்.

மூன்றாவது பத்தியில் இருப்பதற்காக என்னுடைய அதிருப்தியை நான் வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. எனவே, இந்தப் பிரச்சினையில் இனிமேலாவது ஒளிவுமறைவு இல்லாமல், யார்

*செய்தார்கள், யார் பெரிய மனிதர்கள் என்று இல்லாமல், தமிழ்நாடு பெரியது என்ற எண்ணத்தோடு நாம் பணியாற்றவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுக்கின்ற வகையில் குடகுவிட்டு குதித்து வரும் காவேரியை கைப் பிடித்து தமிழகம் அழைத்து வர, தன் பேரறிவால் வெள்ளைத் தாளில் கருத்துகளை, உரிமைகளை அறவழியில் முன் வைத்து, தொடர் சட்டப் போராட்டம் நடத்தி, சங்கநாதம் புரிந்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மீத்தேன், கெயில் என மண்ணை மலடாக்க முனைந்தபோது கடுமையாக அதனை எதிர்த்து மண்ணுக்குத் தாய்மையைத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நீர் கல்லணையை நிரப்பியதும், கடைமடைப் பகுதியின் கண்ணீரைத் துடைத்ததும், பொன்னி நதி மீட்டதும், புரட்சிதனைச் செய்ததும், தமிழகத்தின் உரிமையை, தமிழ் இனத்தின் கடமையை, விழிப்பால் தென் தமிழகம் தழைக்கச் செய்ய அறிவுப்படை எடுத்து, விவேகத்தால் வென்றெடுத்து, வெற்றிகளைக் குவித்து, சரம் சரமாய் சாதனைகளைச் செய்து, சரித்திரம் ஆக்கியதும் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தவகையில் தமிழகத்தின் உரிமை காக்க இன்றையதினம் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தினை வரவேற்று, என்னுடைய கருத்துகளையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே*, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள் பார்க்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவோடு அரசினர் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதுகுறித்த சில ஐயப்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசும்போது எடுத்துச்சொன்னார்கள். ஆனால், அவருடைய முன்னுரையில் 'சில பிரச்சினைகளை நான் எழுப்ப முடியும், என்னால் முடியும். அதற்குரிய பதிலையும் உங்களால் தர முடியும்' என்று சொல்லிவிட்டு, சில பிரச்சினைகளை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். நான் அவரிடம் ஒன்றே ஒன்றைத்தான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*16 ஆண்டுகளுக்குப் பின்னால், பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பின்னால் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 2007-ல் வந்தது. அப்போது, நீங்கள் மாநிலத்திலும் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தீர்கள், மத்தியிலும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள்; நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வந்து 4 ஆண்டுகள் வரை தி.மு.க.தான் மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பிலும், மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு, அதிகாரம் படைத்த அந்த இறுதித் தீர்ப்புக்கு முழு வடிவம் தர வேண்டுமென்றால், மத்திய அரசிதழில் அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஒரே நாளில், 24 மணி நேரத்திற்குள் இறுதித் தீர்ப்பினை அரசிதழில் வெளியிடக்கூடிய பொறுப்பும், கடமையும் உங்களிடம் இருந்தது. ஆனால், நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பல்வேறு அரசியல் காரணங்கள், உள்ளேயும், வெளியேயும் இருந்ததால், நான் அதை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்போது அதைக் கூற நான் விரும்பவில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்*

*தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழகத்தின் முதலமைச்சர் என்கிற நிலையில் பலமுறை கடிதங்கள் எழுதி, மத்திய அரசிடமிருந்து எந்தவித பதிலும் வராத சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையை மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் எடுத்துச்சென்று, வாதாடி, போராடி தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையை மீட்டுத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு காவேரி நடுவர் மன்றத்தின் மூலமாக நாம் பெற்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த பெருமை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காவேரி பிரச்சினையில் ஆரம்பக் காலம் தொட்டு இன்றுவரை, ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு செயல்பாட்டிலும் எந்தவிதத்திலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நதிநீர் பிரச்சினையில் விவசாயப் பெருங்குடி மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காப்பாற்றுகின்ற தார்மீக உரிமை பெற்ற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபித்து, சட்டப் போராட்டத்தினை 16 ஆண்டுக் காலம் நடத்தியிருக்கின்றார்கள் என்பதுதான் வரலாறு. அந்த வரலாற்றை ஏற்படுத்தியவருக்கு இந்த மாமன்றத்தின் மூலமாக நாங்கள் நன்றி சொல்ல வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) அது ஏன் உங்களுக்குப் பொறுக்கவில்லை? உங்களுடைய அந்த மனப்பான்மையை நீங்கள் இங்கே வெளிக்காட்டியிருக்கிறீர்கள். இதனை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள் என்பதனை மட்டும் இங்கே சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** இப்படிப்பட்ட unwanted discussion வேண்டாமென்றுதான் நான் தடுத்தேன். முதலமைச்சர் சொல்கிறார், அது அவரே துவக்கி வைத்தது, நான் இதை எதிர்பார்க்கவில்லை. நாளை இங்கே பந்த் நடக்கின்றது. கர்நாடகத்தில் ஒருவருக்கு ஒருவர் அடித்து சாகிறார்கள். ஆனால், பிரச்சினையில் ஒன்றுபட்டிருக்கிறார்கள். கேரளாவிலும் அப்படித்தான். ஆனால், என்ன தலைவிதியோ? தமிழ்நாட்டில் மட்டும் மாறுபட்டு இருக்கிறோம். அதற்குத்தான் நான் மறுத்தேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆரம்பித்து வைத்ததே அவர்கள்தான். உரிய பதிலை நாங்கள் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான், அந்தப் பதில் எங்களிடமிருந்து வந்தது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், அதை விடுங்கள். தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் கேட்ட கேள்விக்கு நீங்களும் பதில் சொல்லிவிட்டீர்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கேள்விக்கு பதிலளிக்க உங்களை நான் அனுமதித்தேன், நீங்களும் பேசினீர்கள். (குறுக்கீடு) மீண்டும், மீண்டும் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் விரிவாகப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாகப் பேசி முடித்துவிட்டீர்கள். என்ன உணர்வு என்றும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் மதியம் ஒரு மணி ஆகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

*பிற்பகல் 1-05*

*உங்களுடைய உணர்வை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அவரும் சொல்லிவிட்டார், முடிந்துவிட்டது. அவ்வளவுதான். தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு) இல்லை. இது எல்லாம் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இது எல்லாம் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடு) இல்லை, இதுவெல்லாம் அவைக் குறிப்பிற்கு வராது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு உரிமை இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதையெல்லாம் நீங்கள் கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதையெல்லாம், நீங்கள் ஏன் பேசுகின்றீர்கள் என்று கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடு)*

[பேரவைத் தலைவர்] [2015 மார்ச் 27

உட்காருங்கள், நீங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை இதோடு முடித்துக்கொண்டால் மிகவும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவ்வளவுதான் விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். எல்லாம் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் பேசிவிட்டீர்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு அவர் பதில் சொல்லிவிட்டார். திரும்பவும் பதில் சொல்லிவிட்டார். சட்டம் எல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் சொல்ல வாய்ப்புக் கொடுத்தேன். கொடுத்த வாய்ப்பில் அவர் பேசிவிட்டார். (குறுக்கீடு)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)*

## 5. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2015-2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

***திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதி, இனம், மொழி என்னும் தமிழகத்தின் உரிமையை தமிழினத்தின் உடமையை விழிப்பால், விவேகத்தால், வெற்றிகளைக் குவித்து பார் போற்றும் எங்கள் வெற்றிக் கொடி நாட்டிய வீராங்கனையே! (மேசையைத் தட்டும் ஒலி) வீர வரலாற்றில் விளைந்த புன்னகையே! தமிழகத்தை வளப்படுத்திய கற்பக



2015 மார்ச் 27] [திரு. எம்.கே. செல்வராஜு]

விருட்சமே! பொற்காலம் படைத்திடும் தாயே! உலகம் போற்றும் உன்னதத் தாயே! சமூகநீதி காத்த மாண்புமிகு மக்களின் முதல்வரே! தமிழ்த் தாயின் தலைமகளே, எங்கள் அன்னையே! வாழும் வள்ளலே! வாழும் வரலாறே! 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் செழிக்க வந்த காவேரித் தாயே! தமிழனை வாழ்விக்க வந்த பொன் மனத் தலைவியே! மூன்றாம் முறையாக பௌர்ணமி நிலவாக நல்லாட்சி நடத்தும் துணிவோடு காத்திடும் எங்களின் தெய்வத் தாயே! தொழிலாளர்களின் விடிவெள்ளியே! மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களே! 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; மீண்டும் தர்மமே வெல்லும்' என்பதற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மைத் திறத்தால் நல்லாட்சி அருளும் கழக நிரந்தர பொதுச் செயலாளர் இதய தெய்வம், தங்கத் தாரகை, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் தங்களால்தான்.

மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில் 100 ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய அனைத்து சாதனைகளையும் முழுவதுமாக நிறைவேற்றியது மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு காணாத வறட்சியாக இருந்தாலும் சரி, கொட்டித் தீர்க்கும் கடும் மழையாக இருந்ததாலும் சரி, சுருட்டிக் கொண்டு போகும் சுனாமியாக இருந்தாலும் சரி, தாண்டவமாடும் தானே புயலாக இருந்தாலும் சரி, அவற்றிலெல்லாம் இருந்து மக்களைக் காக்கும் அரணாக நின்று காக்கும் காவல் தெய்வமே! கருணை உள்ளமே! நீங்கள் தொண்டுள்ளம்; மலைச் சுரங்கம்; பட்ட மரமும் துளிர்க்க வைக்கும் பாசமிகு கருணை வடிவம். உண்மைக்குப் போராடி உழைப்பாலே பெருமை கொள்ளும் உலக பெண்ணினத்தின் ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா என்னும் திருநாமம்; அதுவே எங்கள் வாழ்வில் ஆதாரம், பெண் இனத்தின் பெருமையாய், அன்பின் ஆழத்தை அனைவரிடமும் காட்டி, உறுதியான உள்ளத்துடன் உலகை வலம் வரும் உன்னதப் படைப்பு எங்கள் தெய்வத் தாய். அகத்தில் அன்புடனும், புறத்தில் பண்புடனும்

*பிரமிக்கும் திறமையுடனும் பிரகாசிக்கும் சுடர் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*பொறுமைக்கு இலக்கணமாய், புனிதத்திற்கு பொருத்தமாய், ஆயிரம் பேர் அவலம் செய்தும் அலுக்காத அன்னையுள்ளம்; சோதனைகளைச் சாதனைகளாக்கி வெற்றி காண்பார், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் அடுக்கடுக்கான நலத் திட்டங்கள், நாட்டிலேயே பல நலத் திட்டங்களைச் செயல்படுத்துறாங்க மாண்புமிகு அம்மா. ஏழை எளியவங்க இதயம் குளிர எத்தனையோ திட்டங்கள் பாரம்மா. ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல, சொல்லி இங்கு மாளாது. வஞ்சனையில்லாம நம்ம மாண்புமிகு அம்மா அவர்கள் இருபது கிலோ அரிசியை மாசா மாசம் விலையில்லாம தாராங்க. அது போதாதுனு மிக்சி, கிரைண்டர், மின்விசிறி இந்தா புடி என்றாங்க; உழைத்துப் பிழைக்க ஆடு, மாடுன்னு தாராங்க; பள்ளிக்கூடம் போற பிள்ளைங்க பயன்படுத்த மடிக்கணினியும் தாராங்க. கால் தேய நடந்துபோய் படிச்சதெல்லாம் இப்ப கடந்தகால செய்தியாகப் போச்சு; பறக்குது பாருங்க மிதிவண்டி; பிள்ளைங்க முகத்திலே கொள்ளை மகிழ்ச்சி. பஸ் பயண வசதிகள் வேறு, நம்முடைய புள்ளைங்களுக்கு நான்கு செட் சீருடைகள், புத்தகம், புத்தகப் பை, புவியியல் வரைபடங்கள், புத்தம் புதிய காலணிகள்; அதோட வண்ணப் பென்சில்கள் மற்றும் க்ரேயான்கள்; சதுரங்க விளையாட்டு சாதனம் என்று எல்லாம் தாராங்க, மனக் கவலையின்றி மன நிறைவோடு குழந்தைகள் பள்ளிக்குப் போறாங்க.*

*பிற்பகல் 1-10*

*மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்கு ஆசி வழங்கி, தாலிக்குத் தங்கம் தாராங்க. கால்காசுகூட செலவில்லாம மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே கல்யாணச் செலவையும் ஏத்துக்குது தெரியுமா! கரிசனமா மருத்துவ உதவி கிடைக்குது. நோய் நொடின்னா, அறுவை சிகிச்சைன்னா விரிவான காப்பீட்டுத் திட்டம் அட்டை நின்று பேசும்; மருத்துவச் செலவு ஆயிரமானாலும், அரசே நம்மை கவனிச்சுக்கும்; காய்ச்சல், இருமல் ஆனாலும் நமக்கிருக்கே நடமாடும் மருத்துவமனை. அவசர உதவின்னா 108 ஆம்புலன்ஸ் இருக்கவே இருக்கு. நாட்டு நலத்*





*திட்டங்கள் பலப்பல; கோயில்களில் நடக்குது தினமும் அன்னதானம். சோர்ந்து கிடக்கும் விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் திட்டம். காவல் துறை, சிறைத் துறை அலுவலர்களுக்குத் தவணையில்லா வீட்டு வசதித் திட்டம். பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; நெசவாளர்களுக்கும், மீனவர்களுக்கும் நிறையவே நிவாரணத் திட்டம். சூரிய மின்சக்தி திட்டத்திற்கு ஊக்கம்; காவேரி தண்ணீருக்குக் கடுமையான முயற்சிகள்; விரிவான திட்டங்கள்; ஊராட்சி எங்கும் புதுவாழ்வு திட்டங்கள். பட்டா கிடைக்க வசதி, விடுதலை வீரர்களுக்குப் பென்ஷன் வசதி, முகாமில் வாழ்கிற இலங்கைத் தமிழர்களுக்கு நலத் திட்டங்கள்; இந்துக்களும், கிறிஸ்துவர்களும் யாத்திரை போக வசதி வாய்ப்புத் திட்டம்; மாற்றுத் திறனாளிகள் உற்சாகம் பெற திட்டங்கள்.*

*தொட்டில் குழந்தைத் திட்டம்; பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; மகளிர் எழுத்தறிவுத் திட்டம்; பெண்களின் சுகாதாரத்தினைப் போற்றும் வகையில்* Sanitary Napkin *வழங்கும் திட்டம்; மகளிர் சுகாதார வளாகங்கள்; பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட 13 அம்சத் திட்டம்; 24 மணி நேரமும் மகப்பேறு மருத்துவச் சேவை அளிக்கும் திட்டம்; தாலிக்குத் தங்கத்துடன் உதவித் தொகை வழங்கும் பெண்கள் திருமண உதவித் திட்டம்; தாய்-சேய் நலன் காக்கும் வகையில் நிதி உயர்வு அளித்து, திருத்தியமைக்கப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்.*

*பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், பெண்கள் எழுத்தறிவுத் திட்டம்; தொடர் கல்வித் திட்டம்; அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே பள்ளி, கல்லூரிகள். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். மகளிர் சிறப்பு அதிரடிப்படை; பெண்களின் பொருளாதார நிலையை தாங்களே உயர்த்திக்கொள்ளும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள். மகளிர் தொழில்முனைவோருக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள்; பணிபுரியும் பெண்களுக்கு மகளிர் விடுதிகள்; அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு 6 மாத கால மகப்பேறு விடுப்பு. விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்; உள்ளாட்சிப் பதவிகளில் மகளிருக்கென மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு. சாதனைப்*

[திரு. எம்.கே. செல்வராஜு] [2015 மார்ச் 27

பெண்களைப் போற்றும் வகையில் வீர, தீரச் செயல்கள் புரியும் பெண்களுக்கு 'கல்பனா சாவ்லா விருது' வழங்குதல். சிறந்த பெண்மணிக்கு 'அவ்வையார் விருது' வழங்குதல்;

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சேலம் மாநகரில் 5 ரோடு சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கருத்திற்கொண்டு, அங்கு ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். மேலும், விதி 110-ன்கீழ் 27-5-2014 அன்று பாலப் பணிகள் துவங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவையில் அறிவித்தார்கள். தற்போது 5 ரோடு சந்திப்பில் காலையிலும், மாலையிலும் அதிகப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்கின்ற பணியாளர்கள் உரிய நேரத்தில் செல்ல முடியவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு, இதற்குத் தேவையான நிதியை உடனடியாக வழங்கி பாலப் பணிகளை விரைந்து தொடங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சேலம் மாநகராட்சிக்கு வழங்கிய தனி குடிநீர்த் திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இத்திட்டத்திற்கும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கும் சாலைகளைத் தோண்டி குழாய்களைப் பதித்துள்ளார்கள். இதன்மூலம் பழுதடைந்த சாலைகளைச் சீர்செய்யும் பணிகளை விரைந்து தொடங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அமைதி, வளம், வளர்ச்சி, மன உறுதி, கொடை, அறிவு, ஊக்கம் எனப்படும் அரசருக்குரிய பண்புகளுக்கு உறைவிடமாய் திகழும் தமிழகத்தின் விடிவெள்ளி, ஏழைகளின் இதய தெய்வம் தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவி, தனது அப்பழுக்கற்ற செயலாற்றலால் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள, எங்களின் எழுச்சிமிகு புரட்சித் தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் நல்லாசியுடன், (மேசையைத் தட்டும் ஒலி) 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அனைத்து மக்களுக்கும் பயன்பெறும் வகையில் சான்றோர்களாலும், பத்திரிகையாளர்களாலும் பாராட்டும் வண்ணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



2015 மார்ச் 27] [திரு. எம்.கே. செல்வராஜு]

பிற்பகல் 1-15

கடந்த மூன்றரை ஆண்டுகளில் எங்கள் தன்னிகரில்லா தலைவியின் ஆற்றல் மிகுந்த தலைமையின்கீழ் தமிழகம் அனைத்துத் துறைகளிலுமே வியக்கத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் இடம் பெறச் செய்தது; முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் வகையில் சாதகமான தீர்ப்பினை உச்ச நீதிமன்றத்தில் பெற்றது; (மேசையைத் தட்டும் ஒலி), மாநிலத்தில் மின்சக்தித் துறையில் உற்பத்தியைப் பெருக்கியது போன்றவை எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மட்டுமே செயலாக்க முடியும்.

கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற சமூக நலன் சார்ந்த துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு, வேளாண் மற்றும் உற்பத்திசார் துறைகளில் அதிக முதலீடுகள், பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவது, இதன்மூலம் ஏழை எளியோரின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது இந்த அரசின் மும்முனை நடவடிக்கை ஆகும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்த மாநிலத்தின் நிருவாகம் உருக்குலைந்து இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், தன்னுடைய உறுதியான நடவடிக்கைகளின்மூலம் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றது மட்டுமல்லாது; மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் முழுவதையும் நிறைவேற்றியுள்ளார்கள்.

பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து தக்க வைக்கத் தேவையான முதலீடுகளை செய்திட நிதியைத் திரட்டி வரி வருவாயைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏற்றத்தாழ்வுகளைப் போக்கும்விதமாக "மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி" என்ற ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடங்கியுள்ளது. ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர்,

[திரு. எம்.கே. செல்வராஜு] [2015 மார்ச் 27

தருமபுரி, அரியலூர் போன்ற பின்தங்கிய மாவட்டங்கள் இதனால் வளர்ச்சி பெற தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இடதுசாரி தீவிரவாதம் ஊடுருவ வாய்ப்புள்ள பகுதிகள் உள்ளிட்ட மலைப் பகுதிகளுக்கு சிறப்புக் கவனம் அளிக்கும் வகையில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஒரு சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு, நமது போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மட்டுமே செய்து முடிக்கக்கூடிய செயல் திட்டமாகும்.

அதேபோல வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ், புதுவாழ்வுத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் 2005-ல் தொடங்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில், 120 வட்டாரங்களில் 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1,667 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்மூலம் 1.64 இலட்சம் மாற்றுத் திறனாளிகள் உட்பட 9.63 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளதோடு அதிலே 1,436 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டு வரை இதற்காக 369 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 255.04 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிருவாகத்தை மேம்படுத்தவும், அரசு சார்ந்த சேவைகளைத் திறம்பட அளித்திடவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு முயற்சிகளை "அம்மா திட்டம்" மூலம் எடுத்துள்ளது. அரசின் புதுமையான முயற்சியாக, நலத் திட்டங்களின் பயன்களை மக்களிடம் நேரடியாகக் கொண்டு சேர்ப்பது; இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 43.90 இலட்சம் மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டு பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் உரிய பயன்கள் அளிக்கப்பட்டன. இவை அனைத்தும் தங்கத்தாரகை, தரணி போற்றும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மட்டுமே சாத்தியமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஓய்வூதியம், கல்வி உதவித் தொகை, திருமண நிதியுதவி ஆகியவற்றைப் பயனாளிகளின் வங்கிக் கணக்குகள்மூலம் நேரடியாக அளிக்கும் திட்டம் குறிப்பிடத்தக்கது.



2015 மார்ச் 27] [திரு. எம்.கே. செல்வராஜு]

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கையும், மத நல்லிணக்கத்தையும் தமிழக காவல் துறை சிறப்பாகப் பேணிப் பாதுகாத்து தேசவிரோத, பிரிவினைவாத சக்திகளின் சவால்களைச் சந்திக்க எப்போதும் விழிப்புடன் செயலாற்ற 2010-2011-ல் 3,184.47 கோடி ரூபாயாக இருந்த காவல் துறைக்கான ஒதுக்கீடு தொடர்ந்து உயர்த்தப்பட்டு முன் எப்போதும் இல்லாத அளவில் 2015-2016-ல் 5,568.81 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை நவீனப்படுத்த கடந்த நான்காண்டுகளில் 73.23 கோடி ரூபாய் செலவிட்டதால், 1,613.49 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளைப் பாதுகாக்க முடிந்தது. அண்மையில் மவுலிவாக்கத்தில் கட்டட விபத்து நிகழ்ந்தபோது எடுக்கப்பட்ட மீட்புப் பணிகள் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் சீரிய சாதனைகளை நிரூபித்துள்ளது. சிறைக் கைதிகளைச் சீர்திருத்திட அவற்றை மறுவாழ்வு மையங்களாக மாற்றியமைத்திட, 2015-2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு 227.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-20

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்திலுள்ள நீதி நிருவாக அமைப்புகள் பெருமளவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கு இந்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 134 கோடி ரூபாய் செலவில் 169 புதிய நீதிமன்றங்கள் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நீதி நிருவாகத் துறைக்கு மொத்தமாக 809.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலை விபத்துகளையும், அவற்றால் ஏற்படும் உயிரிழப்புகளையும் தடுப்பதற்கு 2014-2015 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 245.30 கோடி ரூபாயும், வரும் நிதியாண்டில் சாலைப் பாதுகாப்பு நிதிக்காக 165 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[திரு. எம்.கே. செல்வராஜு] [2015 மார்ச் 27

மாநிலத்தில் வருவாய் நிருவாகம் புத்துயிர் பெற்றுள்ளது. 338.73 கோடி ரூபாய் செலவில் வருவாய்த் துறைக்கென புதிய கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், விரைவாக பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பட்டா மாறுதல் கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. இதன்மூலம் 46.68 இலட்சம் பட்டா மாறுதல்கள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014-2015 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழை, எளியோருக்கு வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இந்த இலக்கு எய்தப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் மேலும் 3.5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 33.65 இலட்சம் பயனாளிகளுக்கு 2,829.19 கோடி ரூபாய் நிதியுதவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை விவசாயிகளுக்கு அதிக வருவாய் வரும் வகையில் 2010-2011 ஆம் ஆண்டில் 23.25 இலட்சம் ஏக்கராக இருந்த நமது மாநிலத்தின் தோட்டப் பயிர் சாகுபடி பரப்பளவு, 2014-2015 ஆம் ஆண்டில் 25.95 இலட்சம் ஏக்கராக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உயர்த்தப்பட்டது. இந்தச் சாகுபடி பரப்பளவு 2015-2016-ல் 27.18 இலட்சம் ஏக்கராக மேலும் உயர்த்தப்படுவதோடு, 111.97 கோடி ரூபாய் மதிப்பில் 2015-2016 ஆம் ஆண்டில் உயர் தொழில்நுட்ப முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மட்டுமே செய்யத்தக்க ஒன்று.

கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள் வழங்கும் முன்னோடித் திட்டங்கள் ஏழை எளியோருக்குப் பெரும் பயனளித்துள்ளன. 2015-2016 ஆம் ஆண்டிலும் 12,000 கறவைப் பசுக்களும், ஆறு இலட்சம் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்கிட நிதி ஒதுக்கீடு; கோழி வளர்ப்புக்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என ஏற்றமிகு திட்டங்கள்.



2015 மார்ச் 27] [திரு. எம்.கே. செல்வராஜு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காக நான்” என்று சொல்லும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக மக்களின் உயிராகவும், உணர்வாகவும் உள்ள எங்கள் கருணை மிகுந்த தலைவி, நமது தமிழக மக்களின் செயல்பாட்டிற்கான கொள்கையினை வகுத்துத் தந்துள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு ஆற்றலினால் வழிநடத்தப்படும் இந்த அரசு கடினமான நிதிச் சூழ்நிலைகளை எதிர்கொண்டுள்ளபோதிலும், ஏழை எளிய மக்களின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களை முனைந்து செயல்படுத்துவதில் சிறந்த கவனம் செலுத்தி வருகிறது.

தமிழக மக்களின் நலனையும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தையும் இலட்சியமாகக் கொண்டு, எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி, தமிழக மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து, தியாக வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த நிதிநிலை அறிக்கையின் ஒவ்வொரு சொல்லும், அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு சிந்தனையும் அமைக்கப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் குறைந்த வளர்ச்சியே உள்ளபோதும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி புதிய வரிகள் எதையும் விதிக்க வேண்டாம் என அரசு முடிவு செய்துள்ளது. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பொது மக்கள்மீது எவ்விதமான வரிச்சுமையினையும் சுமத்தக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வரி உயர்வும் இல்லை; 650 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கருணைமிகு தாயின் கனிவான வழிநடக்கும் கழக அரசின் வரியில்லா நிதிநிலை அறிக்கையை தொழில்புரிவோர், பத்திரிகைகள், பொது மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர், மகிழ்ச்சி அடைகின்றனர்.

[திரு. எம்.கே. செல்வராஜு] [2015 மார்ச் 27

பிற்பகல் 1-25

தன்னிகரில்லா தலைவியின் ஆற்றல்மிகு தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தகு சாதனைகளைப் படைத்துள்ளது. வறுமை ஒழிப்புத் திட்டங்களை மாநிலம் முழுவதும் செயல்படுத்த மக்களின் முதல்வர் வழி நடக்கும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. பசுமை எரிசக்தி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும்வகையில், உயிரி எரிபொருள்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மீதான வரி முழுமையாக விலக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி சட்டம் 2006 பிரிவு 19 (2) (v)-ன்கீழ் கொண்டுவரப்பட்ட காப்புரையின்படி, 11-11-2013 முதல் விதிக்கப்பட்ட 3 சதவிகித உள்ளீட்டு வரி முழுமையாகத் திரும்பப் பெறப்பட்டுள்ளது. 'சி' படிவமின்றி நடைபெறும் மாநிலங்களுக்கிடையேயான பொருள் விற்பனைகளிலும் உள்ளீட்டு வரி வரவு விலக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக் கயிறுகள், மீன்பிடி மிதவைகள், மீன் வலை முறுக்கு நூல், மீன்பிடி விளக்குகள் மற்றும் மீன்பிடி திருப்புகை போன்ற மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் துணைப் பொருட்கள்மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது அனைத்து வகையான கொசு வலைகளுக்கு தற்போதுள்ள 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி முழுவதுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

நெய்தலுக்கு முன்பாக நூலுக்கு பசையிடுவது தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏலக்காய் மீது தற்போதுள்ள மதிப்புக் கூட்டு வரி 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மின் சேமிப்பிற்கான கருவிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும்பொருட்டு, அனைத்து வகையான ஒளி உமிழ் டையோடு விளக்குகள் (LED lamps) மீதுள்ள மதிப்புக் கூட்டு வரி 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.



2015 மார்ச் 27]

**திரு. எம்.கே. செல்வராஜு:** ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். பாடுபடும் ஏழைகளின் பசியறிந்து, வாடும் மக்களின் வறுமை தெரிந்து, கூடும் தொண்டர்களின் குரல் புரிந்து, நாடும் தலைவர்களின் நலன் உணர்ந்து, ஓடி உழைத்து வரும் ஒய்வறியா உயர்நிலைத் தலைவியாம், தமிழகத்தின் ஒப்புயர்வற்ற மக்கள் முதல்வர் எங்கள் மாண்புமிகு அம்மாவுக்கு நிகர் எங்கள் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) 'என் வாழ்நாளுக்குள் தமிழ்நாட்டில் யாரும், யாரிடத்திலும் எதற்காகவும் கையேந்தாத நிலையை உருவாக்கியே தீருவேன்' என்று வீர சபதம் பூண்டு, தமிழ் மண்ணை வளம் கொழிக்கும் புண்ணிய பூமியாக்க உழைத்து வரும் தியாகத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் போற்றும் சிறப்பான வரியில்லாத 2015-2016 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை என்பது எப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது சம்பந்தமாக தெளிவாக இங்கே விளக்கப்பட்டிருக்கிறது. தேசிய அளவிலும், உலக அளவிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார வீழ்ச்சி நமக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று துவக்கத்திலேயே அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

பொருளாதார வீழ்ச்சி தேசிய அளவில் இருப்பது சம்பந்தமாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும், மத்திய அரசின் சமீபத்திய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், இந்திய

நாட்டினுடைய பெருமுதலாளிகளுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அளித்த சலுகைகளைப் பார்த்தால், பொருளாதார வீழ்ச்சி இருக்கிற நிலையிலே அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தது போன்று தெரியவில்லை. கிட்டத்தட்ட 5 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக வரிகளை அவர்களுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறது மத்திய அரசு. அதேபோன்று 30 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகித அளவிற்கு வரிச் சலுகைகளையும் வாரி வழங்கியிருக்கிறார்கள். அப்போது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், பெருமுதலாளிகளுக்கும் வரிச் சலுகைகளை வாரிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு பொருளாதார வளர்ச்சி என்பது இருந்திருக்கிறது என்றுதான் நாங்கள் பார்க்கிறோம்.

எங்கே பொருளாதார வீழ்ச்சி ஏற்படுகிறது என்று சொன்னால்— உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது; மத்திய அரசு சமூக நலச் செலவினங்களுக்கு, அதாவது சாமானிய மக்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய மானியங்கள் அனைத்தையும் வெட்டி, சுருக்கி இருக்கிறது. சுகாதாரத்திற்குக் கொடுத்த 35,000 கோடி ரூபாயை மத்திய அரசு 26,000 கோடி ரூபாயாக வெட்டியிருக்கிறது, அதாவது குறைத்திருக்கிறது. அதேபோன்று, நகர்ப்புற நிவாரண ஒதுக்கீட்டினை ரூபாய் 6,008 கோடியிலிருந்து ரூபாய் 5,000 கோடியாக சுருக்கியிருக்கிறது. அதேபோன்று, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்ட ஒதுக்கீட்டை 16 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 8 ஆயிரம் கோடி ரூபாயாக மத்திய அரசு குறைத்திருக்கிறது. எனவே, 'மத்திய அரசினுடைய பொருளாதார மந்தம்' என்று பொதுவாகச் சொல்வது பொருத்தமானதாக இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது.

பிற்பகல் 1-30

இந்திய நாட்டிலுள்ள பெருமுதலாளிகளுக்குப் பெரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன; ஆனால், இந்திய நாட்டிலுள்ள நகர்ப்புறங்களில் வறுமையிலுள்ள சாதாரண மக்களுக்குக் கொடுக்கக்கூடிய சுகாதாரம், கல்வி போன்ற சேவைத் திட்டங்களுக்கான மானியங்கள் கடுமையாக வெட்டிக்





குறைக்கப்பட்டுள்ளன. மானியங்களைக் குறைத்தது மட்டுமல்ல; "இதுபோன்ற செலவினங்களை மாநில அரசு ஏன் கவனிக்கவேண்டும்? மக்களே பார்த்துக்கொள்ளட்டும்" என்றும் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மோடி ஆட்சிக்கு வந்தால் இந்திய நாடு வளர்ச்சி பெறும்; மோடி என்றாலே அதற்கு வளர்ச்சி என்ற பொருள் இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்படும் இந்த நேரத்தில், மத்திய ஆட்சியில் பொருளாதார வீழ்ச்சி என்று நீங்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது என்பது, மத்திய அரசினுடைய பாரபட்சத்தை இந்த அரசு கவனமாகப் பார்க்கவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுகின்றது.

அதேபோன்றுதான், "மாநில அரசினுடைய நிதிப் பற்றாக்குறையை எப்படி சரி செய்யப் போகிறீர்கள்" என்று நிதித் துறை செயலாளர் அவர்களிடம் கேட்டபோது, அவர், "அது ஒன்றும் பிரச்சினை இல்லை; சுழற்சி முறையில் எல்லாமே மாறும்; 29 ஆயிரம் கோடி ரூபாய் டாஸ்மாக் மூலமாக வரும்" என்று நம்பிக்கையுடன் சொல்கிறார். டாஸ்மாக் என்பது தமிழகத்தினுடைய பெரும் தொழிற்சாலையா அல்லது தமிழகத்தினுடைய அட்சயப் பாத்திரமா? இதனால், தமிழகத்தில் குடிநோயாளிகள் பெருகிக்கொண்டிருக்கிறார்கள்; பெண்கள், குழந்தைகள் என்று பலர் வன்முறைச் சம்பவங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் ஆங்காங்கே இருக்கக்கூடிய பெண்கள் அனைவருமே, டாஸ்மாக் கடை இருக்கக் கூடாது என்ற ஒரு கருத்தில் நின்று கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், 29 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்படும் என்று நம்பிக்கை தெரிவித்திருப்பது என்பது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'டாஸ்மாக் வருமானம் 29 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்று பட்ஜெட்டில் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். மேலும், மது அருந்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

கூடிக்கொண்டிருக்கிறது என்றும் பொருள்படச் சொன்னார்கள். அது அப்படியல்ல; அது விலை உயர்வினால் கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாயே தவிர, மது அருந்துபவர்களின் எண்ணிக்கை சற்று குறைந்துதான் இருக்கிறது. மது அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை; மாறாக சற்று குறைந்திருக்கிறது என்பதுதான் உண்மை. எனவே, விலை உயர்வின் மூலமாகத்தான் வருவாய் கூடியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசு எல்லா திட்டங்களிலும் கை வைத்துவிட்டது. மாநில அரசு மூலமாக நிறைவேற்றப்படும் மத்திய அரசின் பல திட்டங்களுக்கு நிதியே கொடுக்கமாட்டோம் என்று மத்திய அரசு சொல்லியிருப்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதே கொள்கையைத்தான் நீங்களும் பின்பற்றுகிறீர்கள். எங்கு என்றால், ஆவின் பாலில் பின்பற்றுகிறீர்கள். ஆவின் பாலுக்கான விலையை இந்த அரசு இரண்டு முறை உயர்த்தியிருக்கிறது. அதற்கு கூடுதல் மானியம் யார் கொடுப்பது? மாநில அரசு கொடுத்திருக்கவேண்டும். எனவே, மத்திய அரசு எவ்வாறு இந்திய நாட்டின் அடித்தட்டு மக்களுக்கான மானியத்தைக் குறைக்கிறதோ, அதேபோன்றுதான் இந்த பட்ஜெட்டில் வரி போடவில்லையே தவிர, விலையை இந்த அரசு கூட்டாமல் இருந்ததா? ஏழையெளிய பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் பயன்படுத்தக்கூடிய பாலின் விலை ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறதே! அதற்கு மாநில அரசு மானியம் கொடுத்திருக்க வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் கூறும் கருத்திலே முரண்பாடு இருக்கிறது. பால் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள் என்று சொல்கிறார்;



2015 மார்ச் 27] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஆனால், அவர்கள் கட்சியினரே பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். கொள்முதல் விலையை அதிகரிக்கும்பொழுது, விற்பனை விலையை அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுமா, இல்லையா? அப்படியானால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்த வேண்டாம் என்று கருதுகிறார்களா? அவர்களுடைய கோரிக்கையும் ஏற்கப்பட்டு, பாலின் விலை சற்று உயர்த்தப்பட்டதே தவிர வேறொன்றுமில்லை. பால் உற்பத்தியாளர்கள், விவசாய மக்கள் அனைவரும் இன்றைக்கு சந்தோஷமாக இருக்கிறார்கள். பால் உற்பத்தி செய்யும் தனியார் அனைவரும், தாங்கள் உற்பத்தி செய்யும் பாலினை, ஆவின் பாலின் விலையைவிட கூடுதலான விலையில்தான் இன்றைக்கும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பால் விலை உயர்வின் மூலமாக இன்றைக்கு அதிகமாகப் பயனடைவது பால் உற்பத்தியாளர்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கொண்டு பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டாயம் நியாயமான விலை கொடுக்கவேண்டுமா என்று கேட்டால், நிச்சயமாகக் கொடுக்கவேண்டும். ஆனால், அதேசமயத்தில், விலை உயர்வால் அடித்தட்டு ஏழை மக்களால் பால் வாங்க முடியாது. இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்வதற்கு மானியம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் விலையை உயர்த்தியதன் காரணமாகத்தான் ஒரு நாளைக்கு 23 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் இன்றைக்கு 30 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பால் விலையை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

அரசு உயர்த்தியதன் காரணமாகத்தான் பால் கொள்முதல் இன்றைக்கு அதிகரித்திருக்கிறது. எனவே அந்தக் கொள்கையில் எந்தத் தவறும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழையெளிய மக்கள், அதிகமாக சென்னையில் வாழ்கின்ற மக்கள்தான் ஆவின் பாலினை அதிகமாக விரும்பிப் பருகுகின்ற சூழ்நிலை இருக்கிறது. புள்ளிவிவரக் கணக்கின்படி பார்த்தால், கிராமப்புறங்களில் புறநகரில் இருக்கின்ற மக்கள் அதிகமாக ஆவின் பாலைப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் வெளியில் வாங்கிக்கொள்கிறார்கள்; குறைந்த விலையில் உள்ளூரிலேயே அவர்கள் தனியார் நிறுவனத்திடமிருந்து பாலை வாங்குகின்ற ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு இருக்கிறதென்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் தமிழக ஏழையெளிய மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ‘உங்கள் கையில் உங்கள் பணம்’ என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. Gas cylinder எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு, அதற்கான மானியத்தை வங்கிக் கணக்கில் போடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆதார் அட்டையைப் பதியவேண்டும் என்கிறார்கள். உச்ச நீதிமன்றம், வேண்டாம், பரவாயில்லை, அரசின் திட்டத்திற்கு அவசியமில்லை என்கிறது. வங்கியில் சென்று கேட்டால், ஆதார் அட்டை எண்ணைக் கேட்கிறார்கள். ஜனவரி மாதத்திலிருந்து மானியத்தை வங்கியில் போடுவோம் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. ஆனால் Gas cylinder பயன்படுத்தக்கூடிய நடுத்தர மக்களுடைய வங்கிக் கணக்கினைப் பார்த்தால், மானியத் தொகை முறையாக வருவதில்லை. வங்கியில் சென்று கேட்டால், இதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்கிறார்கள். யாரிடம் சென்று கேட்க முடியும்? அப்பொழுது மாநில அரசு, Gas cylinder-சமையல் எரிவாயு பிரச்சினையில், இந்த மாநில மக்களுக்கு நீங்கள் மானியத்தைக் கொடுத்து, Gas cylinder தடையில்லாமல் கிடைப்பதற்கு ஓர் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு முன்பு, நாம் ரூ.440/- கொடுத்து சிலிண்டர் வாங்கினோம். தற்போது ரூ.680/- கொடுக்கிறோம்.



2015 மார்ச் 27] [செல்வி கே. பாலபாரதி]

அந்த ரூ.240/-ஐக்கூட மத்திய அரசு இன்னும் வங்கியில் போடவில்லை. அவ்வாறாயின், ஆதார் அட்டை எண்ணை மாநில அரசு பதிய வேண்டுமா? பதிய வேண்டாம் என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. மத்திய அரசு வேறொன்று சொல்கிறது. இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தமிழக மக்களுக்கு உள்ள இந்தப் பிரச்சினையை நீங்கள் எப்படித் தீர்க்கப்போகிறீர்கள்? இவர்களுக்கு வங்கியில் இந்த மானியம் வந்ததா, இல்லையா என்று பார்ப்பதற்கு என்ன நிருவாக ஏற்பாடு? ஆகவேதான் பொது விநியோக முறையில், மத்திய அரசு எடுத்துவரக்கூடிய அனைத்து சீரழிவான நடவடிக்கைகளையும் அரசு வேடிக்கை பார்க்கிறதோ என்கிற கவலை இருக்கிறது. வேடிக்கை பார்க்கிறதென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. இரண்டாவது என்னவென்றால்,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளை மாநில அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொன்னார்கள். Gas cylinder-க்கு முழு மானியம் கொடுப்பது மத்திய அரசாங்கம்தான். மக்களுக்குத் தேவையான அளவில், பயனுள்ளவகையில், எப்பொழுதும் மானியங்களை வழங்கிடவேண்டும் என்ற வகையில், மாண்புமிகு மக்களின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு முறையும் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் இதுபோன்ற நடவடிக்கைகளை ஒவ்வொரு முறையும் கண்டித்து, மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறையோடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த அவை நன்கறியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் விலை உயர்வு மற்றும் விற்பனை விலை உயர்விற்குப் பிறகு, கடந்த ஆண்டு அதாவது 27-3-2014 அன்று 21,28,748 லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, 27-3-2015 அன்று 21,34,185 லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, பால் விலை உயர்வு மற்றும் கொள்முதல் விலை உயர்விற்குப் பிறகும், கூடுதலாக ஆவின் பால் விற்பனை ஆகியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசானது, மாநில சமூக நலத் திட்டங்களுக்கான மானியத்தைக் கடுமையாகக் குறைத்திருக்கிறது. தற்போது மாநில அரசு எப்படி தடுமாறிக்கொண்டிருக்கிறதென்று பார்த்தால், முதியோர் மற்றும் விதவைப் பென்ஷனில்,** பலமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குறித்து இந்த அவையில் பலமுறை பேசி முடித்தாகிவிட்டது. மீண்டும் மீண்டும் நீங்கள் அதையே பேசவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறான கருத்து. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதாவது, தகுதியில்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவை நீக்கப்பட்டிருக்கும். தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை முறையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் இப்போதுள்ள நடைமுறை. (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒரு நம்பர் குறிப்பிட்டார்கள். அந்த நம்பர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் விவரம் தெரியும். இது மிகவும் சிரமமான பிரச்சினை. ஓர் அம்மா cancer patient-ஆக இருக்கிறார். அவருக்கு யாருமே இல்லை. முதியோர் உதவித் தொகை பெறுவதற்காக எத்தனை முறை அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்திப்பார்கள்? இதற்கு ஒரு தீர்வும் கிடைப்பதில்லை**.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டீர்கள். இருந்தாலும், எந்த ஆதாரத்தை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கையில் 4,200 கோடி ரூபாய் முதியோர் உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1,200 கோடி ரூபாய் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முதியோர் உதவித் தொகைக்காகக் கொடுத்தார்கள். நாங்கள் 3,000 கோடி ரூபாய் கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம். அது போதாது என்று தற்போது தேவைக்கேற்ற வகையிலே தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் கொடுப்பதற்காக 19 கோடி ரூபாயைக் கூடுதலாகக் கொடுத்தவர், கருணை உள்ளம் கொண்ட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி, ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக எவ்வளவு பேருக்கு கொடுத்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரம் இங்கே இருக்கிறது. கடந்த ஆட்சியில் 21 இலட்சம் பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டது. அதோடு மக்கள் அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். இப்போது 37 இலட்சம் பேர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரபூர்வமாக வழங்கிக் கொண்டிருக்கிறது. இதிலே வரையறைகள் இருக்கின்றன. அந்த வரையறைகளுக்குட்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2015 மார்ச் 27

இன்றைக்குக் காலையில்கூட அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், "மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்; என்னுடைய உடன்பிறந்த சகோதரிக்கு உதவித் தொகை கிடைத்திருக்கிறது" என்பதை நேரடியாக என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனார் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். ஆகவே, ஆதாரங்களின் அடிப்படையிலே, வரையறைகளுக்குட்பட்டு தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் தொடர்ந்து உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. தகுதியில்லாத நபர்கள் நீக்கப்பட வேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அதிலே கடமை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி என்பது ஏழை என்பதைத் தவிர வேறு தகுதியே இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. பெரியசாமி, உட்காருங்கள், உறுப்பினர் பேசுகிறார்.

**செல்வி கே. பாலபாரதி:** ஏழை என்பதுதான் தகுதி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி பேசுகிறார், திரு. ஐ. பெரியசாமி, நீங்கள் உட்காருங்கள். திண்டுக்கல் தொகுதியைச் சார்ந்தவர்தானே அவர்கள்?

**செல்வி கே. பாலபாரதி:** ஏழைகள் என்பதுதான் தகுதி. (குறுக்கீடு) குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள நபர்கள் நீக்கப்பட்டிருந்தால், அதை அரசின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு



2015 மார்ச் 27] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

வருவார்களானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கனிவுடன் பரிசீலனை செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறைக்கு மாநில அரசு மானியங்களை கொடுக்கிறது. ரேஷன் கடைகளில் மாதா, மாதம் உளுத்தம் பருப்பு கிடைப்பதில்லை; துவரம் பருப்பு இல்லை என்று சொல்கிறார்கள்; பாமாயில் ஒரு மாதம் விட்டு ஒரு மாதம்தான் கிடைக்கிறது. வெளிக்கடைகளில் துவரம் பருப்பு கிலோ 85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது; உளுத்தம் பருப்பும் அதே மாதிரி விற்கப்படுகிறது. மாநில அரசு ரூ.25/-க்கு வாங்கிக் கொடுக்கிறது. அவ்வாறு வாங்கிக் கொடுக்கக்கூடிய இந்தப் பொருட்கள் ரேஷன் கடைகளுக்கு சரியாக வருவதில்லை. எப்போது கேட்டாலும், பொருட்கள் வரவில்லை என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினை நிதி நெருக்கடியின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அதை நீங்கள் சரி செய்யவேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் ஆரம்பத்திலிருந்தே ஏதோ ஒரு நோக்கத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. (குறுக்கீடு) எந்த ரேஷன் கடையில், எந்த ரேஷன் கார்டுக்கு பருப்பு கொடுக்கவில்லை, மண்ணெண்ணெய் கொடுக்கவில்லை, பாமாயில் கொடுக்கவில்லை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால் கொடுங்கள். ஆதாரமில்லாமல் நீங்கள் சொன்னால் எப்படி? (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுங்கள்; (குறுக்கீடு) ஆதாரம் கொடுங்கள். ஏதாவது ஒரு ரேஷன் கடையில், ரேஷன் கார்டு வைத்திருக்கிறேன் பருப்பு கொடுக்கவில்லை;, மண்ணெண்ணெய் கொடுக்கவில்லை; பாமாயில் கொடுக்கவில்லை என்று

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 27

சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் திண்டுக்கல்லில் பொதுக் கூட்டங்களில் பேசுகிற மாதிரி இங்கே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இங்கே புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தோடு பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1—45

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய மானியத்திலே ஆரம்பித்து, மாநில அரசினுடைய ரேஷன் கடைக்கு வந்துவிட்டார்கள். பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், உணவுத் துறைக்காக மட்டும் 5,300 கோடி ரூபாயை ஒவ்வொரு வருடமும் ஒதுக்குகிற ஒரே மாநிலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதிக அளவு மக்கள் தொகை கொண்ட வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு நிதி ஒதுக்கப்படாத நிலையில், தமிழ்நாட்டில் மாத்திரம்தான் 5,300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 5,300 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதிலே பொது விநியோகத் திட்டம், சிறப்புப் பொது விநியோகத் திட்டம், குறைந்த விலையில் மண்ணெண்ணெய், சீனி போன்றவற்றையும் கொடுப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிற தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27] [திரு. இரா. காமராஜ்]

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் ஒரு கோடியே 87 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று கிடையாது; கிடையவே கிடையாது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடியே 87 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்குகிறார்கள். அதேபோல, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்றவையும் மாதா மாதம் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ என்கிற அளவிலே எல்லா மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. ஒருசில மாதங்களில் விலையேற்றத்தின் காரணமாக, கொள்முதலில் ஏற்படுகின்ற சிறுசிறு பிரச்சினைகளால் சற்று தாமதம் ஏற்படுமே தவிர, அந்த மாதம் கொடுக்கவில்லை என்று சொல்லவேமுடியாது. அனைத்துக் கடைகள் மூலமாக, எல்லா மாதமும், எல்லாக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் முறையாக, உரியவர்களுக்கு உரிய எடையில் வழங்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்று, நான் பொதுக் கூட்டத்தில் பேசுவதைப் போன்றுதான் பேசுகிறேன். அங்கேயும் உண்மையைத்தான் பேசுகிறேன்; இங்கேயும் உண்மையைத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே நீங்கள் ஆதாரத்தோடு பேசவேண்டும். (குறுக்கீடு) இங்கே ஆதாரத்தோடு பேசவேண்டும்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கு 6,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது நல்ல விஷயம். ஆனால், மத்தியிலே இருக்கக்கூடிய அரசு நெல்லுக்கும் கொள்முதல் விலையைப் பரிந்துரை செய்வதில்லை. அது எங்களுடைய வேலையே இல்லை என்று சொல்லிவிட்டது. காங்கிரஸ் அரசாங்கமும் அதைத்தான் சொன்னது; மோடி அரசாங்கம் அதற்கும் மேலே சொல்லிக்

[செல்வி கே. பாலபாரதி] [2015 மார்ச் 27

கொண்டிருக்கிறது. ஆனால், மாநில அரசு கொடுக்கிறதா என்றால், கொடுக்கிறது. ஆனால், அந்த 6,000 கோடி ரூபாயிலும், இப்பொழுதும் நீங்கள் நெல்லுக்குக் கொள்முதல் விலை ரூபாய் ஆயிரத்து நானூற்று சில்லறைதான் கொடுக்கிறீர்கள். அதிலே சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய்; சன்ன ரகத்திற்கு 70 ரூபாய் என்று சொல்கிறீர்கள். ஓட்டலில் மதிய சாப்பாடு 80 ரூபாய். விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த 50 ரூபாயையும், 70 ரூபாயையும் கொடுத்துக் கொண்டிருந்தால், எப்படி விவசாயி வேளாண்மை உற்பத்தியிலே ஈடுபாடாக இருக்கமுடியும் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம். இதை நாங்கள் திரும்பத் திரும்ப இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் மூத்த உறுப்பினர்; உங்களுக்கும் தெரியும். மத்திய அரசாங்கம்தான் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுடைய நலனைக் கருதி, சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு 70 ரூபாயும், அதேபோல, சாதா ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் என்கிற வகையிலும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இது வேறு எந்த மாநிலத்திலேயும் கிடையாது. நெல்லுக்கு ஊக்கத் தொகை கொடுக்கிற மாநிலம் வேறு எந்த மாநிலமும் கிடையாது; (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநடத்துகின்ற தமிழ்நாடு மட்டும்தான் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும், கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற 11.69 இலட்சம் டன் நெல்லுக்கு 74.71 கோடி ரூபாயை மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் என்கிற தலைப்பிலே, 'இடைக்கால, நீண்ட கால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களை இறுதி செய்து...' என்று பக்கம் 31-ல் சொல்லியிருக்கிறீர்கள். இவையெல்லாம் சேர்ந்துதான் இவ்வளவு மெகா வாட் மின்சாரத்தை, தேவையான அளவிற்கு உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சாதனைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இது நல்ல விஷயம்தான். ஆனால், எங்கே, எவ்வளவு மின்சாரம் இப்போது கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்கிற விவரங்கள் அதற்குள்ளே இல்லை. (குறுக்கீடு) வெறும் எழுத்து மாத்திரம்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அதை நீங்கள் கேட்டால் நான் இப்போது சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) எங்கே, எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி எங்கே, எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார். நிதிநிலை அறிக்கையிலே அவ்வளவு விரிவாகச் சொல்ல முடியவில்லை. இப்பொழுது வேண்டுமானால் சொல்கிறேன்; கேட்டுக்கொள்ளுங்கள். தமிழ்நாட்டில், மின்சார உற்பத்தியில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக 5 ஆண்டுக் கால ஆட்சியிலே (குறுக்கீடுகள்) பொறுங்கள்; நாங்கள் உற்பத்தியை எவ்வளவு அதிகரித்திருக்கிறோம் என்பதைச் சொல்ல வருகிறேன்.

பிற்பகல் 1-50

கடந்த 5 ஆண்டு காலத்தில் 206 மெகா வாட் மின் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அதற்கான breakup figures என்னிடம் இருக்கிறது. தேவைப்பட்டால் இதுகுறித்து உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது விளக்கம் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எவ்வளவு மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். பவானி கட்டளை Barrage II-ன் மூலமாக 30 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்ட நாள் 29-11-2011. அதேபோன்று, Simhadri Super Thermal Power Plant, Stage-II, Unit-I-ல் மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கின்ற மின் பங்கு 99.5 மெகா வாட். Periyar Power House, Arni Unit-I-லிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கின்ற மின் பங்கு 35 மெகா வாட்டிலிருந்து 42 மெகா வாட்டாக தரம் உயர்த்தப்பட்டு, 7 மெகா வாட் கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. Periyar-Vaigai Small Hydro Electric Power Stage II திட்டத்தின் மூலமாக 2.5 மெகா வாட் மின் உற்பத்தி, ஆக 2011-2012 ஆம் ஆண்டில் 139 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

2012-2013 ஆம் ஆண்டில் Simhadri Super Thermal Power Plant, Stage-II-லிருந்து 99.5 மெகா வாட் மின் உற்பத்தியும், T.N.E.B.-N.T.P.C. Joint Venture Unit மூலமாக வல்லூரில் 350 மெகா வாட் மின் உற்பத்தியும், Periyar Power House, Arni Unit-II-லிருந்து 35 மெகா வாட்டிலிருந்து 42 மெகா வாட்டாக உயர்த்தி 7 மெகா வாட் மின் உற்பத்தியும், பவானி கட்டளை தடுப்பணையின் மூலமாக 10 மெகா வாட் மின் உற்பத்தியும், ஆக 2012-2013 ஆம் ஆண்டில் 466.5 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல, 2013-2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல் மின் கழகமும் இணைந்து, Joint Venture Unit-II-ன் மூலமாக வல்லூரில் 350 மெகா வாட் மின் உற்பத்தியும், மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து 600 மெகா வாட் மின் உற்பத்தியும், வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து 600 மெகா வாட் மின் உற்பத்தியும், Periyar Power House, Arni Unit-III-லிருந்து 7 மெகா வாட் மின் உற்பத்தியும், பவானி கட்டளை தடுப்பணை-III-லிருந்து 30 மெகா வாட் மின் உற்பத்தியும், ஆக மொத்தம் 2013-2014 ஆம் ஆண்டில் 1,587 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு, நிறுவுதிறனில் இணைக்கப்பட்டிருக்கிறது.



2015 மார்ச் 27] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

2014-2015 ஆம் ஆண்டில் வடசென்னை தேசிய அனல் மின் நிலையம் stage II, Unit II-லிருந்து 600 மெகா வாட் மின் உற்பத்தியும், கூடங்குளம் அணு மின் நிலையம் Unit-I-லிருந்து மத்திய அரசின் மின் உற்பத்தியிலிருந்து மாநில அரசின் பங்காக 562 மெகா வாட் மின்சாரமும், ஆக இந்த ஆண்டு 1,162 மெகா வாட் மின் உற்பத்தி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிறுவுதிறனில் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் தொடங்கியதிலிருந்து இன்று வரை மொத்தமாக 3,354.5 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிறுவுதிறனில் இணைக்கப்பட்டு, installed capacity இன்றைக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். இதுகுறித்து எந்த உறுப்பினரும் பேசவில்லை. இருந்தாலும் பேசக்கூடும் என்பதற்காக இப்பொழுதே பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

"இந்த ஆட்சியில் 1 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்திருப்பதாகச் சொன்னால் நான் பொது வாழ்க்கையிலிருந்து விலகிவிடுகிறேன் என்று மாண்புமிகு தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் ஆட்சியில், 3,354.5 மெகா வாட் அளவிற்கு மின்சார உற்பத்தி செய்யப்பட்டு, நிறுவுதிறனில் இணைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அவர்கள் எப்பொழுது பொது வாழ்க்கையிலிருந்து விலகப் போகிறார்கள் என்று அவர்கள் சொல்வது மட்டுமல்ல; அதை அவர்கள் குடும்பத்தினரில் சிலரே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நல்ல நாள் வருமா என்று தமிழக மக்களும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சொல்லும்பொழுது எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், அவர்கள் இங்கே அவ்வாறு சொல்லவில்லை. அவர் கேட்கக்கூடும் என்பதால், எவ்வளவு மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை தேதி வாரியாக ஆதாரத்துடன் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

அதேபோன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2006-2011 வரை அமராவதி சிறு நீர்மின் திட்டத்திலிருந்து 4 மெகா வாட் மின் உற்பத்தி, பவானி கட்டளை Barrage-I-லிருந்து 30 மெகா வாட் மின் உற்பத்தியும், Periyar-Vaigai Project, Unit-I-லிருந்து 4 மெகா வாட் மின் உற்பத்தி, வழுதூர் Gas உற்பத்தி நிலையத்திலிருந்து 92.2 மெகா வாட் மின் உற்பத்தி, Kaiga மின் உற்பத்தி திட்டத்தில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசின் பங்காக 36 மெகா வாட், Pioneer Power Station - Independent Power Purchase—அது தனியார் நிறுவனமாக இருந்தாலும் அதன் உற்பத்தி 40 மெகா வாட் முழுவதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்டு, அதன் நிறுவுதிறனில் சேர்த்துக்கொள்ளப்படும்.

பிற்பகல் 1-55

ஆக, எல்லா வகையிலும் சேர்த்து தி.மு.க. ஆட்சியில் மொத்தமாக 206.2 மெகா வாட் அளவிற்குத்தான் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் உற்பத்தி செய்த மின்சாரத்தின் அளவையையும், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தித் திறன் விவரங்களையும் சேர்த்து நான் சொல்லியிருக்கிறேன். அவர்கள் பொது வாழ்க்கையிலிருந்து விலகுகிறார்களா, விலகவில்லையா என்பது அவர்கள் இஷ்டம். நான் அதைக் கேட்கவில்லை. விவரங்களை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் உட்காரவும். (குறுக்கீடு) அனைவரும் உட்காரவும். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் இடத்திற்கு போய் அமரவும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மின்சார உற்பத்தி செய்த விவரங்களைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்தீர்கள் என்று கேட்டதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். அவ்வளவுதான்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் இடத்திற்குப்போய் உட்காருங்கள். (குறுக்கீடு) நின்று கொண்டு இருக்காதீர்கள். (குறுக்கீடு) தி.மு.க. உறுப்பினர்கள், உங்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் பேசுவதில் நீங்கள் ஒன்றும் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டுதான் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டுதான் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மின்சார வாரியத்தினுடைய நோக்கம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி பேசி முடிக்கட்டும். பிறகு, நீங்கள் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். நீங்கள் உரையை ஆரம்பித்து அதிக நேரமாகிவிட்டது. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் மொத்த கடனே 74,113 கோடி ரூபாய் வரை இருக்கின்றது. தோட்டத்தில் பாதி கிணறு என்கிற மாதிரி, அரசினுடைய மொத்த கடன் கணக்கு நிதிநிலையில் சரிபாதிக்கு மேல் இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று நாங்கள் பார்க்கும்போது, தனியார் நிறுவனங்களிடமிருந்து கூடுதலாக மின்சாரம் வாங்குவதுதான். இரண்டாவதாக, . . .

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, நீங்கள் உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். நேரம் அதிகமாகிவிட்டது. நீங்கள் உங்கள் உரையை 1-20-க்கு ஆரம்பித்தீர்கள், இப்போது நேரம் 1-57 ஆகிவிட்டது. சீக்கிரம் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்பட்டிருக்கிறது என்று எல்லோரும் விவரம் புரியாமல் ஒரு குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டிற்கு நான் பதில் சொல்லவேண்டும். நீங்கள் மட்டுமல்ல, தி.மு.க.-வினர்கூடச் சொல்கிறார்கள். அவர்களே கொள்முதல் செய்துவிட்டு, குறை சொல்கிறார்கள். தனியார் துறைகளிடமிருந்து, அதாவது நான்கு நிறுவனங்களிடமிருந்து கூடுதல் விலைக்கு மின் உற்பத்தி கொள்முதல் செய்யப்படுகிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இந்த நான்கு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். (குறுக்கீடு) சொல்கிறேன், கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடு) என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** தி.மு.க. ஆட்சியில் கொள்முதல் ஒப்பந்தம் போடப்பட்டது. அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருபது ரூபாய்க்குக்கூட மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். சராசரியாக யூனிட் ஒன்றிற்கு ரூ. 15.22 காசு அளவிற்கு மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் போட்ட நிறுவனத்திலிருந்து அவர்கள் கொள்முதல் செய்த அளவைவிட, சரி பாதி அளவிற்குத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மின்சாரம் வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்று, ரூபாய் 12.50 காசுதான் அடக்க விலை என்று சொன்னால், அதிலே 11 ரூபாய் மத்திய அரசினுடைய நிறுவனங்களுக்கு மூலப்பொருள்களுக்காகச்



2015 மார்ச் 27] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சென்று விடுகிறது. மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றபோது, எந்த எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறாமோ, அதன் அடிப்படையில்தான் விலையும் அமையும். அந்தவகையில் குறைந்த விலையில் மின்சாரம் அத்தனையும் கொள்முதல் செய்யப்படுகிறது. மின்சாரம் எங்கேயும் கிடைக்கவில்லை என்று சொன்னால், இறுதியாகத்தான், தேவைப்பட்டால், சில மணி நேரங்களில், சில நாட்களில், அவசரத் தேவைகளுக்காக இந்தக் கொள்முதல் செய்யப்படுகிறது. அதில் யூனிட் ஒன்றிற்கு, ஏறத்தாழ ரூ. 1.50 என்ற அளவிற்குத்தான் தனியார் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்குக் கிடைக்கும். மற்ற தொகை எல்லாம் மத்திய அரசினுடைய B.P.C.L., மற்றும் Indian Oil Corporation ஆகிய நிறுவனங்களுக்குத்தான் செல்கிறது. அதில் ஒன்று அரசு நிறுவனமாகும். இதிலே கொள்முதல் செய்தாலும் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 1.50 காசு அவர்களுக்கு கிடைக்கும், கொள்முதல் செய்யவில்லையென்றாலும் ரூபாய் 1.50 காசு அவர்களுக்குக் கொடுத்தாகவேண்டும். அதனை Fixed rate என்று சொல்வார்கள். ஆகவே, கொள்முதல் செய்தாலும் அந்தத் தனியார் நிறுவனத்திற்கு இலாபமோ, நஷ்டமோ இல்லை. கொள்முதல் செய்யாமல் இருந்தாலும் அந்த நிறுவனத்திற்கு நஷ்டம் இல்லை.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, மீதி இருக்கின்ற தொகை மத்திய அரசு நிறுவனத்திற்குத்தான் செல்கிறது. இந்த ஒப்பந்தம் அத்தனையும் போட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அந்த ஆட்சியிலே போடப்பட்ட ஒப்பந்தம், அவர்கள் வாங்கியதில் பாதியைத் தான் வாங்கியிருக்கின்றோம். சில நேரங்களில் 20 ரூபாய்க்குக்கூட வாங்கியிருக்கிறார்கள். 110 மில்லியன் யூனிட்டை 20 ரூபாய்க்கு 2,200 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கின்றார்கள். ஆக, கூடுதல் விலைக்கு வாங்கியதெல்லாம் அவர்கள், ஒப்பந்தம் போட்டதெல்லாம் அவர்கள், இப்போது குற்றச்சாட்டு சொல்வதும் அவர்கள்தான். அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள்கூட சொல்கிறீர்கள். உங்களுக்கு விவரம் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. கடந்த முறை நிருவாகத்தில் இருந்தவர்களே அதைச்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

செய்துவிட்டு, அவர்களே இப்போது குறை சொல்கிறார்கள். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் எல்லா குறைந்த விலை மின்சாரமும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுவிட்ட பின்பு, அதற்குப் பிறகும் பற்றாக்குறை ஏற்பட்டால்தான் அதிக விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. இது எல்லா மாநில அரசுகளும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிற ஒரு நடைமுறைதான். ஆனாலுங்கூட, இப்போது நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில், உற்பத்தி பெருமளவு கூடியிருப்பதால் இந்தக் கொள்முதல் தேவை ஏற்பட்டால்தான் செய்யப்படுகிறது. கடந்த 4 மாதங்களாக இதைச் செய்யவில்லை. எப்போதாவது தேவைப்பட்டால் மட்டும்தான் அதன் அத்தியாவசியத்தைக் கருதி, அப்படி கொள்முதல் செய்யப்படுகிறதே தவிர, அது யாருக்கும், தனியார் இலாபமடைவதற்கோ அல்லது பலனடைவதற்கோ இல்லை என்பதை தாங்கள் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சில விவரங்களைச் சொல்கிறேன். இன்னும் எந்தெந்தத் தேதியில் அவர்கள் ஒப்பந்தம் போட்டார்கள்; என்னென்ன விலைக்கு ஒப்பந்தம் போட்டார்கள் என்ற விவரங்களை எல்லாம் அக்கட்சி உறுப்பினர் பேசுகிறபோது சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில மக்களுடைய உரிமைகளை மீட்டெடுப்பதற்காக 37 தொகுதிகளில் நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்கள் வாக்களித்து உங்களை வெற்றி பெறச் செய்தார்கள். இப்போது இந்த Budget-ஐ பார்த்தீர்களென்றால், மக்களுக்கான ஏகப்பட்ட திட்டங்களுடைய நிதிகள் வெட்டப்படுகின்றன என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எப்படி இந்த நெருக்கடியைச் சமாளிக்கப்போகிறோம் என்ற கவலையும் உங்களுக்கு இருக்கிறதா என்றால், உங்களுக்கு இருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, அந்தச் சபையில் நடப்பதை எல்லாம் நீங்கள் பேசவேண்டாம். (குறுக்கீடு) இல்லை, அந்தச் சபையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 மார்ச் 27] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

நடப்பவற்றையெல்லாம் நீங்கள் பேசவேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உரையை முடியுங்கள். அந்த சபையை எல்லாம் நீங்கள் இழுக்க வேண்டாம்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய உயிரைப் பறிப்பதுபோன்று நில மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்குகிறது மத்திய அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** அதைப்போய் அ.இ.அ.தி.மு.க. அரசாங்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** உரையை முடித்து விடுகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சம்பந்தமில்லாமல் பேசினால், அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு பொருள் குறித்து பேசுங்கள். நீங்கள் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து நீங்கள் இங்கே பேச வேண்டாம்.

**செல்வி கே. பாலபாரதி:** நான் அது குறித்து இங்கே பேசவில்லை. ஆனால் விவசாயிகளுடைய உயிரைப் பறிப்பதைப்போன்று நில மசோதா கொண்டு வரப்பட்டு, மத்திய அரசினால் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நீங்கள் எப்படி ஆதரவு கொடுத்தீர்கள்? திண்டுக்கல்லில் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் தொகுதிப் பிரச்சினை இருந்தால் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? (குறுக்கீடு) அரை மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** திண்டுக்கல் காமராஜர் நீர்த்தேக்கம் அருகில் இருக்கக்கூடிய தனியார் தண்ணீர் நிறுவனத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். அந்த தனியார் நிறுவனத்தினுடைய நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஆற்று நீரைப் பாதுகாப்பதற்கும் நீங்கள் முன்வரவேண்டும். மதுரை வைகை அணையிலிருந்து இப்போது *4* நாட்களுக்கு ஒரு முறைதான் மதுரைக்கு தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும். சென்னையில் கடல் நீர் குடிநீராக ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கும் தண்ணீர் பிரச்சினை துவங்கியிருக்கிறது. ஆகவே, வரக்கூடிய கோடைக்காலம் வறட்சி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் நிறையப் பேசிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். கொஞ்சம் இருங்கள்.

பிற்பகல் *2-05*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் திட்டத்தைப் பற்றியும், வறட்சியைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி, மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு தனிக் கவனம் எடுத்து குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்துக்கொண்டிருக்கின்றது. சிறப்பான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட கடந்த





நான்கு ஆண்டுகளில் மட்டும் ரூ.*7,428* கோடியில் *1,604* திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், திண்டுக்கல் மாநகராட்சியினைப்பற்றி சொன்னார்கள். அந்த மாநகராட்சிக்குக்கூட *18-2-2015*-ல் ரூ.*70.50* கோடி ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு இணையத்தின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டு அந்தத் திட்டம் துவக்கப்பட இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் அருமை அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், பேசுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களால் பச்சைத் தமிழன் பன்னீர்செல்வம் என்று பாராட்டப்பட்ட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் வாழ்த்துகளைச் சொல்லி, இந்த நேரத்தில் எனது உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

> "முறைப்படச் சூழ்ந்தும் முடிவுஇலவே செய்வர்
> திறப்பாடு இலாஅ தவர்".

என்று வள்ளுவர் சொல்கிறார். வள்ளுவர் சொன்னதைப்போல் அப்படிப்பட்ட ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். *2011* தேர்தல் அறிக்கையில் பக்கம்-*2*-ல் நீங்கள் அறிவித்தபோது தமிழ்நாடு ஒரு இலட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைகுனிவிலிருந்து மீட்டு ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்தோடு வாழவும் புதிய திட்டம் தீட்டப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் *2001-2006* வரை ஆட்சியில் இருந்தபோது ரூ.*56,094* கோடி கடன் வைத்துவிட்டுப் போனீர்கள். அதற்குப்பின்னர் *5* ஆண்டுகாலம் தலைவர் கலைஞர் ஆட்சி நடைபெற்றபோது ரூ.*45,251* கோடி நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காக அரசு கடன்

பெற்றது. அப்படித்தான் நாங்களும் கடன் பெற்றோம். ஓர் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சிக்காக கடன் பெறுவது ஒன்றும் தவறு அல்ல. ஆனால், இந்த இரண்டையும் சேர்த்து, அதாவது நீங்கள் பெற்ற ரூ.56,094 கோடியையும் அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் வளர்ச்சிக்காக நாங்கள் வாங்கிய ரூ.45,251 கோடியையும் கூட்டி தேர்தல் அறிக்கையில் நீங்கள் குறிப்பிட்டபோது "ரூ.1 இலட்சம் கோடி கடன் இருக்கின்றது. ஆக, கடன் சுமையில் இந்த மாநிலத்தை தலைகுனியவைத்துவிட்டார்கள். நாங்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்தோடு வாழவும் புதிய திட்டத்தைத் தீட்டுவோம்" என்று தேர்தல் அறிக்கைப் பக்கம் 8-ல் நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். நிதி அமைச்சர் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு முதலமைச்சர், அவர்களிடத்தில் நான் கேட்க விரும்புவது இன்றைக்கு ரூ.2,11,481 கோடி கடன் சுமையை இந்த நாட்டிற்கு வைத்திருக்கிறீர்களே, தமிழ் மக்களை தலைநிமிர வைக்கின்ற புதிய திட்டமா இந்தத் திட்டம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக வாங்கப்படுகின்ற கடன் முழுவதுமே மூலதனச் செலவுகளுக்கு மட்டுமே செலவழிக்கப்படுகின்றன. இதுதான் இந்த நிதிநிலை அறிக்கையினுடைய சாராம்சம். இதை நீங்கள் கவனமாக படித்துப் பார்க்கவேண்டும். அதுவும் வரையறைக்குள் தான் வாங்கப்பட்டிருக்கிறது. மொத்த உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதத்திற்குள் கடன் இருக்கவேண்டும் என்று, இந்திய அளவில், இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதியிலிருந்து குறைவாக 19 சதவிகிதம்தான் நாம் இந்தக் கடனை வாங்கியிருக்கின்றோம். அது 25 சதவிகிதம் என்ற நிலையில் இருந்தாலும், 19 சதவிகித அளவுக்கு மட்டுமே வாங்கியிருக்கின்றோம். மூலதனச் செலவுகளுக்கு மட்டும்தான் இந்தக் கடன் தொகை செலவழிக்கப்படுகின்றது என்பதுதான் இதில் இருக்கின்ற உட்கூறு. கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடன் மற்றும் செலவழித்த மூலதனச் செலவின் விகிதாச்சாரத்தையும், நாங்கள் 2011-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு கடந்த 4



ஆண்டுகளில் வாங்கப்பட்ட கடன் மற்றும் செலவழிக்கப்பட்ட மூலதனச் செலவின் விகிதாச்சார அளவினையும் பார்த்தாலே, முழுக்க முழுக்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டுதான் கடன் வாங்கப்பட்டிருப்பது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு வாங்கப்பட்ட கடன் முழுவதும் மூலதனச் செலவிற்காக செலவழிக்கப்படுவதால், அதனால் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சி, அதன் மூலமாக கிடைக்கப்பெறுகின்ற வரி வருவாய் மூலமாக, வரி வருவாயினுடைய பற்றாக்குறையையும் நீக்குகின்ற ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறியீடுகளிலிருந்து limitation குறித்து நான் சொல்லவில்லை. ஓர் அரசாங்கம் வளர்ச்சிக்காகத்தான் கடன் வாங்குகிறது. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். எங்கள் ஆட்சியில்கூட நாங்கள் வாங்கவில்லை என்று சொல்லவில்லை. எங்கள் ஆட்சியிலே 45,251 கோடி ரூபாய் கடன் வாங்கினோம் என்றுதான் சொன்னேன். ஆனால் நீங்கள் தேர்தல் அறிக்கையிலே இப்படியொரு தவறான 'தலைகுனிய' என்ற வார்த்தையை போட்டிருக்கிறீர்கள். ஆக, 2,11,481 கோடி ரூபாய் என்கின்றபோது தமிழ்நாட்டிற்கு தலைகுனிவு இல்லையா என்ற கேள்வியைத்தான் கேட்க விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கை பக்கம் 69; (குறுக்கீடுகள்) உங்கள் நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. நான் தவறாகச் சொல்லவில்லை. நான் unparliamentary word-ஐ பயன்படுத்தவில்லை. நிதிநிலை அறிக்கை பக்கம் 69, மாநில அரசின் வரி வருவாய், வணிக வரிகள், முத்திரைத் தாள், பத்திரப் பதிவு, வாகன வரி, ஆயத்தீர்வை ஆகியவற்றின்மூலம் வருகின்றது என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதை நான் சென்றமுறை நிதிநிலை அறிக்கையிலே பேசியபோது இதே மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களிடத்திலே சொன்னேன். வணிக வரியின் மூலமாக, முத்திரைத்தாள் மூலமாக, பத்திரப் பதிவு மூலமாக வருவாய் வருகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள், வருவதற்கு மிகக் குறைவான வாய்ப்புதான் இருக்கிறது. காரணம் மின்சாரப் பற்றாக்குறையின் காரணத்தால் உற்பத்தி குறைகிறது. உற்பத்தி உயர்ந்தால்தான் உங்களுக்கு விற்பனை வரி வருவாய் வரும். நிலத்தினுடைய மதிப்பீடு கூடியிருக்கின்ற காரணத்தால், ஒரு கிராமத்திலே சார் பதிவாளர் அலுவலகத்திலே 100 பேர் பதிவு செய்தார்கள் என்று சொன்னால், இப்போது அந்த எண்ணிக்கை குறைகிறது என்று நான் குறிப்பிட்டேன். அப்போது வணிக வரித் துறை அமைச்சர் பொறுப்பு வகித்த மாண்புமிகு திரு. ரமணா அவர்களே எழுந்து பதில் சொன்னார்கள். நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். கட்டாயம் எங்களுக்கு எதிர்பார்த்தவாறு வரும் என்று அவர்களே குறிப்பிட்டார்கள். ஆக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடுகின்றபோது தொடர்ந்து இரண்டு ஆண்டுகாலமாக நாம் எதிர்பார்க்கின்ற வரி வருவாய் வரவில்லை என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அதோடுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிடுகின்றபோது பெட்ரோலிய பொருள்களுடைய விலை மாற்றத்தால் 100 கோடி ரூபாய் வருவாய் நமக்குக் குறைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மன்னிக்கவும். ஆயிரம் கோடி ரூபாய் குறையும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 3 மாதத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய். அதுவும் தொடர்ந்து 2015-2016-லே 2,146 கோடி ரூபாய் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 3 மாதத்திற்கே ஆயிரம் கோடி ரூபாய் குறைகிறது என்று சொன்னால், இந்த ஆண்டிலே நாம் கணக்கிட்டு பார்க்கின்றபோது, இதே நிலைமை நீடித்தால் 5,000 கோடி ரூபாய் அளவிற்குக் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி 5,000 கோடி ரூபாய் குறைகின்றபோது பற்றாக்குறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனக்கணக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசக்கூடாது. இந்த மார்ச் மாதம் வரைக்கும் பெட்ரோலிய பொருள்களுடைய விலை குறைப்பின் காரணமாக ஏற்பட்ட வரி வருவாய் இழப்பு, எக்சைஸ் மூலமாக ஆயிரம் கோடி ரூபாய் என்று தோராயமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இனி வருகின்ற ஓராண்டு காலத்திற்கு 2,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வரி வருவாய் குறைவு ஏற்படும் என்றுதான் கணக்கிடப்பட்டிருக்கிறதேயொழிய, நீங்கள் ஏதோ 3 மாதக் கணக்கிலே ஆயிரம் கோடி ரூபாய், 12 மாதக் கணக்கிலே 5,000 கோடி ரூபாய் என்று மனக்கணக்கு போடக்கூடாது. அந்தந்த வருட முடிவில், அந்தந்த நிதியாண்டு முடிவில் எவ்வளவு என்று துல்லியமாக கணக்கெடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும்கூட ஒரு அனுமானமாகத்தான் சொல்கிறேன். சரியென்றுகூட சொல்லவில்லை. இப்படி ஆயிரம் கோடி ரூபாய் குறைந்திருக்கிறதே, 5,000 கோடி ரூபாய் குறைய வாய்ப்பு இருக்கிறதே, அப்படி பார்க்கின்றபோது இடையிலே நீங்கள் மக்கள்மீது வரியைச் சுமத்துவீர்கள் என்கின்ற பயம் இருக்கிறது. அதை நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தமட்டில் எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், மக்களுடைய சமூக நலத் திட்டங்களுக்குப் போதிய நிதி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் தொடர்ந்து ஐந்தாம் முறையாக வரி உயர்த்தப்படாத நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகையும் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2015 மார்ச் 27

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவில் பல பணிகள் அறிவிக்கப்பட்டன. வடபழனியிலே ஆற்காடு சாலை மேம்பாலம், பல்லாவரம் மேம்பாலம், கீழ்கட்டளை மேம்பாலம், போரூர் மேம்பாலம் இப்படி பல பாலங்கள் அறிவிக்கப்பட்டன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இறுதி செய்யப்படுகிற நிலையிலே இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அறிவித்த உடனேயே பணிகளை எடுக்கமுடியாது. ஏற்கெனவே திரு. பீம்ராவ் அவர்கள் அவருடைய தொகுதியில் போரூர் மேம்பாலம் குறித்து அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, தி.மு.க. ஆட்சியிலே, இங்கே பேசியதுபோல அறிவித்த உடனே பாலப் பணிகளை மேற்கொள்ளவில்லை. அந்த நிலத்தைக் கையகப்படுத்தியதே கிடையாது. நிலத்தின் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலே பல ஆண்டு காலம் நிலுவையிலே இருந்தது. இப்போதுதான் வழக்கு முடிவுற்று ஒப்பந்தம் விடப்பட்டிருக்கின்றது. ஆகவே, அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் நிலத்தைக் கையகப்படுத்திய பிறகுதான் ஒப்பந்தம் விடப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து நாங்கள் சொல்கிற கருத்தைக் கேட்டுவிட்டு, பிறகு*



2015 மார்ச் 27] [திரு. எ.வ. வேலு]

*சொல்லுங்கள். நாங்கள் தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லையே! அதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதற்கான பணிகள் சுறுசுறுப்பாக நடைபெறும் என்று நினைக்கிறோம். முழுமையாகச் சொல்லவிடாமல் இருந்தால் நாங்கள் எப்படித்தான் சொல்வது?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குற்றச்சாட்டு சொல்கின்ற தோற்றத்தில்தான் பேசினீர்கள். அதனால்தான் அதற்குண்டான பதிலைச் சொன்னேன். அரசாங்கத்தினுடைய கடமை, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு இருக்கின்ற நிதியை வைத்து கடந்த காலத்திலே விடப்பட்டிருந்த பணிகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி நான் குறிப்பிட்ட சில பணிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்ல, தேசிய நெடுஞ்சாலைத் துறை (NHAI) எடுத்துக்கொண்ட திட்டம் நம்முடைய தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, நாகர்கோவில், விக்கிரவாண்டி, தஞ்சாவூர், என்னுடைய சொந்த ஊரான திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி, திண்டிவனம், மதுரவாயல்-துறைமுகம் வரையிலான சாலை ஆகிய இடங்களில் மத்திய அரசாங்கம் கிட்டத்தட்ட சுமார் 9,300 கோடி ரூபாய்க்குப் பணிகளை எடுத்திருக்கிறது; 1,037 கி.மீ. சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே, ஸ்டேட் சப்போர்ட் அக்ரிமெண்ட்மூலம் மாநில அரசாங்கம் போட்டுக்கொண்ட ஒப்பந்தப் பணிகள் வாயிலாக சாலைப் பணிகள், மேம்பாலம் கட்டுகிற பணிகள் தொடர்ந்து, மாநில அரசாங்கத்தினுடைய*

[திரு. எ.வ. வேலு] [2015 மார்ச் 27

பணிகள் மற்றும் மத்திய அரசாங்கத்தினுடைய பணிகள், இரண்டும் நடைபெற்றிருந்தால், அதற்கு வேண்டிய சிமென்ட், கம்பி, ஜல்லி, பெயிண்ட் மற்றும் மின் சாதனங்கள் இவையெல்லாம் விற்பனையாகி இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்புக் கூட்டு வரியின் மூலமாக வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆகவே, ஓராண்டுக் காலமாக இந்தப் பணிகளெல்லாம் நடைபெறாத காரணத்தினால், அரசாங்கத்திற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் பணம் வருவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொள்ளவேண்டிய பணிகளுக்கெல்லாம் மாநில அரசு பொறுப்பு அல்ல. மாநில அரசு மேற்கொண்டிருக்கின்ற பணிகள் வேறு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நிதி ஒதுக்கி, அவர்கள் செய்கின்ற சாலைப் பாராமரிப்புப் பணிகள் வேறு. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டுகின்றார்கள்.

அதாவது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை பலமுறை மாநில அரசு கேட்டுக்கொண்டிருந்தாலும்கூட, அதற்குத் தேவையான நிதியொதுக்கீடு செய்து அந்தச் சாலைப் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளவில்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தச் சாலைகளெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன என்று கருதி, அதற்குத் தேவையான நிதியை மாநில அரசின் மூலமாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்புப் பணிக்கு நிதியொதுக்கீடு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2015 மார்ச் 27] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இன்றைக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் புறவழிச் சாலைகள் அமைக்கும்போது பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நகரத்திற்குச் செல்லும் சாலைகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, அவற்றை நகர்ப்புற மாநில நெடுஞ்சாலையாக மாற்றி மீண்டும் கையகப்படுத்தி உடனடியாகப் பராமரிக்க வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இவ்வகையில் 81.27 கி.மீ. நீளம் உள்ள 11 கைவிடப்பட்ட சாலைப் பணிகள் 82.33 கோடி ரூபாயில் மாநில அரசுமூலம் செப்பனிடப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் கைவிடப்பட்ட சாலைகளுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குத் தேவையான நிதியொதுக்கீடு செய்து, பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 2-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு விடுபட்ட பணிகளை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. நான் ஏற்கெனவே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல்-துறைமுகம் மேல்மட்டச் சாலை மாநில அரசின் தடை காரணமாகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அதுகுறித்து நான் விளக்கம் கேட்க ஆசைப்படுகிறேன்.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு பொருளைப்பற்றி விவாதிப்பது மரபல்ல. ஆகவே, இதில் முழுமையாக விளக்கம் சொல்ல முடியாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேச ஆரம்பிக்கவே இல்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) சரி என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதுகுறித்து நான் விளக்கம் பெற விரும்புகிறேன். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால், மதுரவாயல்-துறைமுகம் மேல்மட்டச் சாலை பிரச்சினை பற்றிப் பேசக்கூடாது என்று ஒரு விளக்கத்தினைத் தந்தார்கள். நீதிமன்றத்திலே என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்? என்ன direction வழங்கியிருக்கிறார்கள்? (குறுக்கீடு) இல்லை, வழக்கு முடிவுற்று, அதற்கு மாநில அரசு தடையாக இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லி, உடனடியாக அந்தப் பணியை நிறைவேற்றிட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதுதான் நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே, அதுகுறித்து விளக்கம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த வழக்கு நீதிமன்றத்திலே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், அந்த ஒப்பந்தம் எடுத்தவர்களுக்கும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் இடையே இருக்கின்ற பிரச்சினை காரணத்தால் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, இதைப்பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை முடிப்பது? இன்னும் பேசவேயில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசவேயில்லை என்று சொன்னால் எப்படி? நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற ஒரு கருத்தையும் சொல்லி, அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, ஆதாரம் வைத்துத்தான் பேசுகிறீர்களா? திரு. வேலு, என்னிடம் ஆதாரத்தைக் காட்ட வேண்டுமல்லவா? ஆதாரம் இல்லாமல் நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கே, குறுக்கே அப்படி பேசக்கூடாது.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L.O.C. கொடுத்திருக்கிறீர்களா, இல்லையா. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஐந்தாண்டு கால ஆட்சியிலே அவர்களால் விடப்பட்ட ஒப்பந்தத்தினுடைய தொகை குறைவு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எவ்வளவு விடப்பட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இதுவரைக்கும் 39 ஆயிரத்து, 246 கிலோ மீட்டர் சாலையைச் சீர் செய்வதற்காக டெண்டர் விடப்பட்டு இருக்கின்றன. அதற்காக 13 ஆயிரத்து 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் L.O.C. வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். L.O.C. ஒவ்வொரு முறையும் கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வேலை முழுமையாக நிறைவு பெற்ற பிறகுதான், அதற்குண்டான தொகை வழங்க முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் நீங்களாகப் பேசாதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையை முடியுங்கள். சபையை நடத்துவதற்குக் கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசினால் நான் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் என்ன செய்யமுடியும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேசுங்கள். எனக்கு நேரம்தான் முக்கியம். மணி 2-30 ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறைகூட நான் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர்



2015 மார்ச் 27] [திரு. எ.வ. வேலு]

அவர்களிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்தேன். 2012 ஆம் ஆண்டு, அதாவது இரண்டு வருடங்களுக்குள் 155 நகராட்சிகள், மாநகராட்சிகள் கழிவைக் கொண்டு ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மக்களின் வீடுகளுக்கு சூரிய ஒளிமூலம் தடையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். 2013, 2014 மற்றும் 2015 ஆகிய மூன்று ஆண்டுகளிலே தலா ஆயிரம், ஆயிரம் ஆக மூவாயிரம் மெகா வாட் மின்சாரம் சூரிய ஒளிமூலமாக கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சராக இருந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள்.

பிற்பகல் 2-25

மேலும், மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும்போது, ஒரு கேள்விக்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே குறிப்பிட்டார்கள். பொதுவாக, வல்லூர், மேட்டூர், வடசென்னை மின் நிலையங்கள் குறித்து தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. நான் ஆரம்பித்திலேயே சொன்னேன்—அது ஒரு குறிப்பு, அதைச் சொன்னால்தான் உங்களால் பதில் சொல்ல முடியும். ஏற்கெனவே, நீங்கள் ஐந்தாண்டுகள் ஆட்சியில் இருந்தபோது, உற்பத்திக்காக நீங்கள் செலவிட்ட பணம் ரூபாய் 780 கோடி. நாங்கள் ஐந்தாண்டுகள் ஆட்சியில் இருந்தபோது 11 ஆயிரத்து 28 கோடி ரூபாய் உற்பத்திக்காக நிதி ஒதுக்கி செலவு செய்யப்பட்டது. நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அதற்கு வேண்டிய உபகரணங்களும் வாங்கப்பட்டன. நாங்கள் இவற்றையெல்லாம் செய்தோம். அதன்மூலம் கிடைத்த மின்சாரத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, தற்போது நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம் என்கிறீர்கள், நீங்கள் என்ன செய்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இரண்டு, மூன்று கேள்விகள்தான் கேட்டிருக்கிறார். சூரிய ஒளி மின்சாரத்தைப் பற்றி இங்கே

குறிப்பிட்டீர்கள். ஆண்டுக்கு ஆயிரம் மெகா வாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சொன்னீர்கள்; மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன, என்ன ஆயிற்று என்று கேட்டார். நியாயமான கேள்வி. மாண்புமிகு அம்மா அவர்கள், 2012-ல் சூரிய ஒளி மின்சக்தி கொள்கைப் பிரகடனம் ஒன்றை அறிவித்தார்கள். அந்தக் கொள்கையை எதிர்த்து சில தொழிலதிபர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதால், அந்த ஷரத்தே செல்லாது என்று நீதிமன்றம் அறிவித்துவிட்டது. அதாவது, உயரழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள் தங்கள் சொந்தத் தேவையில் முதல் ஆண்டில் மூன்று சதவிகிதமும் அடுத்த ஆண்டு மூன்று சதவிகிதமும், ஆக 6 சதவிகிதம் சூரிய ஒளி மின்சக்தியைப் பயன்படுத்த வேண்டுமென்று ஓர் ஆணையை நமது அரசு பிறப்பித்தது. ஆனால், அந்தக் கொள்கையை எதிர்த்து சிலர் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றமும் அதை இரத்து செய்துவிட்டது. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற கால இடைவெளி காரணத்தினால்தான், சூரிய ஒளி மின்சக்திக் கொள்கையை அமல்படுத்த முடியவில்லை. ஒரு கொள்கையை அறிவித்துவிட்டால், சொன்னதை செய்தே தீர வேண்டுமென்ற நோக்கமுடைய மாண்புமிகு அம்மா அவர்கள், அதில் என்ன தடை வந்தாலும், அதை மீண்டும் செய்தே தீர வேண்டுமென்ற வைராக்கியத்தோடும், பிடிவாதத்தோடும் இருந்ததால், நீதிமன்றம் அதைத் தடைசெய்துவிட்டதற்குப் பின்பும், அதற்கு மாற்று வழி ஒன்றைக் கண்டுபிடித்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைத்தின் ஒப்புதல் பெற்று, சூரிய ஒளி மின்சக்தியை உற்பத்தி செய்பவர்கள் ஒரு யூனிட் ஏழு ரூபாய் ஒரு பைசா என்கிற அளவிலே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். சமீபத்தில்தான் அந்த ஆணை கிடைத்தது. அதனடிப்படையிலே, ஏற்கெனவே 119.6 மெகா வாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வாரம் வரை ஏழு ரூபாய் ஒரு பைசா என்ற அளவில் 154 மெகா வாட் அளவிற்கு சூரிய ஒளி மின்சார கொள்முதல் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அநேகமாக, இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் ஆயிரம் மெகா வாட் அளவிற்கு சூரிய ஒளி மின்சக்திக் கொள்கையின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள்





இறுதி செய்யப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றம் தடை செய்ததால் இவ்வளவு காலதாமதம் ஆகிவிட்டதே தவிர, தற்போது உடனடியாக இந்தப் பணிகளைத் துவக்கி, இந்த ஆண்டு முடிவதற்குள் நிச்சயமாக ஆயிரம் மெகா வாட் அளவிற்கு தனியார் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற சூரிய ஒளி மின்சாரத்தை இந்த அரசு பெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, சொன்னது எதையும் செய்யாமல் விடவில்லை.

சென்ற ஆட்சிக் காலத்தில் மேட்டூரில் அவர்கள் செய்ததாக சொன்னார்கள்; இன்னும்கூட, வல்லூரில் ஆயிரம் மெகா வாட் அளவிற்கு நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்றார்கள்; அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 12-7-2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) போடப்பட்டு தொடங்கப்பட்டதுதான். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடர்ந்த பணியை அவர்கள் ஆட்சிக் காலத்தில் 20 சதவிகிதம் அல்லது 25 சதவிகிதம்கூட முடிக்கவில்லை. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்புதான் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடாது. அதேபோல், தூத்துக்குடியில் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 19-6-2003 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் போடப்பட்டது.

பிற்பகல் 2-30

அதேபோல், வடசென்னை 600 மெகா வாட் மின் உற்பத்திக்காக 12-12-2005 அன்றைக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அந்தத் திட்டத்தை நீங்கள் தொடர்ந்தீர்கள். ஆனாலும் ஐந்தாண்டுக் காலத்தில் நீங்கள் அந்தத் திட்டத்தை முடிக்கவில்லை. 20-25 சதவிகித பணிகளை முடித்து

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 மார்ச் 27

வைத்திருந்தீர்கள். மீண்டும் இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான், அம்மா தொடங்கிய அந்தத் திட்டத்தினுடைய 75 சதவிகிதப் பணிகளை மீண்டும் அம்மா அவர்களே முடித்து வைத்து உற்பத்தியைக் கொடுத்திருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒப்பந்தம் போடவில்லை என்று சொல்லவில்லை. நாங்கள் அந்தத் திட்டத்திற்கு ரூ.11,078 கோடியை செலவு செய்து பணியாற்றியதால்தான், இப்போது மின்சாரம் வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் முதலில் ஒன்றும் அதில் செய்யவில்லை. அதற்கு நாங்கள் இவ்வளவு செலவு செய்தோம், அதனால் மின்சாரம் வருகிறது என்றுதான் நாங்கள் சொல்கிறோம். வெறும் ஒப்பந்தம் போட்டுவிட்டுப் போனால் போதுமா? இடத்தை வாங்க வேண்டாமா, மெஷின் வாங்க வேண்டாமா? மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டாமா? அதற்கு வேண்டிய பணத்தையெல்லாம் நாங்கள்தான் ஒதுக்கினோம். அதனால்தான் இப்போது மின்சாரம் வருகின்றது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் புது சப்ஜெட்டிற்குப் போகாதீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர்கள் ஐந்தாண்டுக் காலத்தில் முடித்திருக்கலாமே! நாட்டில் மின்சாரப் பிரச்சினையே வராமல் இருந்திருக்குமே! அவர்கள்



2015 மார்ச் 27] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அவர்களுடைய ஐந்தாண்டுக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கிய திட்டப் பணிகளை ஏன் 25 சதவிகித அளவிற்கு மட்டும்தான் முடித்திருந்தார்கள் என்பதைத்தான் நான் இங்கே அழுத்தந்திருத்தமாகக் கேட்க விரும்புகின்றேன். ஓர் ஆட்சிக்கு ஐந்தாண்டுக் காலம், அந்தத் திட்டத்தை முடிப்பதற்குப் போதுமான காலம்தான். ஏன் அவர்கள் முடிக்கவில்லை என்பதுதான் கேள்வி. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதை அவரால் சொல்ல முடியும். நீங்கள் சொல்ல விரும்பவில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் வேறு ஒரு உறுப்பினரைக் கூப்பிட வேண்டியிருக்கும்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒதுக்கிய நேரம் முழுவதையும் அமைச்சர் அவர்களே எடுத்துக்கொள்கின்றார்கள். நாங்கள் பேசினோம், நாங்கள் பேசினோம் என்கின்றீர்கள். நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், 1980-லிருந்து என்னுடன் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் கேள்வி கேட்கின்றீர்கள். அமைச்சர் பதில் சொல்கின்றார். அதற்கு நான் என்ன செய்யமுடியும்? (குறுக்கீடு) இல்லை, நான் உங்களுக்கு அரை மணி நேரத்திற்குமேல் கொடுத்திருக்கின்றேன். இதற்குமேல் நான் நேரம் தர முடியாது. நீங்கள். உட்காருங்கள், (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு பெரும்பகுதி விவசாயப் பெருமக்களால் ஆனது. விவசாயிகள் இருக்கின்ற பெரும்பான்மையான பகுதிகளிலே, பெரும்பாலும் நெல், கரும்பு, தென்னை போன்றவற்றைத்தான் அதிகமாகப் பயிரிடுகிறோம். வறட்சியின் காரணமாக இன்றைக்கு தென்னை மரங்கள் பல இடங்களிலே பட்டுப்போய் இருக்கின்றன. அரசாங்கம் அதை கணக்கில்

[திரு. எ.வ. வேலு] [2015 மார்ச் 27

எடுத்துக்கொண்டு, அதற்கு ஈடாக அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று தென்னை விவசாயிகள் கேட்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் உட்காருங்கள்; அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள். (குறுக்கீடு) அவர் முப்பது நிமிடங்கள் பேசிவிட்டார். உரையை முடிக்கமாட்டேன் என்கின்றார். முப்பது நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் உரையை முடிக்கவில்லையென்றால் நான் என்ன செய்வது? சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக அதிகமாக நெல் உற்பத்தி செய்கின்ற மாவட்டம் எங்கள் திருவண்ணாமலை மாவட்டம். அங்கு அனைவரும் விவசாயிகளே. அங்கு வேறு தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. ஆனால், இந்த அரசாங்கம் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,000/- வழங்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தார்கள். அதற்கான அறிவிப்பு இல்லை. அதேபோன்று கரும்பைப் பொறுத்தவரையில், நாங்கள் ஆட்சியில் இருந்தபோதும், நீங்கள் ஆட்சியில் இருக்கின்றபோதும் அதனுடைய உற்பத்திச் செலவு 141 சதவிகிதம் கூடியிருக்கின்றது. உரம் விலை எல்லாம் ஏறிவிட்டது. அதனால் கரும்புக்கு ரூ.3,500/- எதிர்பார்க்கின்றார்கள். உற்பத்திச் செலவு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் விவசாயிகள்தான். நானும் விவசாயிதான். அவரும் விவசாயிதான். இல்லையென்று சொல்லவில்லை. இவர் உணவு அமைச்சராகவும் இருந்தவர். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம். மத்திய அரசாங்கத்தில் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் அங்கம்



2015 மார்ச் 27] [திரு. இரா. காமராஜ்]

வகித்தவர்கள் அவர்கள். அன்றைக்கு அவர்கள் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கச் சொல்லி கேட்டார்களா? ஏதாவது விவசாயிகளுக்குச் செய்தார்களா என்றால் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொடர்ந்து விவசாயிகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இந்தியத் திருநாட்டிலேயே வறட்சிக்கு நிவாரணம் கொடுத்த ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் இல்லாத அளவிற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வறட்சிக்கு நிவாரணம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. குற்றச்சாட்டாக நான் ஒன்றும் சொல்லவில்லையே! விவசாயிகள் அங்கும் இருக்கின்றார்கள், இங்கும் இருக்கின்றார்கள். 5 வருடங்களுக்கு முன்னால் D.A.P. உரத்தினுடைய விலை 239 ரூபாயாக இருந்தது. இன்றைக்கு அதனுடைய விலை 800 ரூபாயாக ஏறிவிட்டது. 347 ரூபாயாக இருந்த காம்ப்ளக்ஸ் உரம் இன்றைக்கு. . .

பிற்பகல் 2-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, நீங்கள் நினைத்ததெல்லாம், முழுவதையும் பேசவேண்டுமென்று நினைத்தால் முடியாது. (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 27

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு விவரம் சொல்லியிருக்கிறார். நானும் அதற்கு ஒரு பதிலைச் சொல்லிவிடுகிறேன். அதுதான், வேறு ஒன்றுமில்லை. அதாவது, D.A.P. உரம் ரூ.800/-க்கு விற்றது, இப்போது ஒரு டன் ரூ.24,200/-க்கு விற்கிறது என்று சொன்னார். உண்மையிலேயே வாஸ்தவம்தான். உண்மையிலேயே எல்லா விவசாயிகளும், (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான், நானும் சொல்ல வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் சொன்னதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். இங்கு இருக்கிற எல்லோருமே விவசாயிகள். நாம் எல்லோருமே விவசாயிகள். நாம் எல்லோரும் நினைப்பது, உண்மையிலேயே இந்த உரம் விலை இவ்வளவு கூடியிருப்பதற்கு எல்லோருமே வருத்தப்படுகிறோம். ஏறத்தாழ 72,000 பேர் இறந்திருக்கிறார்கள். இதெல்லாம் கண்கூடாகக் கண்டது. ஆனால், இதற்கு யார் காரணம்? அவர்களுடைய முன்னாள் முதலமைச்சருடைய தவப் புத்திரன் திரு. மு.க. அழகிரி, அன்றைக்கு மத்தியிலே இரசாயனத் துறை அமைச்சராக இருந்தார். (குறுக்கீடு) இருங்கள். கேபினெட் அமைச்சராக இருந்தார். (குறுக்கீடு) நான் சொல்வதை முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். கேபினெட் அமைச்சராக இருந்தபோதுதான் விவசாயத் துறைக்கு கொடுக்கக்கூடிய உர மானியத்தை அன்றைக்கு மத்திய அரசிலே, அன்றைக்கு மத்திய சர்க்கார் இரத்து செய்தது. விவசாயிகளுக்குக் கொடுத்த உர மானியத்தை இரத்து செய்யும்போது, அந்தக் கோப்பிலே கையெழுத்து போட்டது யார்? வேறு யாரும் இல்லை. திரு. மு.க. அழகிரிதான். அவர்கள் அதைப்பற்றி இங்கு பேசலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) என்னப்பா நியாயம்? மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்களா? மக்கள் மறந்துவிடுவார்கள், மறந்துவிடுவார்கள் என்று நினைத்து நீங்கள் எதையாவது செய்கிறீர்கள். மக்கள் மிகவும் விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். அதனால் தயவுசெய்து, இல்லாததைப் பேசவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையாவது சொல்லிவிட்டு, எதையாவது வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோலியம் பொருட்களுக்கு மைய அரசால் தொடர்ச்சியாக பல தடவை விலை மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக, லிட்டருக்கு ரூ.13 வரை விலைக் குறைவு ஏற்பட்டது. அதனடிப்படையில், மாநிலத்தில் பெட்ரோலியத்துக்குண்டான வரி வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், அண்டை மாநிலங்கள் பெட்ரோலியத்துக்குண்டான மாநில வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசு, பெட்ரோலியத்துக்குண்டான வரியை உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ‘அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்’ என்பதைப்போன்று, அனுமானமாக, வரியை உயர்த்திவிடுவோம் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எ.வ. வேலு பேசுவது சரியில்லை என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் சேர்த்தேதான் நான் இங்கு பேசுகிறேன். நீங்களும் விவசாயிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விடமாட்டேன் என்கிறீர்களே. (குறுக்கீடு) திரு. வேலு, உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புது சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். (குறுக்கீடு) புது சப்ஜெக்ட்டிற்கு போகாதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசங்கர் இருங்கள், நீங்கள் recommendation பண்ணவேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு பேச ஆரம்பித்து 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவசங்கர், recommend பண்ணவேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் recommend பண்ணவேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது, கரும்புக்கு 3,500 ரூபாய் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். கடந்த காலத்தில், 2006 ஆம் ஆண்டு அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் 2,500 ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். இதே சட்டமன்றத்தில் கேள்வி கேட்டபோது அன்றையதினம், இங்கே இருக்கின்ற தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர், ரூ.2,500 என்பது ஐந்தாண்டு காலத்திற்கு நாங்கள் கொடுப்பதாகச் சொன்னோம். வந்தவுடனேயே கொடுப்பதாகச் சொல்லவில்லை என்று சொல்லி இருந்தார்கள். ஆக, ஐந்தாண்டுக் காலம் முழுமையாக இருந்தபோது 2,500 ரூபாய் கொடுக்கவே இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் 2,500 ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், இரண்டாண்டு காலத்திலே 2,650 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் கரும்பு விலையைப் பற்றிச் சொல்கின்றார்கள். 2005-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1,014/- கொடுத்தார்கள். 2006-2007-ல் இவர்கள் ஆட்சிக்கு வந்து, சேர்த்துக் கொடுத்த தொகை ஒரு டன்னுக்கு வெறும் 11 ரூபாய். 2007-2008 இல் அவர்கள் சேர்த்துக் கொடுத்த தொகை வெறும் 9 ரூபாய். நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது என்று சொன்னவுடன் 2008-2009 இல் 1,100 ரூபாய் கொடுத்தார்கள். நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது என்றவுடன்தான் 1,537 ரூபாய் கொடுத்தார்கள். அடுத்தது சட்டமன்றத் தேர்தல் வருகிறது என்றவுடன் 2,000 ரூபாய் கொடுத்தார்கள். கரும்பு விலையைப்பற்றிப் பேசுவதற்கும், விவசாயிகளைப்பற்றிப் பேசுவதற்கும் இவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) சொன்ன வாக்குறுதியை ஏதாவது ஓர் இடத்திலாவது நிறைவேற்றியிருக்கின்றார்களா? (குறுக்கீடு) ஒவ்வோர் ஆண்டும் 10 ரூபாய், 9 ரூபாய், 8 ரூபாய் மட்டும்தான் அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். கரும்பு விவசாயிகளைப் பற்றி இவ்வளவு அக்கறையாகப் பேசுபவர்கள், கடந்த காலத்தில் ஏன் இதைச் செய்யவில்லை?



2015 மார்ச் 27] [திரு. பி. தங்கமணி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எ.வ. வேலு, இல்லை. நிறைய நேரம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) உங்களுக்குக் கொடுப்பதற்கு, இதற்குமேல் நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் பேசுங்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக நேரம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) இப்பொழுது நேரம் இல்லை. நேரம் இப்பொழுதே 2-45 ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) இதற்கு மேல் நேரமில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அன்பை அகிலம் போடும் பட்டியலை அப்படியே சொல்கிறேன். அள்ளித் தரும் அட்சய பாத்திரமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி பகவனும் அம்மா! இயன்றதைச் செய்துதரும் ஈடில்லா தலைவியே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஈடிணையில்லா திட்டங்களைத் தீட்டுபவரே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உலக

சமாதானத்தின் முக்கிய அங்கமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஊருக்கு உழைத்து அன்பாய் நடப்பவரே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும், எதிலும் முன்னணியில் இருப்பவரே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும் உத்தமரே அம்மா! ஐயமில்லாமல் அனைத்து முடிவுகளும் எடுப்பவரே அம்மா! ஒன்று எங்கள் சாதியென்று மனிதர்களை அரவணைப்பவரே அம்மா! ஓயாமல் மக்களுக்காக உழைப்பவரே அம்மா! ஔடதம்போல் அனைவருக்கும் மருந்தாக இருப்பவரே அம்மா! அஃறிணையும் உயிர்களையும் அன்பாய் பார்ப்பவரே அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தான தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். 2015-2016 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தின்மீது உரையாற்ற வாய்ப்பு தந்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நானிலம் வாழ்த்தும் குணமே, மக்கள் எதிர்நோக்கும் நம்பிக்கை நட்சத்திரமே! நரியும், புலியும் நடுங்கி வணங்கும் சிம்மமே! நாளைய உலகம் வரும் உங்கள் வசமே! பாரதம் கண்ட பகுத்தறிவுப் போர்வாள்! கழகம் காக்கும் காவல் தெய்வம், தொண்டரின் ஒளிவிளக்கு, தமிழினத்தின் குலவிளக்கு, எங்கள் அம்மா! அம்மா! வீரத்தின் விளைநிலம் அம்மா! விவேகத்தின் விரிவாக்கம் அம்மா! வீரத்தின் மறுபெயரும் அம்மா! ஈடில்லா இமயமும் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை புத்தகம் பக்கம் 89 வரையிலும் இடம் பெற்றுள்ள செய்திகளைப் பட்டியலிட்டால் காலவெள்ளத்தால் அழியாத கல்வெட்டுகளாக தமிழர்களின் வாழ்வுக்கு கலங்கரை விளக்காக இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை உள்ளது. தாய்மை, வாய்மை, நேர்மை என்ற மூன்று தன்மைகளையும் முழு வடிவமாகக் கொண்டு இம்மாநிலத்தில் ஒரு மகத்தான மாற்றத்தை ஏற்படுத்திட முனைபவர் கருணை வள்ளல் நம் அம்மாதான்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆடு தந்தார்கள்; மாடு தந்தார்கள்; தாலிக்குத் தங்கம் தந்தார்கள்; படிக்கும் பிள்ளைகளுக்கு மடிக்கணினி தந்தார்கள்; இருக்க பசுமை வீடு தந்தார்கள்; கட்டிக்கொள்ள விலையில்லா சேலை தந்தார்கள்; சாப்பிட விலையில்லா அரிசி தந்தார்கள்; மிக்சி, கிரைண்டர் தந்தார்கள்; மின்விசிறி தந்தார்கள்; வட்டியில்லாக் கடன் தந்தார்கள்; முதியோர்களுக்கு 1,000 ரூபாய் தந்தார்கள்; காவலர்களுக்கு வீடுகள் தந்தார்கள்; புத்தகப் பை தந்தார்கள்; கணிதப் பெட்டி தந்தார்கள்; வண்ணப் பென்சில் தந்தார்கள்; நோட்டுப் புத்தகம் தந்தார்கள்; மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை தந்தார்கள்; பள்ளிச் சீருடை தந்தார்கள்; காலணி தந்தார்கள்; விரிவான காப்பீட்டுத் திட்டம் தந்தார்கள்; உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்தார்கள்; 2023 தொலைநோக்குத் திட்டம் தந்தார்கள்; பள்ளிகளிலே சான்றிதழ்கள் தந்தார்கள்; ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா தந்தார்கள்; 6,000 புதிய பேருந்துகள் தந்தார்கள்; விசைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைகள் தந்தார்கள்; பெண்களுக்கு சானிடரி நாப்கின்கள் தந்தார்கள்; பெண் குழந்தைகளுக்கு வைப்புத் தொகை தந்தார்கள்; கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை தந்தார்கள்; 'தாய்' திட்டம் தந்தார்கள்; தானே புயலுக்கு புயலின் வேகத்தை மிஞ்சும் அளவிற்கு நிவாரணம் தந்தார்கள்; குறைந்த விலையில் கேபிள் டி.வி. சேவையைத் தந்தார்கள்; தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார்கள்; வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டி அடித்தார்கள்; இத்தனையெல்லாம் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஆண்டவன் பல நூறு ஆண்டுகள் ஆயுள் தருவார்.

பிற்பகல் 2-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 ஆண்டுக்காலத்தில் ஓர் அரசு செய்ய வேண்டிய பணியை பதவியேற்ற நான்கே ஆண்டுகளில் செய்து முடித்து, மக்கள் மனம் குளிரும் மாட்சிமைமிக்க ஆட்சி தந்த எங்கள் அம்மாவே! பசியாய் இருப்பவனுக்கு மீன் பிடித்துத் தருவதைக் காட்டிலும் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்து, சீனப் பழமொழிக்கு ஏற்ப ஏழைகளின் வாழ்வில் ஒளி தந்த எங்கள் ஒளிவிளக்கே! தமிழக மக்களின் இதயத்தில்

[திரு. கார்த்திக் தொண்டைமான்][2015 மார்ச் 27

குடியிருக்கும் கோயிலே! தமிழகத்தைக் கயவர்களிடமிருந்து மீட்டெடுத்த தாயே! இன்று இளைஞர்களுடைய இதயமெல்லாம் லப்-டப், லப்-டப் என்று அடிப்பதில்லை, லேப்டாப், லேப்டாப் என்றே அடிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ரூ.650 கோடி வரிச் சலுகைகள், வரியில்லா பட்ஜெட், மின்சாரத் துறைக்கு 13,586 கோடி ரூபாய், காவல் துறைக்கு 5,568.81 கோடி ரூபாய், வேளாண்மைத் துறைக்கு 6,613.68 கோடி ரூபாய், பள்ளிக் கல்வித் துறைக்கு 20,936.50 கோடி ரூபாய், உயர் கல்வித் துறைக்கு 3,696.82 கோடி ரூபாய், சுகாதாரத் துறைக்கு 8,245.41 கோடி ரூபாய், சிறப்பு மக்கள் நலத் திட்டங்களுக்கு 3,100 கோடி ரூபாய்; இப்படி கல்வித் துறையில் புரட்சி, கலை இலக்கியத்தில் மறுமலர்ச்சி, சுகாதாரத் துறையில் ஏற்றம், வேளாண்மைத் துறையில் வித்தகம், உள்ளாட்சியில் நல்லாட்சி, அரசுப் பணியில் வேலைவாய்ப்பில் வெளிப்படை, நேர்மை, இப்படி நடக்கும் ஒரே ஆட்சி அகிலம் போற்றும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

கண் துஞ்சாது கடமையாற்றி, பசி நோக்காது பணி செய்து, தன்னை மெய்வருத்தி, பள்ளிப் பிள்ளைகளுக்கு போதும், போதும் என்கிற வகையில் திட்டங்களை அள்ளி அள்ளித் தந்த பாரதி கண்ட ஏழைகளின் பராசக்தியே!

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்"
"அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்கிற மகாகவி பாரதியின் வரிகளுக்கு உயிரோட்டமாக தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர் நலன் ஆகியவற்றை மனதில் கொண்டு தினம் தினம் புதுப் புது திட்டங்களை இத்துறைக்கு அள்ளிக் கொடுத்த எங்கள் அட்சயப் பாத்திரமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் கழகத்தை தவச் சாலையாக்கி, தேர்ந்த பக்குவத்தால், தன்னலமற்ற



2015 மார்ச் 27] [திரு. கார்த்திக் தொண்டைமான்]

தொண்டால் தமிழகத்தை ஏற்றம் பெறச் செய்த எங்கள் மாதரசியே! அறிவுப் பல்கலைக்கழகமே! இந்த எளிய தொண்டனுக்கும் வாய்ப்பு வழங்கியமைக்கு அகிலம் போற்றும் மாண்புமிகு அம்மாவின் பாதம் பணிந்து நன்றியைப் பதிவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கருத்துகளைக் கூற அனுமதி வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்தியில் ஆண்ட காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும், ஆண்டு கொண்டிருக்கிற பி.ஜே.பி. ஆட்சியாக இருந்தாலும், தமிழக மக்களை வஞ்சிக்கின்ற போக்கைதான் கையாளுகின்றன. இந்த ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், தேசிய சுகாதாரத் திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் உள்ளிட்ட மத்திய அரசால் செயல்படுத்தப்படும் 24 திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2014-2015 ஆம் ஆண்டைவிட 2015-2016 ஆம் நிதியாண்டில் 21,116 கோடி ரூபாய் அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் தமிழக அரசு சில இனங்களுக்கு வரி இல்லாமலும், சில இனங்களுக்கு 5% அளவுக்கு வரியைக் குறைத்தும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில் மனைகளில் பல்லாயிரம் குடும்பத்தினர் தலைமுறை, தலைமுறையாக சொந்தச் செலவில் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றனர். அடிமனை கோயிலுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில், ஆண்டு பகுதி செலுத்தி வந்தனர். இந்த வீடுகளுக்கு சந்தை விலை மதிப்பைக் கொண்டு சதுர அடிக்கு

[திரு. கே. உலகநாதன்] [2015 மார்ச் 27

வாடகை நிர்ணயிக்கப்பட்டு, தற்பொழுது இலட்சக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு வாடகை பாக்கியுள்ளது. தற்பொழுது இவர்களை கோயில் மனை ஆக்கிரமிப்பாளர்கள் என்று கருதி, கட்டிய வீட்டை இடித்து வெளியேற்றும் சூழ்நிலை உள்ளது. இதனைத் தடுத்து, கோயில் மனை குடியிருப்போரின் குடிமனை உரிமையைப் பாதுகாக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

மழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வறட்சியின் கடுமை அதிகரிக்கும். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை முன்கூட்டியே தடுப்பது குறித்து அரசு சிந்திக்கவேண்டும்.

மத்திய அரசு மக்களவையில் நிறைவேற்றியுள்ள நிலம் கையகப்படுத்தும் திருத்தச் சட்டம், *2015* விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் நலனுக்கு எதிரானது. இதுகுறித்து, வேளாண்மை வல்லுநர்கள், ஆய்வாளர்கள், விவசாயிகளின் மதிப்பு மிக்க தலைவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *2-50*

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வறட்சி குறித்துப் பேசினார்கள். கடந்த *2012* ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஒரு மாநிலத்தில் வறட்சிக்கு என்று நிவாரணம் கொடுத்தது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பல சிறப்புத் தொகுப்புத் திட்டங்களைக் கொடுத்தார்கள். மழை பெய்யவில்லை, காவேரியிலே குறித்த காலத்தில் தண்ணீர் வரவில்லை, இருந்த



2015 மார்ச் 27] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

போதிலும் சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டம் என்று கொடுத்து சமுதாய நாற்றாங்கால், உழவு இயந்திரத்திற்கு மானியம், உரத்திற்கு மானியம், இப்படி *2012* ஆம் ஆண்டு வறட்சியே தெரியாத அளவிற்கு காவேரி டெல்டா பகுதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காப்பாற்றினார்கள்.

*2013-2014*-ல் குறுவைப் பயிருக்கும் சிறப்புத் திட்டத்தைக் கொடுத்தார்கள். காலதாமதமாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது என்று குறுவைப் பயிருக்கும் சிறப்புத் திட்டத்தைக் கொடுத்தார்கள். அதன் விளைவாக சரித்திரச் சிறப்புவாய்ந்த *1,10,000* மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை தமிழ்நாடு பெற்றது. இப்போது *1,45,000* மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கை நோக்கியுள்ளது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது பசுமைப் புரட்சியில் இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற இலக்கை எய்திட, இன்றைக்கு விவசாயத் துறைக்கு, இந்த வருடம் கிட்டத்தட்ட *6,613* கோடி ரூபாய் நிதியொதுக்கி இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகநாதன், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் உள்ள வீடுகள் இடிக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள். அதுபோன்ற உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. கட்டப்பட்ட வீடுகள் இடிக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

[திரு. இரா. காமராஜ்] [2015 மார்ச் 27

அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இந்த ஆட்சியின் நோக்கம் கிடையாது. அதிலே வாடகைக்கு குடியிருப்பவர்கள் நீண்ட நாட்கள் வாடகை செலுத்தாமல் இருக்கிறார்கள். அந்த வாடகையை வசூலித்துத்தான் அந்தக் கோயில்களில் விளக்கேற்ற வேண்டும் என்ற நிலை இருக்கிறது. எனவே, எந்த நோக்கத்திற்காக அந்த நிலங்கள், கட்டடங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறவேண்டும். அதன் அடிப்படையில்தான் வாடகை வசூலிக்கப்படுகிறது. வாடகை வசூல் செய்வதில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவித்துள்ள கருத்துகளை அரசு பரிசீலிக்கவேண்டும். விவசாயிகளின் அனுமதியின்றி எந்தப் பகுதியிலும் நிலம் எடுப்பதை அரசு அனுமதிக்கக்கூடாது. கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் துவங்கப்பட்டது. கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தி மற்றும் அச்சுத் தாளை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் சுமார் 1,700 நிரந்தரத் தொழிலாளர்களும், சுமார் 1,600 ஒப்பந்தத் தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அங்கு பணிபுரியும் அனைத்து ஒப்பந்தத் தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில் ஊர்ப்புற நூலகர்களாக 2008 ஆம் ஆண்டு முதல் சுமார் 1,600 பேர் சிறப்பு கால முறை ஊதியம் என்ற அடிப்படையில் 5,000 ரூபாய் மாத ஊதியமாக குறைவான ஊதியம் பெற்று வருகிறார்கள். இவர்கள் எட்டு ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறார்கள். மருத்துவ விடுப்போ, மகப்பேறு விடுப்போ, ஈட்டிய விடுப்போ இவர்களுக்குக் கிடையாது. ஆகையால், அவர்களுக்கு மூன்றாம் நிலை நூலகர் பதவி உயர்வு வழங்கி, காலமுறை ஊதியம் வழங்கிடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27] [திரு. கே. உலகநாதன்]

வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் 2015-2016 ஆம் ஆண்டு பணிகளைத் தொடங்கிட ரூபாய் 200 கோடி ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கது. இப்பணிகளை உடன் தொடங்கி ஆறுகளைத் தூர் வாரவேண்டும். மேலும், ஆறுகளில் உள்ள மணல் திட்டுகளைச் சமன்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கோரையாற்றின் குறுக்கே பொன்னுக்குமுண்டான் ஆறு தலைப்பில் கதவணை கட்டவேண்டும். அரிச்சந்திரா ஆற்றின் குறுக்கே விக்கிரபாண்டியம், ஆலாத்தூர், ஆண்டான்குளம், பூசலாங்குடி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும் வகையில் பூசலாங்குடி பாசன வாய்க்கால் அருகே தடுப்பணை கட்ட வேண்டும்.

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எழிலூரில் புதிய ஏரியைத் அமைத்திடவேண்டும். மேட்டூர் முதல் காவேரி பாசன கடைமடைப் பகுதி வரை நிருவாக அதிகாரம் முழுவதும் தஞ்சை-காவேரி வடிநில வட்டார கண்காணிப்புப் பொறியாளர் வசம் கொண்டுவர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி டெல்டாவில் பொதுப் பணித் துறையின் உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை உடன் நிரப்பவேண்டும். காவேரி டெல்டாவில் தூர் வாருவதற்கு நிரந்தர அரசாணை வழங்கி ஜனவரி மாதமே தூர் வாரும் பணியினைத் தொடங்கிடவேண்டும்.

விவசாய விளைபொருட்களுக்கு உற்பத்திச் செலவினைக் கணக்கிட்டு 50 சதவிகிதம் உயர்த்தி விலை நிர்ணயம் செய்திட தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தவேண்டும். விவசாயத்திற்கும், உணவு உற்பத்திக்கும் மானியத்தை இரத்து செய்ய மத்திய அரசு நியமனம் செய்துள்ள பிமல் ஜலான் தலைமையிலான குழுவினை இரத்து செய்திட மத்திய அரசை வலியுறுத்துவதோடு தொடர்ந்து மானியத்தை உயர்த்தி வழங்கிடவேண்டும்.

2012-2013 ஆம் ஆண்டு தமிழக அரசு வழங்கிய கூட்டுறவுக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்திடவேண்டும். காவேரி

[திரு. கே. உலகநாதன்] [2015 மார்ச் 27

டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மாவட்டமாக அறிவித்திடவேண்டும். தமிழக அரசு வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-55*

தமிழகத்தில் தொழிலாளர் நலத் துறை மூலம் செயல்பட்டு வரும் பல்வேறு நல வாரியங்கள் செயல்படாமல் முடங்கிப்போய் உள்ளன. நலத் திட்டங்கள் கோரி, கேட்பு மனுக்கள் அனுப்பப்பட்டு பல மாதங்களானாலும், சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கு பணப் பயன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்த்து, வாரியங்கள் நல்ல நிலையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறைமூலம் செயல்படும் வாரியங்கள் முடங்கிப்போய் உள்ளன என்று கூறியதை மாண்புமிகு உறுப்பினர் தயவுகூர்ந்து திருத்திக்கொள்ளவேண்டும் என்று பணிந்து அவரை கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கட்டுமானத் தொழிலாளர்களுக்காக 230 கோடி ரூபாய் வழங்கியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிக நன்றாக அறிவார்கள் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்கு என்னுடைய பதில் கருத்தாக வைக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '2015-2016 ஆம் நிதியாண்டில், விவசாயிகளுக்கு 5,500 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்குவதை இலக்காகக் கொண்டு கூட்டுறவு அமைப்புகள் செயல்படும்; கடனை முறையாகத் திருப்பிச் செலுத்துவோருக்கு இக்கடன்கள்



2015 மார்ச் 27] [திரு. கே. உலகநாதன்]

வட்டியின்றி கிடைக்கும்' இதற்கான வட்டி மானியம் வழங்கிட வரவு-செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக, கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கினால்தான் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக இல்லாத விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில்தான் இந்தக் கடன்களைப் பெறுகிறார்கள். இவர்களுக்கும் இந்த வட்டிச் சலுகை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு நெல் கொள்முதல் குறைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியில், வட்டியில்லா பயிர்க் கடன் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சொல்ல விரும்புகிறேன். கடந்த மைனாரிட்டி கருணாநிதி ஆட்சியில், 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் 9,163.60 கோடி ரூபாயாகும். மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில், அதாவது கடந்த பிப்ரவரி மாதம் வரையில் 16,957.35 கோடி ரூபாய் அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த 4 ஆண்டுகளில் மட்டும், 7,793.75 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்காக கூடுதலாக கொடுத்திருக்கிறார்கள். இதன்மூலம், ஏறத்தாழ 36 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "வணிக வங்கிகளில் வட்டியில்லா பயிர்க் கடன் கொடுக்கிறார்கள்; அங்கு சென்று விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள்" என்று சொன்னார்கள். ஏதாவது ஒரு விவசாயி மஞ்சள் பையை தூக்கிக்கொண்டு போய்,

[திரு. செல்லூர் கா. ராஜு] [2015 மார்ச் 27

எந்த ஒரு வங்கியிலோ பயிர்க் கடன் வாங்கியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், நான் என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு விவசாயிக்குக்கூட இதுவரை கொடுத்ததாக சரித்திரம் இல்லை. சென்னையில் பயிர்க் கடன் குறித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். சென்னையில் இருக்கக்கூடிய வங்கிகளின் மூலமாகத்தான் அதிகமான பயிர்க் கடன் கொடுத்திருக்கிறார்களாம். ஏனென்றால், சென்னையைச் சுற்றி நிறைய விவசாயிகள் விவசாயம் செய்கிறார்கள், பாருங்கள். அது தவறு என்று தெரிய வருகிறது. வங்கிகளில் மோசடியாக பயிர்க் கடன் என்று எழுதுகிறார்கள். காரணம், நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டதைப்போல, ஏற்கெனவே, நிதியமைச்சராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள், அன்றைக்கு கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் வட்டி சதவிகிதம் குறைவு கிடையாது. தனியார் வங்கிகளும், அதைப் பயன்படுத்தி பயிர்க் கடன் கொடுக்கலாம் என்று சொன்னதன் அடிப்படையில், விவசாயிகள் எவருக்கும் கடன் கொடுக்காமல், தனியார் வங்கிகள் பலருக்கும் பயிர்க் கடனைக் கொடுத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எந்தவொரு விவசாயியும், கூட்டுறவு வங்கியில் கடன் கொடுக்கவில்லை என்று சொல்லி, தனியார் வங்கிக்குச் சென்று யாரும் கடன் வாங்குவது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் விலையை மத்திய அரசாங்கம்தான் நிர்ணயம் செய்கின்றது. எனினும், தமிழக அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 70 ரூபாயும், மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 50 ரூபாயும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு, குவிண்டாலுக்கு ரூ.200/- என ஊக்கத் தொகை வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



2015 மார்ச் 27] [திரு. கே. உலகநாதன்]

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்றவற்றால் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. அரசின் பல்வேறு முயற்சிகளால் மேலும் உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுக்கப்பட்டன. டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் கொசுக்கள் மூலமாகத்தான் ஏற்படுகின்றன. எனவே, கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சிகளுக்கு துப்புரவுப் பணியாளர்களை அதிகமாக நியமனம் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3-00*

தமிழ்நாட்டிலுள்ள பெரிய வருவாய் வட்டங்களை நிருவாக வசதிக்காகப் பிரிப்பதும், பழைய வருவாய் வட்டங்களில் பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டுவதும் பாராட்டுக்குரியது. அந்த வகையில் திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக்கொண்டு புதிய வருவாய் வட்டம் துவங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விருதுநகர் வத்திராயிருப்பை தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய தாலுகா அறிவிக்கவேண்டும். அதேபோல், திருத்துறைப்பூண்டி தொகுதியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி 2011 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அதில் 1,702 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். கடந்த 20-3-2015 அன்று, முதல் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது. இந்நிலையில் மாணவ மாணவிகள் நலன் கருதி உடனடியாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இது வரையில் இல்லாத அளவிற்கு கிராமப்புறங்களிலும், தொலைதூர இடங்களிலுள்ள அனைத்து மாணவர்களும் பள்ளிக் கல்வி முடித்தவுடனேயே உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 53 கல்லூரிகள் தொடங்கியிருக்கிறார்கள்.

*தொடங்கப்பட்ட 53 கல்லூரிகளில் இதுவரையில் இல்லாத அளவிற்கு 47 கல்லூரிகளுக்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, பல கல்லூரிகளில் தற்போது கட்டடப் பணிகள் முடிவுற்று, பல கல்லூரிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கக்கூடிய வனத் துறையின் அனுமதி பெற்று, அதற்கும் இடங்களைத் தேர்வு செய்து தற்போது அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த வேளையில் மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற திருத்துறைப்பூண்டி பகுதியில் கல்லூரி கட்டுவதற்குண்டான இடங்கள் கிடைக்கப் பெறவில்லை. அது கோயில் நிலமாக இருக்கிறது. நன்னிலம் தொகுதியிலும், திருத்துறைப்பூண்டி தொகுதியிலும் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்கள் இருப்பதால், அந்த நிலம் பெறுவதற்கு தற்போது 400 சதவிகித மதிப்புத்தொகை செலுத்த வேண்டும். கோயில் நிருவாகத்திற்கு மேற்படி தொகையை செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதுவரையில் தொடங்கப்பட்ட 53 கல்லூரிகளில் 47 கல்லூரிகளுக்கு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதம் இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தற்போது கட்டடப் பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டங்கள் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். தமிழக அரசியல் வரலாற்றிலே இதுவரை இல்லாதவகையிலே, கடந்த 4 ஆண்டுகளிலே, 49 புதிய வட்டங்களையும் அதற்கான நிதி ஆதாரங்களையும் ஒதுக்கிக் கொடுத்த ஒரே தலைவியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். பொதுவாக புதிய வட்டங்களை உருவாக்க வேண்டுமானால், மக்கள்தொகையும், பரப்பளவும், வருவாய் கிராமங்களும், அதில்*





*வரையறுக்கப்பட்ட வரைமுறைகளைப் பூர்த்தி செய்யுமானால், அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய கோரிக்கை நிறைவுசெய்யப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, விவசாயிகளை பாதிக்கின்ற மத்திய அரசின் நில எடுப்பு சட்டத் திருத்த மசோதாவைப்பற்றி இங்கே பேசினார்கள். விவசாயிகளைப் பாதிக்கின்ற எந்த ஒரு சட்டத்தையும் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் நடைபெறுகின்ற இந்த அரசும் அதேபோல் மத்தியில் இருக்கக்கூடிய நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிக்கமாட்டார்கள். விவசாயிகளைப் பாதிக்கிற எந்த ஒரு சட்டத்தையும் அம்மா அவர்களின் அரசும் ஆதரிக்காது. அதேபோல், மத்திய அரசின் நில எடுப்பு சட்டத் திருத்த மசோதாவை பொது நலனுக்காகவே ஆதரித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்தின். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, ஊராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக 2013 ஆம் ஆண்டிலே 16,622 துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சிறப்பான முறையில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 12,524 ஊராட்சிகளில் சிறப்பான முறையில் துப்புரவுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2015 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும்வகையில், திருவாரூர் சாலையையும் நாகை சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கப்பட்டு கிடப்பில் இருக்கின்றன. அதனை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகருக்கு 2.46 கி.மீ. நீளமுள்ள புறவழிச்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 2.978 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பினை புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி இறுதிசெய்தபின் நிலம் கையகப்படுத்தப்பட்டு, புறவழிச்சாலை அமைக்கும் பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பரவாக்கோட்டை சாலையை இணைக்கும்வகையில், கோட்டூர் ஒன்றியம் கிழுவத்தூர் கோரையாற்றில் புதிய பாலம் கட்டித் தரவேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. அந்தப் பாலம் கட்டித் தந்தால், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அதைக் கட்டித் தர வேண்டுமாய் கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.



2015 மார்ச் 27]

பிற்பகல் 3-05

***திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேடையிலே தவழ்கின்ற மெல்லிய பூந்தமிழை மேதினிக்கு அளித்தவர்! நான்காம் தமிழ் என்னும் நல்லதோர் அவதாரத்தை நற்றமிழுக்கே படைத்தவர்! இந்திய நாட்டின் இரும்புப் பெண்மணி என்ற அவதாரம் எடுத்தவர்; தங்கம் தருகின்ற எங்கள் தங்கத் தாரகை என்று தரணி போற்றும் தாய்க் குலத்தின் காவலரே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சேற்றில் பாடுபட்டு செந்நெல் விளைகின்ற ஏற்றமிகு விவசாயிகளின் வாழ்வில் நல்ல மாற்றத்தை உருவாக்க காவேரியை மீட்டு வந்த கம்பீரப் போராளியே! தன்னை வருத்தித் தமிழகம் வாழ, அயராது உழைக்கின்ற எங்கள் அன்னையாம் அம்மா!

வீரத்தில் ஜான்சி ராணி, விவேகத்தில் வாழும் வேலுநாச்சியார்! உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும், அச்சம் என்னும் ஒரு சொல்லை ஆயுள் எல்லாம் அறியா தாயே! கிள்ளிப் பூ தூரிகையால் அல்லி தேன் மையெடுத்து புள்ளி வைத்து வரைந்திட்ட பொன்னுருவ ஓவியம்போல், நாவாரப் பாடுகின்ற தேவாரமாய், தீதுரையைத் துடைக்க வந்த திவ்யப் பிரபந்தமே! வெட்டவெளி வானத்தில் விடிவெள்ளி வந்ததுபோல் வெள்ளமெனும் காட்டினிலே முல்லைமலர் பூத்ததுபோல், ஆறாம் முறையாக கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய எங்கள் அம்மா! அரசியல் வானில், அச்சம் அறியா சிம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல்களின் பிரம்மா! இன்னலோ, இடுக்கணோ, எந்நிலை எய்தினும் பொன் நகையின்றி புன்னகை பூக்கும் போயஸ் தோட்டத்தின் பொன் மாதா! எங்கள் புரட்சித் தாயின் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லை என்போர் இருக்கையிலே, இருப்பவர்கள் இல்லை என்பார்' என்ற புரட்சித் தலைவரின் வரிகளுக்கு ஆதாரமாக வறுமையை ஒழித்திட புதுவாழ்வுத் திட்டம்; தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம்; தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம்; தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களுக்கு ரூ.862.4 கோடியை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்து 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கிய மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையில் அமையப்பெற்றதுதான் இந்த

வறுமை ஒழிப்புத் திட்டம். இந்திய நாட்டின் வளர்ச்சி விவசாயத்தையே சார்ந்து அமைந்துள்ளது என்ற மகாத்மா காந்தியடிகளின் வாக்கிற்கேற்ப விவசாயத் துறையை மேம்படுத்த ரூ.6,613.68 கோடியை ஒதுக்கீடு செய்து 'வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும்' என்ற ஔவைப் பாட்டியின் கோட்பாட்டிற்கு ஏற்ற நிதிநிலை அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய பொற்கால ஆட்சியில் தமிழகத்தை மின்மிகு மாநிலமாக மாற்றியது, அதற்குப்பிறகு வந்த ஆட்சியின் கையாலாகாதவர்களால் இருண்ட மாநிலமாக மாறியது. மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதல்வராக அவதாரம் எடுத்து, அரிய பல திட்டங்கள்மூலம் 2014 ஜூன் வரை 13,775 மெகாவாட் மின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்தார் எங்கள் 'பொன்னியின் செல்வி' புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தில், இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பெற்று விளங்குகிறது. இப்படிப்பட்ட மின்சாரத் துறை சிறக்க ரூ.7,336 கோடியை ஒதுக்கீடு செய்து, மின்சாரத் துறையை மிளிர வைக்கின்ற நிதிநிலை அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகாயம் மழை மட்டும்தான் கொடுக்கும். அம்மா, உங்கள் இரு கரங்கள் அனைத்தையும் கொடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) கருத்தரிப்பவரோ 10 குழந்தைகளுக்குத் தாயாகிறார். கருணை தரித்தவரோ 10 கோடி தமிழர்களுக்கும் தாயாகிறார் என பூவுலகிற்கு புரிய வைத்து, இந்திய தேசத்தில் கல்வியில் நம் தமிழ்நாடு முதலிடம் பெற நல்லிணக்கம், நற்பண்பு, நற்கல்வி, நலிந்தோர் பள்ளிக் கல்வியையும், உயர் கல்வியையும் பெற்றிட பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.20,936.5 கோடியும், உயர் கல்வித் துறைக்கு ரூ.3,696.82 கோடியும் ஒதுக்கீடு செய்து, கல்லாதோர் இல்லாது ஆக்கும் நிதிநிலை அறிக்கை. இதற்கு ஈடில்லை, எதிரிகளின் வெற்றறிக்கை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிலில் உருவான விட்டில் பூச்சிகளை தொட்டில் குழந்தையென தூக்கி வளர்த்து, மட்டில்லா மகிழ்ச்சியினை மழலைக்குத் தந்திட்ட மாதரசி எங்கள் மகராசி அம்மா! துடிக்கின்ற பெண்கள் வடிக்கின்ற விழிநீரை துடைக்கின்ற தாய்மையின் வடிவமாய் அவதரித்து சமூக நலத் துறைக்கு ரூ.3,889.17 கோடியை ஒதுக்கீடு செய்து சமூக நலத் துறையை சரிநிகர் துறையாக மாற்றிய நிதிநிலை அறிக்கை.

பிற்பகல் 3-10

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்னும் வள்ளலார் வருத்தத்தைத் தீர்த்து, 'உண்ணும் போதொரு கைப்பிடி' என்னும் திருமூலர் மந்திரத்தைத் தெளிவோடு ஏற்று,

'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்'

என்னும் பொதுமறைப் புலவரின் குறளுக்கு இலக்கணமாகி, "வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்று பாடிய பாட்டுக்கொரு புலவனின் பரிந்துரைக்கேற்ப, அன்னை ஆளும் தமிழ் மண்ணில், பசிப் பிணிக்கு இடமில்லை என்பதை விலையில்லா அரிசிமூலம் முறியடித்து, உணவுத் துறைக்கு மானியமாக 5,300 கோடி ரூபாயை ஒதுக்கிய அன்னலட்சுமி, நம் அம்மா!

வெள்ளி நிலாவை விளக்காய் நினைத்து, தண்ணீரில் உழைக்கும் மீனவ மக்களின் கண்ணீரைத் துடைக்க, மீன்பிடி உபகரணங்கள்மீது விதிக்கப்பட்ட மதிப்பு கூட்டு வரி முற்றிலுமாக நீக்கப்பட்டதோடு, மீனவ மகளிருக்கு நிவாரணத் தொகை ரூபாய் 1,800/-லிருந்து, ரூபாய் 2,700/- ஆக உயர்த்தப்பட்டு, மீனளத் துறைக்கு 728.68 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்த நிதிநிலை அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லில் வடித்த தெய்வமும், கருணை புரிய நாளாகுமோ என்று பொன்னில்

வார்த்த உருவமாய், தமிழ் பூமிக்கு வந்த நம் தமிழர் குல சாமி அம்மா! ஆலயத்திலும் அடியார்க்கு அன்னமிட்டு மகிழ்கின்ற அன்புருவ அன்னை! இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூபாய் 100.06 கோடியை ஒதுக்கீடு செய்து, வைணவமும், ஜைனமும் ஆட்சி பெற, பௌத்தமும் சமணமும் அழியா நிலை பெற, ஆன்மிகம் தழைத்தோங்க, ஆண்டவனுக்கு அரும்பணி ஆற்றும் அற்புதத் திட்டம்.

உடல் பிணி போக்குவதற்கு உன்னதத் திட்டம் பல; ஏழைகளுக்கு இலவசமாய் உயர் சிகிச்சை, மலிவு விலை மருந்தகங்கள், சின்னக் குழந்தைகளுக்குச் சிறப்பான சிகிச்சை பல; உயிர் காக்க உயர் சிகிச்சைக்குக் காப்பீட்டுத் திட்டம் போன்ற மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் 8,245.41 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. ஒதுக்கப்பட்ட இந்த தொகை அரசின் ஒட்டுமொத்த பட்ஜெட்டில் 4.52 சதவிகிதமாக அமைந்து சிறப்பிக்கிறது. மேலும், ஏழைப் பெண்கள் பிரசவித்தவுடன், தன் குழந்தைக்கு அண்ணன் சட்டை வாங்கி வருவானா? அக்கா சோப்பு வாங்கி வருவாளா என்று ஏங்கித் தவித்த பெண்களுக்கு, 'தாயாகவும், தாய் மாமனாகவும் நான் இருக்கின்றேன்' என்று எவரும் சிந்திக்காத வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) சொக்காய், சோப்போடும், கிலுகிலுப்பை, சுண்டிலேகியம் உள்ளடங்கிய அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகத்தை வழங்கிய கருணையின் கடலே! பெண்ணினத்தின் பெருமையே! தாயுருவத் தெய்வமே, அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.4,616.02 கோடி பற்றாக்குறை இருந்தும், ரூபாய் 650 கோடிக்கு வரிச் சலுகைகள் தந்த சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறுவது வேடிக்கை அளிக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னக் காவடியாய் அரசியலில் புகுந்து, ஆசியக் கண்டத்தைக் கடந்து, உலகப் பணக்காரராகி திருடியதை தீர்த்தமாக்க சர்க்காரியா ஊழல் காலத்தில் மாமியாரிடமும், ஸ்பெக்ட்ரம் ஊழல் காலத்தில் மருமகளிடமும் சரணடைந்து,



நாட்டின் வளங்களை நாசமாக்கிய நயவஞ்சகர்கள், இந்த நாடு போற்றும் நல்ல நிதிநிலை அறிக்கையைக் குறை கூறுவதா? இந்த நிதிநிலை அறிக்கையில் மக்களின் நலன் கருதி எவ்வளவோ சிறப்பு அம்சங்கள் இருந்தும், ஒருவருக்கோ படித்தவுடனே தலை சுற்றுகிறது என்கிறார். படித்தவுடன் தலை சுற்றுகிறதா அல்லது எதற்கு அவருக்குத் தலை சுற்றுகிறது என்று தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்தோர் அனைவரும் சிறந்தோர் ஆவதில்லை! சிறந்தோர் அனைவரும் மக்கள் மனதில் நிறைந்தோர் ஆவதில்லை! நிறைந்தோர் எல்லோரும் மனித நெஞ்சினிலே நிரந்தரம் ஆவதில்லை! பிறந்து, சிறந்து, நிறைந்து, செந்தமிழர் இல்லம் எல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் எங்கள் அம்மா அவர்களுக்கு ஒருபோதும் எங்கும், எவரும் நிகராவதில்லை; நிகராகப் போவதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புலர்கின்ற பொழுதும், வளர்கின்ற நாட்களும் எங்கள் புரட்சித் தாயின் வருகைக்குப் பிறகுதான் எங்களுக்கு. கோடி மலர்கள் குவிந்திருப்பதைப்போல, எங்கள் அம்மா அவர்கள் இந்த அவையில் அமர்ந்திருக்கும் அழகைக் காணும் பொன்னாள் மிக விரைவில் வரும், வரும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மக்களின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களைப் பணிந்து நன்றியைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-3-2015) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2015 மார்ச் 27

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*22. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*23. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*24. 2013-2014 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*25. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*26. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*9. 2015-2016 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு-செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை. (58 புத்தகங்கள்)*

*10. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.*

*11. 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.*



2015 மார்ச் 27]

*12. 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி–I.*

*13. 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி–II.*

*14. 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*15. 2015-2016 ஆம் ஆண்டுத் திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு. (2015-2016 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு)*

*16. 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-II திட்டங்கள்).*

*17. 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.*

*18. 2015-2016 ஆம் ஆண்டு செலவுக்கான மானிக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு.*

*19. 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

****